



# நாதசுர ஓசையிலே

## 1

### நாதசுர ஓசை!

நாதசுரத்தின் கம்பீரமும் இனிமையும் கலந்த ஓசை அந்தத் தெருவை நிறைத்தது.

ஒளி விளக்குகளின் வண்ணங்களும் பன்னீர், சந்தனத்தின் மணமும் அந்த வீட்டை நிறைத்தன.

நெஞ்சில் நிறைந்த பெண் சொந்தமாகப் போகிறாள் என்ற மகிழ்ச்சி மாப்பிள்ளையின் மனதை நிறைத்தது.

விஜயாவின் புகைப்படத்தைப் பார்த்த போதே சந்தானம்—அதுதான் மாப்பிள்ளை—மயங்கி விட்டான். லேசாகக் குனிந்த முகம். அதில் விழிகள் மட்டும் சற்று மேல் நோக்கிப் பார்ப்பது போல் அந்தப் படம் எடுக்கப்பட்டு இருந்தது. கறுத்து அடர்ந்த நீண்ட இமைகள், மீன் விழிகள். அந்த விரிந்த விழிகளுக்குள் தான் சங்கமம் ஆகிவிட்டாற் போல சந்தானம் உணர்ந்தான். அவளை நேரில் பார்த்து விழி மனம் துடித்தது. அவளுடைய தந்தையின் சம்மதம் கிடைத்தது. அவள் அறியாமலே அவளது கல்லூரியிலேயே அவளை நேரில் பார்த்தான்.

சற்று அதிகமான மெலிவுதான். ஆயினும் வெகு ஒழுங்கான உடலமைப்பு. யாரோ ஒரு தோழியுடன் பேசிக்கொண்டு சென்றவள், தன் போக்கில் இவனையும் பார்த்துவிட்டுப்

போனாள். அவ்வளவுதான். அந்த விழிகளும், கமாட்டன்ன இதழ்களும் விரித்த வலையில் இருந்து சந்தானம் மீளவே இல்லை.

திடீரென்று திருமணப்பேச்சு தயங்கி நின்றது. வினயா வின் தாயாருக்கு உடல் நலம் மிகவும் மோசம் என்றார்கள். சந்தானத்தின் தாயாருக்கும் அவ்வளவு விருப்பம் இல்லை. நோயாளியின் மகளைக் கட்டினால் மகனுக்கு மாப்பிள்ளைச் சோறு வகையாகக் கிடைக்காதாம். இங்கும் அங்குமாகத் தயங்கவே சந்தானம் பதறிப்போனான். தாயிடம் வாதாடிச் சம்மதிக்க வைத்தான். சமயத்தில் வினயாவின் அன்னையும் அவனுக்கு உதவியாக வந்தார். மகளது திருமணத்தை விரை வில் காணவேண்டும் என்று உறுதியாகக் கூறிவிட்டாராம்.

எல்லாம் சேர்ந்து பத்து நாட்களுக்குள் திருமணம் நிச்சய மாக இன்று நடந்தேறிக்கொண்டும் இருந்தது.

''பெண்ணை அழைத்து வாருங்கள்'' என்றார், புரோகிதர்.

நண்பர்களின் கேலியைப் பொருட்படுத்தாமல் சந்தானம் ஆவலுடன் நோக்கினான். அவனுடைய விழிகளுக்கு விருந் தாக வினயா வந்து கொண்டு இருந்தாள். மாலைகளின் கனத்தைத் தாங்க இயலாது துவளும் கொடியுடல், செவ்வாழை மலர் போலத் தரையை நோக்கிய முகம், பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை, அவனுக்கு.

அய்யர் கூறிய மந்திரங்கள் எங்கோ வெகு தூரத்தில் ஒலித்தன. பட்டாடையின் உரசலோடு அவள் தன் அருகில் இருப்பதே சந்தானத்துக்கு மயக்கம் தந்தது. மங்கல நாணைக் கையில் கொடுத்த பிறகு தான் தன் நினைவு வந்தது. நாண் பூட்டும் சாக்கில் அவள் முகத்தை ஒரு முறை நன்கு பார்த்துவிட முயன்றான். அவளோ முன்னிலும் அதிகமாகக் குனிந்து விட்டாள். தலையில் இருந்த நெற்றிச் சுட்டியும் சூரிய—சந்திர பிறைகளும்தான் பார்வைக்குத் தெரிந்தன. ''பெரிய வெட்கம்! சற்று நிமிர்ந்தால் என்னவாம்?'' என்று சந்தானம் மனத்தோடு அலுத்துக்கொண்டான்.

வினயாவின் சிறிய தந்தையும், சிற்றன்னையும் அவளைத் [illegible]ார்த்து அளித்தனர். அதுவும் அவன் மனதில் பதிய



வில்லை. தன் வலிய கையுள் அடங்கிய வினயாவின் பஞ்சன்ன கரத்தின் மென்மையை சுவைத்துக் கொண்டு இருந்தான்.

மாலைகளின் மறைவில் அவள் கையில் லேசாகக் குறு குறுப்பு மூட்டினான். அவள் அசைந்தால் அல்லவோ? 'மண்ணாந்தை' என்று மனதிற்குள் செல்லமாக வைதான்.

திருமணச் சடங்குகள் எல்லாம் இனிதே நிறைவேறின. மணமக்கள் பெரியோரைப் பணிந்து எழுந்தனர்.

படுக்கையில் இருந்த வினயாவின் தாயைப் பணிய உள்ளே சென்றனர்.

கட்டிலில் அவரைக் கண்டதும் சந்தானம் திடுக்கிட்டுப் போனான். இவ்வளவு மோசமாகவா இருக்கிறது அவரது உடல் நிலை! சட்டென மனைவியின் புறம் திரும்பினான். அவள் முகம் வேறு பக்கம் திரும்பியிருந்தது. கண்ணீர் விடுகிறாளோ?

அவளை அணைத்து ஆறுதல் கூற மனம் துடித்தது. அதற்கு இது இடமும் அல்ல நேரமும் அல்ல. மனதை அடக்கிக் கொண்டான். தாயையும் மகளையும் தனியே விட்டு அகன்றான்.

சற்று நேரத்தில் அவனுடைய தங்கை அனுராதா அவனிடம் வந்து சேர்ந்தாள். வினாயாவை விட இரண்டு வயது சின்னவளாக இருப்பாள். சேலையை சுற்றிக் கொண்டு பெரிய மனுசி போல வளைய வந்தாள். அவளைப் பார்த்ததும் சந்தானத்துக்குச் சிரிப்பு வந்தது. ''என்ன அனுக்குட்டி, அண்ணி எப்படி இருக்கிறாள்?'' என்று புன்னகையோடு அவளிடம் கேட்டான்.

அனுராதா புருவத்தைச் சுருக்கி உதட்டைப்பிதுக்கினாள். ''அண்ணி ஆனாலும் நிரம்பவும் ஒல்லி அண்ணா'' என்றாள். கூடவே, சற்றுச் சதைப்பிடிப்பான தன் உடலைக் குறையோடு குனிந்து பார்த்தாள்.

சந்தானம் உரக்கச் சிரித்து விட்டான். ''நீ தினமும் காலையில் பன்னிரண்டு இட்லியை நெய்யில் குழைத்துச்

சாப்பிடுவதை நிறுத்திவிடு, பிறகு அண்ணி போல மெலிந்து விடலாம்,'' என்று கேலி செய்தான்.

''ஆங்....போங்கண்ணா. நான் ஒன்றும் பன்னிரண்டு இட்டிலி தின்னவில்லை. எட்டோடு சரி'' என்று அனு விளக்கம் சொன்னாள். பிறகு ஏதோ நினைத்தவளாக, ''அண்ணி சிரிக்கவே இல்லை, அண்ணா. சரியான உம்மணா மூஞ்சி.'' என்று அவன் காதோடு குறை கூறினாள்.

''அதுவா அனும்மா, அவள் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை, அல்லவா? அதனால் அவளுக்கு மனதில் வருத்தமாக இருந்திருக்கும்.'' என்று சந்தானம் சமாதானம் சொன்னான். அதற்குள் வினயாவுக்காக வக்காலத்து வாங்குகிறோமே என்று தோன்றியது. 'வினி இனி என் இனியாள் அல்லவா?' என்று எண்ணிக் கொண்டான்.

அவனது பதிலைக் கேட்டுக் கொண்டே வினயாவின் தந்தை அங்கே வந்தார். ''நீங்கள் சொல்லுவது சரிதான் மாப்பிள்ளை. அம்மாவுக்கு உடம்பு இப்படி ஆனதில் வினயா தான் மிகவும் சோர்ந்து போனாள்,'' என்று வருத்தத்துடன் கூறினார்.

''எல்லாம் சரியாகிவிடும் மாமா'' என்று தேறுதலாகச் சொன்னான் சந்தானம்.

''ஆமாம், மாப்பிள்ளை'' என்றார், அவர், முகம் மலர. ''நேற்று டாக்டர் கூடச் சொன்னார். முன்னைக்கு இப்போது பவானி—அதுதான் வினயாவின் அம்மாவுக்கு உடம்பு தேறியிருக்கிறதாம். என்னவோ கடவுள் கடைசிவரை கை கொடுக்க வேண்டும்'' என்றார்.

அதற்குள் யாரோ அவரைக் கூப்பிட்டார்கள். பெண்ணைப் பெற்றவர் அல்லவா? பறந்தார்.

என்னென்னவோ வேடிக்கைகள், கேலிகள், விளையாட்டுப் பேச்சுக்கள், சந்தானத்தை நண்பர்கள் சாறு பிழிந்தார்கள்!

வினயாதான் கண்ணிலேயே தட்டுப்படவில்லை. ஒரே ஒரு முறை, தன் கல்லூரித் தோழிகளை வழியனுப்ப அவர்களோடு வெளியே வந்தாள்.



சந்தானத்தின் நண்பன் ஒருவன் அவன் விலாவில் குத்தினான். ''ஓடு ஓடு.'' என்று கிண்டல் செய்தான்.

அதற்குள் வினயாவே தோழிகளுடன் அவன் அருகில் வந்தாள்.

''நாங்கள் வருகிறோம் சார்.'' என்று தோழிகள் சந்தானத்திடம் விடை பெற்றனர்.

அவனும் வெண்பற்கள்பளிச்சிட லேசான முறுவலோடு கை கூப்பி விடை கொடுத்தான்.

''எங்கள் வினயாவை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள், சார்,'' என்றாள். ஒருத்தி.

''ஒரேயடியாக நீங்கள் மட்டும் பார்த்துக் கொண்டு இருந்து விடாதீர்கள். நாங்களும் பார்க்க, அவ்வப்போது இங்கேயும் அனுப்பி வையுங்கள்.'' என்றாள், இன்னொரு துணிச்சல்காரி.

''எப்படியும் பத்து மாதத்துக்குள் அனுப்பிவிடுவார்.'' என்றாள் மற்றோர் அதிதுணிச்சல்காரி.

சந்தானம் சிரித்துக் கொண்டே மனைவியைப் பார்த்தான். அவள் சற்று நெட்டையான ஒரு தோழியின் அருகே மறைந்து கொண்டாள்.

''வினி, மறந்துவிட்டேனே. ஜெர்மனியிலிருந்து அண்ணா கடிதம் எழுதியிருக்கிறார். நல்ல சுகமாகப் போய்ச் சேர்ந்தாராம். எல்லாம் வசதியாய் இருக்கிறதாம்.'' என்று ஒரு பெண் கூறினாள்.

''வாணிக்கு அவளுடைய அண்ணன் வெளிநாடு போன பெருமை.'' என்று கேலி செய்தாள் ஒருத்தி.

குனிந்து புது மெட்டியைச் சரி செய்து கொண்டு நிமிர்ந்தாள், வினயா. ''நான் உள்ளே போக வேண்டும்டி. அம்மாவுக்கு மருந்து கொடுக்க வேண்டிய நேரம் ஆயிற்று'' என்றாள், மெல்லிய குரலில்.

''ஓகே. நாங்கள் கிளம்புகிறோமடி.'' என்று தோழியர் பட்டாளம் விடை பெற்றுச் சென்றது.

வினயாவும் உள்ளே விரைந்து சென்று விட்டாள்.

மெல்ல மெல்லப் பொழுது நகர்ந்தது.

சந்தானம் ஏங்கியிருந்த இரவும் வந்து சேர்ந்தது.

வெகு நேரம் கழித்து வினயாவும் வந்து சேர்ந்தாள்.

மெல்ல அவன் அருகில் சென்று பொம்மைபோல அவனைப் பணிந்தாள்.

அவனுக்கு மனம் உருகிவிட்டது.

அவளை ஏந்தி எடுத்து அணைத்தான்.

அந்த ஒரு கணத்தில் உலகமே மறந்தது.

அவளை பஞ்சணைக்கு அழைத்துச் சென்றான்.

அங்கே இருவருமாகப் புதிய உலகம் ஒன்றைப் படைத்தார்கள்.

இரவில் வெகு நேரம் கழித்து சந்தானம் திடீரென்று விழித்துக் கொண்டான்.

ஒரு நிலாத் துண்டு சன்னல் வழியே உள்ளே புகுந்து வினயாவின் மீது விழுந்தது.

சந்தானம் ஆவலுடன் மனைவியை நோக்கினான்.

அவள் முகத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டான்.

வினயாவின் இமையோரங்களில் இருந்து வழிந்து காய்ந்திருந்த கண்ணீர்க் கோடுகள் நில வொளியில் நன்கு தெரிந்தன!

# 2

## நத்தைக் கூடு !

ஒருகணம் திடுக்கிட்ட போதும் சந்தானத்தின் மனம் மறு கணமே தெளிந்து விட்டது,

'பாவம், உறங்கும் போது அன்னையின் நினைவு வந்து விட்டதுபோலும்' என்று இரக்கத்துடன் எண்ணிக்கொண்டான்.



வினயாவை எழுப்பி ஆறுதலாக ஏதேனும் சொல்லலாமா என்று நினைத்தான். அது உறங்குகிறவளை எழுப்பி தூக்க மாத்திரை கொடுப்பது போலாகும் என்று அந்த எண்ணத்தைக் கைவிட்டான். விடிந்தபின் பார்த்துக் கொள்ளலாம் என்று தலையணையில் சாய்ந்தான்.

ஆனால், காலையில் அவன் கண் விழித்துப் பார்க்கையில் வினயா அவன் அருகில் இல்லை. அவள் எப்பொழுது எழுந்து போனாளோ.

காலை சாப்பாட்டுக்குப் பின், சந்தானத்தைத் தவிர, அவன் வீட்டார் எல்லோரும் ஊருக்குக் கிளம்பினார்கள். அவன் மட்டும் மாமனார் வீட்டில் தங்கிவிட்டான். அவன் மாப்பிள்ளைச் சோறு உண்ண வேண்டுமாம். புதிய மணமகனிடம் மனைவி கூச்சமின்றி சொந்த வீட்டில் சற்றுப் பழகிக் கொள்ளட்டும் என்பதற்காக ஏற்பட்ட பழக்கம், இது. ஆனால், இப்பொழுது இது ஒரு சம்பிரதாயமாகவே மாறி விட்டது.

சந்தானத்தின் தமக்கை ரேவதி வினயாவை அன்போடு அணைத்து விடை பெற்றாள். ''அம்மாவுக்கு விரைவிலேயே குணமாகிவிடும். நீ கவலைப்படாமல் சிரித்த முகமாக இருக்க வேண்டும்.'' என்று புன்னகையோடு புத்தி கூறினாள்.

வினயா மெல்லிய புன்னகை ஒன்றை இதற்குப் பதிலாகத் தந்தாள். பால் நிறத்துப் பற்கள் ஒரு கணம் பளிச்சிட்டு மறைந்தன.

''உன் பெண்டாட்டியை நன்றாகச் சாப்பிடச் சொல், இப்படியே இருந்தால் புல்தடுக்கினால்கூட ஒடிந்து விழுந்து விடுவாள்'' என்றபடி காரில் ஏறினார், சந்தானத்தின் தாயார், லெட்சுமி.

''வெட்கம் பாராமல் ஊட்டி விடுடா!'' என்று சிரித்தாள், ரேவதி. ''தினமும் ஒரு பானைச் சோறு அவள் உள்ளே ஏற வேண்டும்.''

''அவ்வளவுதான். பிறகு அண்ணி ஒரே குண்டாகி விடுவார்கள். கட்டிப் பிடிக்க முடியாது.'' என்று வெகுளித்தனமாக உளறினாள் அனுராதா.

எல்லோரும் பக்கென்று சிரித்தனர். வினயாவின் முகம் செக்கர் வானமாகச் சிவந்து அடியோடு தாழ்ந்து விட்டது. சந்தானம் ரசனையோடு பார்த்தான்.

''சரிதான். அசட்டுப் பிசட்டென்று உளறாமல் காரில் ஏறு'' என்று அதட்டினாள், லெட்சுமி.

எல்லோரும் விடை பெற்றுச் சென்றபின் சந்தானம் வினயாவின் பக்கம் திரும்பினான், அவள் அவசர அவசரமாக உள்ளே சென்றாள்.

'வெட்கமோ?' சந்தானத்தின் முகத்தில் இளநகை மலர்ந்தது.

மைத்துனன் ரகுவிடம் பேசலாம் என்று முயன்றால், அவன் அதற்கும் மேலாக வெட்கப்பட்டான். சந்தானத்துக்கு சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டான். அவனுடைய தமக்கை ரேவதியின் திருமணத்தின் போது அவன் அனுபவித்தது தானே. பள்ளிக்கூடம், விளையாட்டுகள் என்று மெல்ல அவனிடம் பேச்சுக் கொடுத்தான். ரகுவும் ஒருவாறு வெட்கம் அகன்று பேசலானான்.

ஒரு வாரம் சந்தானம் மாமனார் வீட்டில் தங்கியிருந்தான். தேனிலவுக்கு என எடுத்த விடுமுறை. ஆனால் மாமியாரின் உடல் நிலையை எண்ணி அவன் அந்தப் பேச்சையே எடுக்கவில்லை. வினயா இந்தக் காலப் பெண்ணாக அவனோடு கூடச் சேர்ந்து அரட்டை அடிக்கவில்லை என்ற குறைதான், மற்றபடி மகிழ்ச்சியாகவே பொழுது கழிந்தது. மைத்துனனும் ஒட்டிக் கொண்டான். மாமனாரின் மரியாதை வேறு.

வினயா சற்று ஒதுங்கியே நிற்பது போல சில நேரங்களில் சந்தானத்துக்குத் தோன்றும். ஆனால், அவள் தன் அன்னையின் அருகிலேயே இருப்பதைக் கண்டதும் தன்னையே கடிந்து கொண்டான். கூட இருந்து சிரிக்கவில்லையே தவிர அவனுக்கு அவள் எந்தக் குறையும் வைக்கவில்லையே. உரிய பணிகளைத் தட்டாமல் செய்தாளே.

இப்படியாக சந்தானத்தின் விடுமுறை கழிந்தது. அவனும் ஊருக்குப் புறப்பட்டான். வினயாவைப் பத்து நாட்களில்



கொண்டு வந்து விடுவதாக மாமனார் கூறினார், அவள் வரும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்தபடி சந்தானம் சென்னைக்குச் சென்றான்.

ஆனால், வினயாவுடைய தாயின் உடல் நிலை அவளது சென்னைப் பயணத்தைத் தடுத்தது. திடீர் என்று அவளுக்கு நோய் அதிகமாயிற்று. கொஞ்சம் தேறுவதும் மீண்டும் மாறுவதுமாக ஊசலாடியது. நிலைமையை அறிந்து சந்தானமே வினயா கொஞ்ச நாள் கழித்து வந்தால் போதும் என்று கடிதம் எழுதி விட்டான்.

பல வாரங்கள் கழிந்தன.

ஒரு நாள் திருச்சியில் இருந்து சந்தானத்துக்கு வந்த கடிதம் ஒன்றில் மஞ்சள் தடவியிருந்தது. வியப்புடன் பிரித்துப் படித்தான்.

வினயா இரண்டு மாதமாம்!

அவனுக்குச் சிரிப்பாக வந்தது. வெட்கமாக இருந்தது. வினயா அருகில் இருந்தால் அவளை அப்படியே தூக்கித் தட்டாமாலை சுற்றியிருக்கலாம். சேசே, கூடாது. சும்மாவே தலை சுற்றலில் கிடக்கிறாளாமே!

மனைவியைப் பார்க்க ஆவல் அதிகமாக இருந்தது. மேலே விடுமுறை கேட்கவும் வழியில்லை. அவள் இங்கே வரவும் வகையில்லை. மனதை அடக்கிக் கொண்டு வேலையைப் பார்த்தான்.

அடுத்த சில நாளில் திடீரென்று அலுவலகத்துக்கு டிரங் கால் வந்தது. பவானி அம்மாளுக்கு உடம்பு மிகவும் மோசமாகி விட்டதாம். கடைசித் தடவையாக மருமகனைப் பார்க்க விரும்புகிறாராம்.

சந்தானம் உடனே பெரிய அதிகாரியைச் சந்தித்தான். நிலைமையை எடுத்துக் கூறினான். அவரும் மனிதர் அல்லவா? ''பத்து நாளானாலும் இருந்து பார்த்து விட்டு வாருங்கள்'' என்று அவனை உடனே அனுப்பி வைத்தார்.

அவனும் அவசரமாகக் கிளம்பினான். கிடைத்த முதல்

ரெயிலில் ஏறி திருச்சிக்கு வந்தான். வினயாவின் வீட்டை அடைந்தான்.

ரகு வாயிலிலேயே "அத்தான்!" என்று அழத்தொடங்கி விட்டான். அவனைத் தட்டிக் கொடுத்து உள்ளே அழைத்துச் சென்றான், சந்தானம்.

அதற்குள் மாமனார் வந்தார், மருமகனைத் தன் மனைவியிடம் அழைத்துச் சென்றார்.

கிழிந்த நார்போலக் கட்டிலில் கிடந்தாள். பவானி அம்மாள்.

முன்னிலும் மெலிந்தவளாகச் சுவரில் சாய்ந்து கொண்டு நின்றாள் வினயா, விழிகளில் நீர் பெருக. சந்தானத்துக்குத் தொண்டையை அடைத்தது.

சுந்தரேசன் கட்டிலின் அருகே குனிந்து மனைவியிடம் ஏதோ சொன்னார்.

பவானி அம்மாளின் பஞ்சடைந்த கண்கள் மெல்லத் திறந்தன. விழிகளின் சுழற்சியில் சந்தானத்தின் முகம் சிக்கியது.

சுந்தரேசன் அழைக்கவே சந்தானம் கட்டிலின் அருகே குனிந்தான்.

பவானி சிரமத்துடன் மெல்லப் பேசினாள். "மாப்பிள்ளை! உங்களுக்கோ அந்தப் பிள்ளைத்தாய்ச்சிக்கோ வகையாய்ப் பொங்கிப்போட எனக்குக் கொடுத்து வைக்கவில்லை... போகிறது. எங்கள் வினயா.... அவள் குழந்தை...அவளை அவளை..." என்று திணறினார். அவர் சொல்ல முயல்வது சந்தானத்துக்குப் புரிந்தது.

"அவளை என் கண்போலப் பார்த்துக் கொள்வேன். நீங்கள் கொஞ்சமும் கவலைப்படாதீர்கள்" என்று அவசரமாகச் சொன்னான்.

பவானியின் முகம் மலர்ந்தது. அதாவது அந்த நிலையிலும் அவர் முகத்தில் மலர்ச்சி என்று ஒன்று தோன்றக் கூடுமானால், அது அப்போது அந்த முகத்தில் தோன்றியது



அவர் விழிகள் மேலும் சுழன்று வினயாவை அடைந்தன. அவளை அருகே அழைத்தன.

"அம்மா" என்று கட்டிலில் முகம் புதைத்து அடக்க மாட்டாமல் கதறலானாள் வினயா.

இதழ்களில், லேசான புன்னகையுடன் சிரமப்பட்டு ஒரு கையைத் தூக்கி மகளுடைய தலையை மெல்ல வருடினாள், தாய்.

சந்தானம் தன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

இந்த சித்திரவதை அதிக நேரம் நீடிக்கவில்லை. அன்று இரவே பவானி அம்மா தன் இறுதிப் பயணத்தைத் தொடங்கி விட்டாள்! முதுமை தொடங்கியிருந்த வேளையில் சுந்தரேசன் தன்னில் பாதியை இழந்தார்.

முதல் தாய்மையைத் தாங்கியிருந்த பெண், மிகவும் தேவையான நேரத்தில் அன்னையை இழந்தாள்.

கருகருவென்று மீசை அரும்பிக் கொண்டிருந்த இளம் வாலிபன் ஒருவனுக்கும் அதுவேதான் கதி.

யார் யாரோ வந்தார்கள். ஏதேதோ செய்தார்கள் எங்கெங்கோ திரும்பிச் சென்றார்கள்.

சுந்தரேசனும் ரகுவும் வினயாவும் தனித்திருக்க அஞ்சுவது போல ஒருவர் பார்வையை விட்டு ஒருவர் அகலாமல் இருக்க முயன்றனர்.

மூவரையும் காணக்காணச் சந்தானத்தின் நெஞ்சு உருகியது.

தனியே சென்று கண்ணீர் வடிப்பதும் மற்றவரைக் காணும் போது சமாளித்துக் கொண்டு பேசுவதுமாக இந்த ஊமை நாடகங்கள் அவன் நெஞ்சைப் பிளந்தன.

வினயாவைத் தன் மார்பில் சாத்திக் கொண்டு அவளது கண்ணீரைத் துடைகக விரும்பினான். ஆனால் அவளை அணுகும் வழி அறியாமல் வருந்தினான்.

சந்தானம் சென்னைக்கு கிளம்ப வேண்டிய நாள் நெருங்கியது. ஒரு சமயம் ரகுவுடன் பேசிக் கொண்டு உள்ளே வந்த

போது சந்தானம் வினயாவைக் கண்டான்.

சன்னலின் வழியே வானத்தை வெறித்தபடி ஒரு கட்டிலில் துவண்டு கிடந்தாள், அவள். அந்த வான வெளியில் தாயைத் தேடினாளோ?

சந்தானம் யோசனையோடு ரகுவைப் பார்த்தான். அவனை இப்போது எப்படி விலக்குவது?

நல்ல வேளையாக வாயிலிலிருந்து சுந்தரேசன் மகனை அழைத்தார். ரகு அவரிடம் விரைந்தான்.

சந்தானம் மனைவியை அணுகினான். அருகில் வந்து ''வினி'' என்று அழைத்தபடி கட்டிலின் ஓரமாக அமர்ந்தான்.

அதன் பிறகு தான் வினயாவுக்கு சுற்றுப்புற உணர்வு வந்தது போலும். வேகமாக எழுந்தாள்.

கட்டிலை விட்டு இறங்கிச் செல்ல முயன்றவளை சந்தானம் தடுத்தான். அவள் கையைப் பற்றித் தன் அருகில் உட்கார வைத்தான்.

வினயா சிறு அச்சத்துடன் அவனைப் பார்த்து விட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

''வினயா உன்னிடம் ஒன்று பேச வேண்டும்.'' என்றான் சந்தானம்.

மீண்டும் அதே பார்வையும் தலையைக் குனிதலும்.

சந்தானம் உதட்டைக் கடித்துக் கொண்டான். பிறகு மெல்லக் கேட்டான். ''ஏன் வினி. என்னைப் பார்த்தால் உனக்குப் பயமாக இருக்கிறதா?''

விழிகளைத் தூக்காமலே வினயா ''இ.......இல்லையே.'' என்றாள்.

''உன்னை அழைத்துச் சென்று விடுவேன் என்று நினைக்கிறாயா?''

''...............''

''இங்கே அப்பா, தம்பியுடன் கொஞ்ச நாள் இருக்க வேண்டும் என்பதுபோல் தோன்றுகிறதா?''

ரொம்பவும் லேசாக வினயாவின் தலை அசைந்தது.



''அப்படியானால் நீ விரும்பும் வரை இங்கே தங்கிவிட்டு வாயேன்.''

வினயா சட்டென நிமிர்ந்தாள். கண்களில் நீரும் உதடுகளில் லேசான புன்னகையுமாக அவனை நன்றியுடன் பார்த்தாள்.

உள்ளம் நெகிழ ''வினி'' என்று அவளை அணைத்துக் கொண்டான், சந்தானம். ''என்னிடம் சொன்னால் என்ன? அவ்வளவு சொந்தம் இல்லையா?'' என்று உரிமையுடன் மெல்லக் கடிந்தான்.

அப்பொழுது ''அக்கா'' என்று அழைத்தபடி ரகு வரும் சத்தம் கேட்டது. ''அப்பா ஓர் ஐம்பது ரூபாய் வாங்கிவரச் சொன்னார்...'' என்றபடி அவன் வந்தான். வினயா எழுந்து உள்ளே சென்றாள்.

அதன் பிறகு வினயாவிடம் தனித்துப்பேசும் வாய்ப்பு சந்தானத்துக்குக் கிடைக்கவில்லை. தைரியமாக இரு... உடம்பையும் கவனித்துக் கொள்'' என்று மனைவியிடம் விடை பெற்றுச் சென்றான்.

மேலும் இரண்டு மாதங்கள் கடந்தன. வினயாவுக்கு ஐந்தாம் மாதம் முடியும் தறுவாயில் சுந்தரேசன் மகளை அவளுடைய கணவனிடம் சேர்ப்பித்தார்.

வினயாவின் அடிவயிறு லேசாக உப்பித் தெரியத் தொடங்கியிருந்தது.

அவளது நிலையை உத்தேசித்து லெட்சுமி அம்மாவும் சென்னையிலே அவர்களோடு தங்கியிருந்தார்.

நத்தை தன் கூட்டுக்குள் பதுங்குவது போல வினயா தன்னுள்ளே ஒடுங்கி ஒடுங்கி இருப்பதை சந்தானம் உணர்ந்தான். அது அவனுக்குப் பிடிக்கவில்லை.

ஆயினும் அவளது உடல் நிலையையும் மன நிலையையும் எண்ணிப் பார்த்து, அவள் போக்கின்படியே விட்டான்.

முத்துச்சிப்பி வளர்ந்து கொண்டே வந்தது!

3

# மழலைச் செல்வம்

"அம்மம்மா....ஆ..."

அயர்ந்த உறக்கத்தில் இருந்த சந்தானம் லேசாகப் புரண்டான்.

"ம்ம்..." என்ற முனகல் ஒலி தொடர்ந்து கேட்டது.

கண்களைத் திறவாமலேயே அருகே தடவினான்.

தேடியது தட்டுப்படவில்லை.

சட்டென கண் விழித்துப் பார்த்தான்.

சன்னல் கம்பிகளைக் கைகளால் இறுகப் பற்றியபடி சன்னல் சட்டத்தில் முகம் பதித்து வினயா நின்றிருந்தாள் அவள்தான் முனகியதா?

சந்தானம் துள்ளி எழுந்தான். விளக்கைப் போட்டுவிட்டு மனைவியிடம் சென்றான்.

கீழ் உதட்டின் மீது பற்கள் அழுத்திப் பதிய, தாள மாட்டாத வலியில் கண்கள் சொருக வினி நிற்பதைக் கண்டான்.

"வினிம்மா," அவளை மெல்லத் தன் புறமாகத் திருப்பினான். சன்னலில் அழுந்தியிருந்த அவள் முகத்தைத் தன் மார்பில் சாத்திக் கொண்டான். "வலிக்கிறதாம்மா?" என்று இதமாகக் கேட்டான்.

வினயா தலையை ஆட்டினாள்.

"என்னை எழுப்பிச் சொல்லியிருக்கக் கூடாதா?" என்று குறைப்படாமலிருக்க அவனால் முடியவில்லை. வினயாவின் பதிலை எதிர்பாராமலே அவளை மெல்லத் தாங்கி அணைத்தபடி படுக்கைக்கு அழைத்து வந்தான்.

தலையணைகளை வசதியாக அடுக்கினான். அதில் சாய்த்தாற் போல அவளை அமரச் செய்தான்.



"இப்படியே சாய்ந்து கொள். இதோ வருகிறேன்," என்று உள்ளே சென்றான். தாயை எழுப்பி வந்தான்.

வினயாவுக்காக லெட்சுமி அம்மா இங்கேயே தங்கியிருந்தார். மகளுக்குத்தான் செய்கிற கடமை உண்டு. மருமகளுக்குமா? என்ற சில நேரங்களில் அவர் அலுத்துக் கொள்வதும் உண்டு. ஆயினும் மகன் எழுப்பியதும் உடனே மருமகளிடம் விரைந்தார்.

லெட்சுமி அம்மாள் வரும்போது வினயாவின் முகம் சற்றுத் தெளிந்திருந்தது.

"வலி விட்டுவிட்டு வருகிறதா?" என்று கேட்டபடி மருமகளின் அருகில் அவர் வந்தார்,

"ஆமாம்" என்னும் போதே வினயாவுக்கு மாறி விட்டது. வலி பொறுக்க முடியாமல் விழிகளில் நீர் துளித்தது. "அத்த்...தை" என்று அவர் கையைப் பிடித்துக் கொண்டு விம்மினாள்.

"ஊகும். இந்த விம்மல் விக்கல் எல்லாம் வைத்துக் கொள்ளாதே. பிள்ளை ஏறிக் கொள்ளும். இப்படி எத்தனை வலி வந்திருக்கும். சுமார் எத்தனை நிமிடத்துக்கு ஒரு முறை வலிக்கிறது?" என்று லேசாக அதட்டினாற் போலக் கேட்டார், லெட்சுமி.

"தெ...தெரிய... வில்லை" என்று திக்கித் திணறினாள் வினயா.

"மணி பார்க்கவில்லையா? இது கூடத் தெரியாதா, வினயா? இதுதான் தாயில்லாப் பெண்ணோடு படுவது என்பது. இப்படியெல்லாம் ஆகும் என்றுதான் முன்பே அவனிடம் சொன்னேன்..."

வினயாவுக்கு மீண்டும் கண்ணீர் பொங்கியது.

"இந்த நேரத்தில் இது என்னம்மா பேச்சு?" என்று அதட்டினான், சந்தானம். நான் டாக்சி கொண்டு வரவா?"

"சரிசரி. போய்ப்பார். இந்த நேரத்தில் உனக்கு எந்த டாக்சி..."

தாயின் பேச்சை மேலும் கேட்க சந்தானம் அங்கே இல்லை. செருப்பை மாட்டிக் கொண்டு சந்தானம் புறப்பட்டு விட்டான்.

மருமகளுக்கும், வரப்போகும் பேரன் அல்லது பேத்திக்கும் மருத்துவமனையில் தேவையான பொருட்களை லெட்சுமி அம்மா எடுத்து வைத்தார். வென்னீர், பிளாஸ்க், நாப்கின் துணிகள், பஞ்சு, பவுடர், எல்லாம் கூடையில் ஏறின. கூடவே வினயாவுக்கு சூடாக ஒரு கப் காபி போட்டுக் கொடுக்கவும் அவர் மறக்கவில்லை. எல்லாம் தயார் செய்து விட்டு மருமகளின் இடையை இதமாக நீவி விட்டார்.

இதற்குள் சந்தானம் வாடகைக் காருடன் வந்தான்.

வினயாவின் நெற்றி நிறையத் திருநீறு பூசினார், லெட்சுமி அம்மா. பிறகு கைத்தாங்கலாக அவளை அழைத்துப் போய்க் காரில் ஏற்றினார்.

வாடகைக் கார் விரைந்து மருத்துவமனையை அடைந்தது.

நடு நிசியிலும் அந்தத் தாய்சேய் நலவிடுதி உயிர்ப்புடன் இயங்கியது.

சீருடை அணிந்த இரு நர்சுகள் வினயாவை அழைத்துச் செல்ல வந்தனர்.

வினயா மிரட்சியுடன் கணவனையும் மாமியாரையும் மாறி மாறிப் பார்த்தாள். சந்தானத்துக்கு நெஞ்சை ஏதோ பிசைந்தது. ''ஒரு நிமிடம் நர்ஸ்....'' என்று நிறுத்தினான்.

அவர்களும் எத்தனையோ பார்த்தவர்கள்தானே. புன்னகையுடன் சற்று விலகி நின்றனர். ''கொஞ்சம் சீக்கிரம் அவர்களுக்கு 'எனிமா' கொடுக்க வேண்டும்'' என்றார், ஒரு நர்சு.

சந்தானம் வினயாவின் கைகளை மெல்ல வருடினான். ''வினி, இதோ பார். ஒன்றும் இல்லை. தைரியமா...க இருக்க வேண்டும்...ஒ....ஒன்றும் பயம் இ...இல்லை...'' என்னும்போதே, அவனது குரல் உடைந்தது. வினயாவின் கரங்களை தேறுதலுக்காகப் பற்றியிருந்த அவன் கைகளும் நடுங்கலாயின.



''நீங்களே பயமுறுத்தி விடுவீர்கள் போல இருக்கிறதே'' என்று சிரித்தவாறு அருகில் வந்தார் ஒரு நர்சு. ''முதலாவது என்பதால் பயப்படுகிறீர்கள். வலியை கொஞ்சம் பொறுத்துக் கொண்டால் பிறகு கோடி சுகம். வினாடிக்கு வினாடி லட்சக் கணக்கில் நடக்கவில்லையா?'' என்றபடி வினயாவை உள்ளே அழைத்துச் சென்றார்.

சந்தானம் அச்சத்துடன் தாயிடம் வந்தான்.

''அட, ஒன்றும் இல்லையடா. உன் அக்கா மூன்று பெறவில்லையா?'' என்று மகனைத் தேற்றினார், லெட்சுமி அம்மா.

ஏழுமணி நேரம். அந்த நேரத்தில் ஏழு பிறவிகள், அதிலும் அச்சமும் அல்லலும் மிக்க ஏழு பிறவிகளை எடுத்து வாழ்ந்து முடித்தான்' சந்தானம்.

லெட்சுமி அம்மாவுக்கும் சற்று பயம் உண்டாகி விட்டது. உள்ளே சென்ற நர்சிடம் விசாரித்தார். ''சீக்கிரம் ஆகிவிடும், அம்மா.'' என்று புன்னகையோடு பதில் கூறிவிட்டு, வென்னீரோடு பறந்தார், அந்த நர்சு.

வைகறைப் பொழுது புலர்ந்தது.

கதிரவனின் ஒளிக் கிரணங்களுடன் சேர்ந்து தலையை நீட்டினாள், சந்தானத்தின், செல்வி. ''வீல் வீல்'' என்ற அவளது அழுகைச் சத்தத்தில் அந்த மருத்துவமனையே கிடுகிடுத்தது.

வெட்கமும் மகிழ்ச்சியுமாகச் சந்தானம் தாயைப் பார்த்தான். அவளுக்கும் முகமெல்லாம் பல்.

துணிச் சுருளுக்குள் கிடந்த குழந்தையை வினயாவிடம் காட்டினார்கள். அவளுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. சின்ன பொம்மை போலக் குஞ்சு குஞ்சாகக் கையும் காலும். செப்பு வாய். சின்ன விழிகள் வெளிச்சம் தாளாமல் கூசிக்கூசி மூடிமூடித் திறந்தன. கரும்பட்டு முடி. வினயாவின் உடலெங்கும் ஒரு பரவசம் ஓடியது. மனமும் எங்கோ ஓடியது.

வினயாவையும் குழந்தையையும் அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட அறைக்குக் கொண்டு சென்றனர்.

''இனி நீங்கள் உள்ளே போகலாம்.'' என்ற நர்சின் குரல் வெளியே காத்து நின்றவர்களுக்கு அமுதமாக ஒலித்தது.

பாட்டி தொட்டிலை நாடி விரைந்தார் :

அரைக்கணம் தொட்டிலின் மீது பார்வையைச் செலுத்தி விட்டு மனைவியிடம் விரைந்தான், சந்தானம்.

அன்புடன் குனிந்து அவள் கன்னத்தை வருடினான்.

வினயாவின் வெளுத்த கன்னங்கள் குபீரெனச் சிவந்தன.

ஒரே ஒரு வினாடிதான் கணவனின் கண்களை நேராகச் சந்தித்தாள். உடனே தன் கையால் அவன் கையைப்பற்றி அவன் கரத்தாலேயே கண்களை மறைத்துக் கொண்டாள். இதழ்கள் எழிலுற வளைந்து நீண்டன. மின்னல் கீற்றாகப் பால் நிறத்துப் பற்கள் ஒளிர்ந்தன.

சந்தானம் திகைத்துப் போனான். இந்தப் பத்துமாத பந்தத்தில் இத்தகைய வரவேற்பைத் தன் மனைவியிடம் அவன் கண்டதே இல்லை.

''என் பேத்தி சிரிக்கிறாள் பாரடா.'' என்று உற்சாகத் துடன் கூவினார் லெட்சுமி அம்மா.

வினயாவின் கையை ஒரு முறை அழுத்திவிட்டுத் தொட்டிலுக்குச் சென்றான், சந்தானம்.

குழந்தையின் இதழ்கள் இன்னமும் மலர்ந்தே இருந்தன— அதன் இளம் தாயின் அதரங்கள் சற்று முன் வளைந்திருந்தது போல.

சந்தானம் சட்டென மனைவியைப் பார்த்தான். அவளும் அவனைத்தான் நோக்கியிருந்தாள். பார்வை சந்திக்கவும் புன்னகை மேலும் விரிவடைந்தது.

பெருமையும் பரவசமும் இருமுகங்களிலும் பளபளத்தன.

''வாய் அம்மா போல. மூக்கு அவள் பெரியத்தை மாதிரி. கண்ணும் புருவமும் வினயா ஜாடைதான். நெற்றி மட்டும் என்னுடையது.'' என்று சொல்லிக் கொண்டு இருந்தார் லெட்சுமி அம்மா. ஆனால் அவரை யார் கவனித்தார்கள்!

சந்தானம் மீண்டும் மனைவியை நெருங்கினான். அவளின்



காதோரமாகக் குனிந்து கிசு கிசுத்தான். ''இப்படி நீ சிரிப்பது இதுதான் முதல் தடவை. தெரியுமா வினி?''

வினயாவின் மனம் திடுக்கிட்டது. உள்ளம் குலுங்கியதை வெளியே தெரியாமல் மறைத்தாள். களைப்பின் போர்வையில் கண்களை மூடிக் கொண்டாள். உள்ளத்தின் வாசல் கண்கள் தாமே?

''யாரும் அவர்களிடம் இப்போது பேச்சுக் கொடுக்காதீர் கள். முதலில் சற்றுத் தூங்கட்டும்'' என்றபடி, அப்பொழுது டாக்டரம்மா உள்ளே வந்தது, வினயாவுக்கு வசதியாகப் போயிற்று!

# 4

## மங்கல விழா

செல்வி பிறந்தபின், முதலில் வினயா சற்று பலவீனமாக இருந்தாள். பிறகு பார்ப்போர் ஆச்சரியப் படும்படியாக விரை வில் தேறிவிட்டாள். லெட்சுமி அம்மாளின் பத்திய உணவு களும், நாட்டு மருந்துகளும், சத்துள்ள சாப்பாடும் அவளுக்கு உரமூட்டின. உடலில் சற்று சதைப்பிடித்து, கடைசல் பிடித்த சிலைபோல மெருகேற்றிய தங்கம் போல பட்டை தீட்டிய வைரம் போல ஒளிர்ந்தாள்.

அவளைப் பார்க்கும் பொழுதெல்லாம், தாய்மையில்தான் பெண்மையின் பொலிவும் பூரிப்பும் முழுமை அடைகின்றன என்று சந்தானத்துக்குத் தோன்றியது.

பச்சை உடம்பு, அதிலும் பலவீனமானவள் என்பதால், லெட்சுமி அம்மாள் வெகு கண்டிப்பாக மருமகளைக் கண் காணித்தார். ஆயினும் ஒரு பார்வை, ஒரு சிரிப்பு, குறிப்பான ஜாடை இவற்றை யாரால் தடுக்க இயலும்? சந்தானமும்

வினயாவும்—அதிலும் முக்கியமாக வினயா—சொர்க்க சுகத்தில் திளைத்தாள்.

மூன்றாம் மாதத்தில் குழந்தைக்குப் பெயர் சூட்டும் விழா நடத்த நிச்சயித்தனர்.

காஞ்சியில் இருந்து பத்துநாள் முன்னதாகவே ரேவதி வந்துவிட்டாள். அவளோடு தங்கியிருந்த சின்னவள் அனுவும் ரேவதியின் குழந்தைகளுமாக வீடு கலகலத்தது.

இந்த ஓர் ஆண்டில் அனுவும் சற்று மாறியிருந்தாள். உயரத்தில் வளர்ந்து, பிள்ளைச் சதை குறைந்து, உடல் மெருகேறியிருந்தது. தான் அழகாக மாறிவிட்டோம் என்ற பெருமையோடு வந்தாள். இங்கே வினயாவின் அழகு மேலும் சுடர் விட்டதைக் காணச் சற்றுப் பொறாமை உண்டாயிற்று. கூடவே எல்லோரும் "வினயா" "வினயா" என்று அண்ணன் மனைவியைச் சுற்றி வந்ததும் எரிச்சலை மூட்டியது.

வினயாவின் கன்னங்கள் இப்போது பளபளப்பாக இருப்பதாக ரேவதி சொல்லிக் கொண்டு இருந்தாள். அனுவுக்கு அது பொறுக்கவில்லை.

"அண்ணி இப்போது கொஞ்சம் பரவாயில்லை தான். முன்பெல்லாம் ஒரே எலும்பாய்ப் பார்க்க அண்ணி... எப்படியோ இருப்பார்கள் இல்லையா, அண்ணா?" என்று வேண்டுமென்றே கூறினாள்.

சந்தானத்தின் கண்கள் வினயாவைப் பார்த்துக் குறும்பாக நகைத்தன. "என்னவோம்மா. என்னைப் பொருத்த வரைக்கும் எப்போதும் வினயாதான் உலக அழகி." என்று தங்கைக்குப் பதிலளித்தான்.

முகம் சிவக்க அனு எழுந்து போய்விட்டாள். 'விசுக்' கென்று அவள் சென்ற விதம் எல்லோருக்கும் சிரிப்பு மூட்டியது.

"அவளிடம் இப்படிச் சொல்ல வேண்டுமா?" என்று வினயா மெதுவாகக் கேட்டாள்.

"அதிலே என்னம்மா தப்பு? எல்லாக் கணவன்மாருக்கும் அவரவர் மனைவி 'உலகப் பேரழகி'தான்" என்று தன் மனைவியைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்தார் ரேவதியின் கணவர்.



ஓகோ என்று சந்தானம் உரக்கச் சிரித்தான். "கேள் கேள். நன்றாகக் கேட்டுக்கொள், வினயா, அத்தானைப் பொருத்த வரையில் அழகில் நீ அக்காவுக்கு மட்டம் தானாம். அக்கா. காதில் விழுந்ததா? உச்சி குளிர்ந்ததா?" என்று ரேவதியை வம்புக்கு இழுத்தான்.

"சரிதான் போடா. உனக்கும் உன் அத்தானுக்கும் வேறே வேலை இல்லை. மூன்று பெற்றாகி விட்டது. பேச்சைப் பாரேன்" என்று நொடித்தாலும், ரேவதிக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை. அதைப் பார்த்ததும் கேலி செய்வது போல எல்லோரும் மீண்டும் சிரிக்கலாயினர்,

பேச்சை மாற்றுவதற்காக, "உன் அப்பா எப்போது வருகிறார்?" என்று வினயாவிடம் வினவினாள், ரேவதி.

"விழாவன்றுதான், அக்கா" என்றாள் வினயா.

"ஏன் முன்பே வரக்கூடாதா? நாலு நாள் கலகலப்பாக இருக்கலாமே! உன் தம்பியேனும் வந்திருக்கலாம், விடுமுறை தானே?" என்றாள் ரேவதி.

ஒருகண அமைதிக்குப் பிறகு வினயா சொன்னாள் "அப்பா இன்னமும் அம்மாவின் மறைவிலிருந்து மீளவில்லை அக்கா. எல்லோரும் கலகலப்பாக இருக்கும் இடம் அவரால் 'டல்' லாகி விடக் கூடாதாம். ரகுவும் 'அப்பாவோடுதான் வருவேன்' என்று எழுதி விட்டான்," என்றாள், வினயா ஒரு பெருமூச்சுடன்.

சற்றுநேர அமைதிக்குப் பின் அவளே மீண்டும் தொடர்ந்தாள், "பொதுவாகப் பெண்கள் கொஞ்சம் நன்றி கெட்டவர்கள் தான்; இல்லையா. அக்கா? அம்மாவுக்குக் கடைசி நேரத்தில் கூட, என் நினைவு. நானோ...? உயிருக்கு உயிராக வளர்த்தவர்களைக் கூடத் தன் குடும்பம் என்று வந்தவுடன் மறந்து விடுகிறோமே" என்றாள் வருத்தத்துடன்—

"அது அப்படி இல்லை வினயா" என்றபடி அவள் அருகில் வந்து அமர்ந்தாள். ரேவதி, "பெண்களுக்கு வீட்டில் பொறுப்பு அதிகம். கணவன், குழந்தை என்றெல்லாம் பார்க்க வேண்டும்; செய்ய வேண்டும். தன் துயரத்திலேயே மூழ்கிக் கிடந்தால்

காரியம் நடக்காது. துன்பத்தை ஒதுக்கி விட்டுக் கடமையைச் செய்யத் தொடங்குவதில் மனம் மெல்ல மாறிவிடுகிறது," என்று வினயாவின் கையை மெல்ல வருடியபடி இதமாகக் கூறினாள்.

பேச்சை மாற்ற எண்ணி ரேவதியின் கணவர் ''சரி விழாவுக்கு இன்னும் என்னென்ன வேண்டும் என்று பட்டியல் போடலாமா?'' என்று எல்லோரையும் அழைத்தார்.

எல்லோரும் முழு மனதுடன் ஒப்புக் கொண்டு அதில் ஈடுபட்டார்கள். பழைய கலகலப்பு திரும்பி விட்டது.

சந்தானத்திடம், சற்றுத் தனியே பார்க்க முடிந்தபோது, ''உங்கள் அக்கா மிகவும் நல்லவர்கள். என்னிடம் மிகவும் பிரியமாக இருக்கிறார்கள்.'' என்றாள் வினயா.

''நல்லவர்கள் என்றால் உன்னிடம் பிரியமாக இருக்க வேண்டுமாக்கும்?'' என்று கேலி செய்து சிரித்தான், சந்தானம். ''மெய் தான் வினி, அக்கா மிகமிக நல்லவள்தான். அது போல அனுவும் நல்லவளே. சிறு பிள்ளைத்தனம் இன்னும் மாறவில்லை. அவ்வளவுதான் கடைக்குட்டி அல்லவா?'' என்று விளக்கினான்.

வினயா புன்னகை செய்தாள். ''அனுவுக்காக நீங்கள் வக்காலத்து வாங்க வேண்டுமா? எனக்கு அவளையும் பிடிக்கும்'' என்றாள்.

அவன் முகம் மலர்வதைக் கண்டாள்.

அதற்குள் லெட்சுமி அம்மா வந்தார். ''அங்கே என்ன பேச்சு, வேலையைப் பாராமல்? இந்தக் குலாவல் எல்லாம் இப்போது வேண்டாம். இந்தா வினயா, இன்றைக்கு நீ அலைந்திருப்பது போதும். பேசாமல் பிள்ளை பக்கத்தில் போய் உட்கார். சாப்பாட்டுக் கடை வேலை எல்லாம் அக்காவும் தங்கையும் பார்ப்பார்கள். இந்தாடா, மேலே பரணியில் இருந்து பாத்திரப் பெட்டியை எடுக்க வேண்டும். வா'', என்று மகனைக் கையோடு அழைத்துச் சென்றார்.

மனைவியைத் திரும்பிப் பார்த்துக் கண்சிமிட்டி முறுவல் செய்துவிட்டுத் தாயைத் தொடர்ந்து சென்றான் சந்தானம்.



வினயாவுக்கும் சிரிப்பு வந்தது.

அழைப்பிதழ்கள் எல்லாம் அனுப்பப்பட்டு விட்டன. நெருங்கிய சொந்தக்காரர்களும் சந்தானத்துடன் வேலை பார்க்கும் அலுவலக ஊழியரும் நண்பர்களும் மட்டும்தான். ஆயினும் பெரிய விழாவைப் போலப் பார்த்துப் பார்த்துச் செய்தனர்.

விழாநாள் பொன்கதிரோடு எழிலாகப் புலர்ந்தது.

சுந்தரேசனும் ரகுவும் வந்துவிட்டனர். ரகு குழந்தையின் பட்டுக் கன்னங்களைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தான். சுந்தரேசன் பேத்தியைப் பார்த்ததும் ஒருகணம் கண் கலங்கினார். உடனே சமாளித்துக் கொண்டார்.

விழாவின் சிறப்பைக் கூட்டுவது போல செல்வியும் அன்று முதன் முறையாகக் குப்புறக் கவிழ்ந்து படுத்தாள். எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி.

லெட்சுமி அம்மாளைக் கையில் பிடிக்க முடியவில்லை. ''மூன்று மாதம் கூட நிறையவில்லை. அதற்குள் என் பேத்தி குப்புற விழுந்துவிட்டாள்'' என்று டமாரம் அடித்தார். மற்றவர் சொன்னால், ''பிள்ளைமேல் கண்ணைப் போடாதே'' என்று அதட்டினார்.

விழா நேரம் நெருங்கியது. அவசர அவசரமாக அலங்கரித்துக் கொண்டு கண்ணாடியில் பார்த்தாள் வினயா. ரோஜா நிற சேலையில் வெள்ளை சரிகை வேலையுடன், அதே நிறச் சட்டையுடன் அவளும் அன்றலர்ந்த ரோஜா போல நின்றாள். கழுத்திலும் காதிலும் செந்நிறக் கற்கள் ஒளிர்ந்தன. கைகளில் நிறைய ரோஜா வண்ண வளையல்களோடு இரு புறமும் சிவப்புக் கல் வளையல்களை அணிந்தாள்.

நெற்றியில் செஞ்சாந்துத் திலகமிடும்போது பின்னால் அசைவு தெரிந்தது.

பூனைபோல வந்து அவள் பின்னே நின்றான் சந்தானம்.

கண்ணாடியிலேயே அவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள் வினயா.

சட்டென அவளைத் திருப்பி மிருதுவான இதழ்களில் அழுந்த முத்தமிட்டான், அவன்.

எங்கோ லெட்சுமி அம்மாளின் குரல் கேட்டது.

அவசரமாக அவளை ஒரு முறை அணைத்து விட்டுப் புறப்பட்டான் சந்தானம்.

சற்று நேரத்தில் விழா தொடங்கியது.

அழகாகத் தாமரை போலவே பூக்களால் அமைத்த தொட்டிலில் ரேவதி குழந்தையை இட்டாள்.

"தாமரைச் செல்வி" என்று அவள் மும்முறை அழைக்க எல்லோரும் வாழ்த்தினர்.

சந்தானமும் வினயாவும் தொட்டிலின் அருகே நின்று வருவோரைக் கைகூப்பி வரவேற்றனர்.

வினயா பெண்மையின் எழிலுக்கு எடுத்துக்காட்டாக நின்றது போலவே, சந்தானமும் அடர்நீல நிற சூட்டில் ஆண்மையே உருவாக கம்பீரமாக நின்றான்.

இருவரையும் சேர்த்துப் பார்க்கப் பார்க்க லெட்சுமி அம்மாளுக்கு ஒரே பயம். 'எத்தனை கொள்ளிக்கண் பட்டதோ?' என்று ஒரே அச்சம். நன்றாக திருஷ்டி சுத்திப் போடவேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

சற்று நேரம் கழித்து சந்தானம் சொன்னான். "பார்ப்பதைக் கவனித்தாயா? இன்று மிளகாய்ப் புகையில் எல்லோருக்கும் தொண்டை கமறப் போகிறது."

வினயா முகமெல்லாம் மலர்ந்து அவனை நோக்கிச் சிரித்தாள்.

அவளை ஆசையுடன் பார்த்தான் சந்தானம். "வினி, இத்தனை நாளாக இந்தச் சிரிப்பை எல்லாம் எங்கே ஒளித்து வைத்திருந்தாய்? இதை வெளிக் கொண்டுவர செல்வி வர வேண்டி இருந்ததாக்கும்? ம்...? எனக்கு ஓர் எண்ணம் தோன்றுகிறது வினி. நம் செல்வி பிறந்த பிறகுதான் நீ என்னைக் கணவனாக மனதில் ஏற்றிருப்பதாகத் தெரிகிறது. அதுவரை சும்மா கடனே என்று..."

வினயாவின் முகம் மாறுவதைக் கண்டதும் பேச்சை நிறுத்தினான். உடனே தொடர்ந்தான். "அதனால் ஒன்றுமில்லை



வினி. நீ ஏன் அப்படி இருந்தாய் என்று எனக்கு நன்றாகப் புரிகிறது. முதலில் உன் அம்மாவின் உடல் இருந்த நிலையில் என்னைப் பற்றிய நினைவுக்கே உன் மனதில் இடமில்லை. பிறகு மணமானவுடன் தாய்மை என்பதில் மிரண்டு போனாய் அதுதானே விஷயம்?" என்று அவனே விளக்கமும் கொடுத்தான்.

அவள் முகக் கலக்கம் இன்னமும் தெளியாததைக் கண்டான். "அதெல்லாம் பழைய குப்பை விடு வினயா" என்றான் திரும்பவும் தொடர்ந்து.

வினயாவின் முகம் மீண்டும் மலர்ந்தது. 'பழைய குப்பை தானே' என்று மனதில் எதையோ ஒதுக்கினாள்.

அப்போது வாயிலில் ஒரு கார் வந்து நின்றது.

அதில் இருந்து இருவர் இறங்கி உள்ளே வந்தனர்.

"வாருங்கள்" வாருங்கள் என்று சந்தானம் வரவேற்றான்.

"வினி, இவர்தான் எங்கள் தொழிற்சாலையில் உற்பத்தி துறையின் பழைய அதிகாரி, பெயர் பெரியநாயகம்."

வினயா தாமரை மொட்டாகக் கரங் கூப்பினாள்.

"இவர் புதிதாகப் பொறுப்பேற்கப் போகிறவர் பெயர் நந்தகுமார்" என்று புன்னகையோடு அடுத்தவனைப் பார்த்தான் சந்தானம்.

அந்தப் புதியவனோ தன் கண்களையே நம்ப இயலாதவன் போல வினயாவை வெறித்துப் பார்க்கக் கண்டான்.

சட்டென மனைவியின் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

அவள் முகம் சுட்ட சுண்ணாம்பாக இரத்தப் பசையிழந்து வெளுத்திருந்தது!

# 5

# பொங்கல்

சந்தானம் நிமிடத்தில் நிலைமையைச் சமாளித்தான்.

வினயாவை லேசாக இடித்தபடி குனிந்து குழந்தையைத் தூக்கினான். 'பாருங்கள் சார். இவள்தான் எங்கள் செல்வி, பெயர் தாமரைச்செல்வி'' என்று உரக்கக் கூவியபடி வந்திருந்த வரிடம் குழந்தையைத் தூக்கிக் காட்டினான்.

''நிரம்பவும் அழகான குழந்தை'' என்றார் பெரியநாயகம். தான் கொண்டு வந்திருந்த பொம்மைப் பெட்டியைத் தொட்டிலில் வைத்தார்.

''ஆமாம் மிகவும் அழகு. இந்த அழகை நான் எதிர்பார்க்கவே இல்லை.'' என்றான் நந்தகுமார். அவனது பார்வை வினயாவிடம் இருந்து இன்னும் அகலவில்லை.

வினயாவுக்கு முகமெல்லாம் வியர்த்தது.

நல்ல வேளையாக, வினயாவின் தந்தை அந்த நேரத்தில் வந்து சேர்ந்தார். ''மாப்பிள்ளை எல்லோரும் வந்தாயிற்றா? இலை போடலாமா என்று உங்கள் அக்கா கேட்கிறார்கள்'' என்று வினவியபடி வந்தார். அருகில் வந்ததும், நந்தகுமாரைப் பார்த்தார். ''உங்களை...உங்களை...எங்கோ பார்த்திருக்கிறேன்...'' என்று இழுத்தார்.

''இவருக்கு சொந்த ஊர் திருச்சி'' என்றார் பெரியநாயகம்.

''திருச்சியில்...?''

''திருச்சியில் தில்லை நகரில் எங்கள் வீடு இருக்கிறது'' என்றான் நந்தகுமார்.

''எங்கள் வீடும் அங்கேதான். போக வர எப்போதாவது பார்த்திருப்பேன்'' என்று தனக்கே விளக்கம் கூறிக் கொண்டார், சுந்தரேசன்.

''ஆமாம், அப்படித்தான்'' என்று ஆமோதித்தான் நந்தகுமார்.

''அப்படித்தான் இருக்கும் என்று நானும் நினைத்தேன்'' என்றான் சந்தானம்.

''நான் பரிமாறும் வேலையைப் பார்க்கப் போகிறேன்'' என்று முணுமுணுத்துவிட்டு உள்ளே விரைந்தாள் வினயா.



உள்ளே சென்றவள் நேரே ரேவதியிடம் செல்லவில்லை. மாறாக தன் அறைக்குள் சென்றாள். படபடக்கும் நெஞ்சை அழுத்தியபடி சற்று நேரம் கண்களை இறுக மூடிக் கொண்டு நின்றாள். அப்படியும் பதட்டம் குறையவில்லை. அருகில் இருந்த சந்தானத்தின் அறைக்குச் சென்று சில்லென்று ஒரு தம்ளர் மண்பானைத் தண்ணீரைப் பருகினாள்.

''இந்த நேரத்தில் இவன் எங்கே வந்தான்'' என்று நெஞ்சு பதறிக் கொண்டே இருந்தது. அந்தப் பதட்டத்தை ஒரு நிலைக்குக் கொண்டுவர முடியாமல் திணறினாள்.

அறைக்குள் யாரோ வந்தார்கள்.

திடுக்கிட்டுப் பார்த்தாள்.

சந்தானம்தான்.

''யார் வினயாவா? இங்கே என்ன செய்கிறாய்?'' என்று வினவினான்.

''வந்து...பொட்டு கலையாமல் இருக்கிறதா என்று பார்க்க வந்தேன்'' என்று ஒருவாறு சமாளித்தாள் வினயா.

அவன் அவளையே பார்க்கவும் ''தாகமாக இருந்தது. குளிர்ந்த தண்ணீர் குடிக்க இங்கே வந்தேன்'' என்று மேலும் சமாதானம் சொன்னாள். (வினயா குளிர்ந்த நீர் பருகினால் செல்விக்கு ஆகாது என்பார், லெட்சுமி அம்மா. எனவே வினயாவின் அறையில் பானைத் தண்ணீர் கிடையாது.)

''சரிதான்'' என்றான் சந்தானம் நிதானமாக. பிறகு ''அம்மா உன்னைத் தேடினார்கள். செல்வி அழுகிறாள்'' என்று தான் வந்த காரணத்தை உரைத்தான். ''சீக்கிரம் போ'' என்று சொல்லி விட்டு வெளியே சென்று விட்டான்.

வினயாவுக்கு அவன் பேச்சில், நடப்பில் எத்தனையோ அர்த்தங்கள் தொனித்தன. ஒன்றும் இல்லை, நம் மனத்தின் விகாரம்—எல்லாவற்றிலும் விகாரம் காணுகிறது என்றும் சமாளித்துக் கொண்டு மாமியாரைத் தேடிச் சென்றாள். குழந்தை அழுவது கேட்டு ஓடினாள்.

செல்வியைத் தோளில் சாத்திக் கொண்டு நின்றார், லெட்

சுமி அம்மா. ''பிள்ளைக்குப் பசித்திருக்கும். எடுத்துப் போ. வேளை அறிந்து ஊட்ட வேண்டாமா? இதுகூடத் தெரியாதவள் என்ன தாய்?'' என்று மருமகளைச் சாடினார்.

பதிலே சொல்லாமல் வினயா குழந்தையுடன் அகன்றாள். அறைக்குள் சென்று குழந்தைக்கு ஊட்டும் போதே நெஞ்சில் ஏதேதோ எண்ணங்கள் சூறாவளியாகச் சுழன்றடித்தது.

ஓர் ஆண்டுக்கு முன்பாக நடந்தது. நேற்று நடந்தது போல் நினைவில் எழுந்தது. அன்று அவனது அறைக்குச் சென்றதை நினைத்தால், இன்னும் முகம் இரத்தமெனச் சிவந்தது. சே! எவ்வளவு கேவலம்.

ஒளிமயமான இளங்காலை புலர்ந்து விட்டதாக நினைத்தாளே. இருள் மூட்டமாக இவன் எங்கே குதித்தான்?

வெளிநாடு சென்றானே, அங்கேயே செத்துத் தொலைந்திருக்கக் கூடாதா? வினயா ஆற்றாமையோடு நினைத்தாள்.

உடனே, இயல்பாக இருந்த நியாய புத்தி இடித்து உரைத்தது. தனக்காக இன்னொருவன் சாக வேண்டும் என்று எண்ணலாமா? அவனுடைய பெற்றோருக்குப் பிள்ளையாக, உடன் பிறந்தோருக்கு சகோதரனாக அவன் வாழ வேண்டாமா?

அப்படியே அவன் வெளிநாட்டில் இருந்து வந்தால்தான் என்ன? அவன் ஒரு பொல்லாத வில்லனும் அல்ல. வைக்கோல் போர் நாயும் அல்ல. பண்பான குடும்பத்தில் பிறந்தவன். இவளது வாழ்வைக் கெடுக்கும் எண்ணம் அவனுக்கு ஏன் வரப் போகிறது? அதானால் அவனுக்கு விளையும் லாபம்தான் என்ன? ஒன்றும் இல்லையே! அதனால் அவன் வினயாவுக்கு எந்தத் தொல்லையும் கொடுக்க மாட்டான். அவன் அஞ்சத் தேவையே இல்லை.

இந்த நினைவு ஓட்டத்தில் மெல்ல மெல்ல வினயா கொஞ்சம்தேறினாள். அதோடு சந்தானமும் தல்லவன் ஆயிற்றே. அவனுக்கு பால் மனம் ஆற்றே.

ஆனால், அந்தப் பாலில் ஓர் உப்புக்கல் விழுந்து விட்டால்....? நல்ல மனதில் ஒரு துளி நஞ்சு கலந்து விட்டால்?



வினயா நடுக்கத்தோடு மகளைத் தூக்கி நெஞ்சோடு அணைத்தாள். ''அப்படியெல்லாம் எதுவும் நேரக் கூடாது. நான் இப்போதுதான் வாழத் தொடங்கி இருக்கிறேன்'' என்று முணுமுணுத்தாள்.

குழந்தை தன் சின்ன இதழ் விரித்துச் சிரித்தது.

மனதின் பாரம் வெகுவாகக் குறைந்தவளாக வினயா குழந்தையுடன் எழுந்து சென்றாள்.

பந்தி தொடங்கிக் கொண்டு இருந்தது. சித்திரான்னங்கள் அதற்குஉரிய கூட்டுகளுடன் மணத்தன.

புளியோதரையுடன் வந்த ரேவதி ''வினயா, நீ இனிப்பாகச் சர்க்கரைப் பொங்கலைப் பரிமாறு,'' என்றாள்,

பொங்கலைப் பரிமாறலானாள், வினயா. நந்தகுமாரின் அருகில் வரவரக் கால்கள் மெல்லத் தயங்கின. தயங்கிக் கொண்டே பொங்கலை அவனது இலையில் வைத்தாள்.

''ம்...கொஞ்சம் கொஞ்சம் எனக்குத்தான் பொங்கல் பிடிக்காதே'' என்று நந்தகுமார் புன்சிரிப்புடன் அவளை நோக்கினான்.

வினயாவுக்கு முகம் வெளுத்தது. சமாளித்தபடி மேலே பரிமாறிச் சென்றாள். எதிர் வரிசைக்கு வந்தபோதுதான் நந்தகுமாருக்கு எதிராகத் தன் கணவன் அமர்ந்திருப்பது தெரிந்தது. அவனுடைய முகத்தைப் பார்க்கத் திராணியில்லை. இலையையே பார்த்தபடி பரிமாறினாள்.

சந்தானம் சற்று அழுத்தமாகவே ''போதும் வினயா எனக்கும் இனிப்புப் பொங்கலில் விருப்பம் கிடையாது'' என்றான்.

வினயா கலவரத்துடன் அவனைப் பார்த்தாள். அவனோ பொங்கலில் இருந்த முந்திரிப் பருப்பை நிதானமாக எடுத்துக் கொண்டு இருந்தான்.

''நகரு, வினயா. வீட்டுக்காரரையே பார்த்துக் கொண்டு நின்றால் எப்படி? மற்றவர்களுக்கும் வயிறு நிரப்ப வேண்டாமா?'' என்று ரேவதி கேலி பேசினாள்.

வினயா மீண்டும் சமாளித்துக் கொண்டு நகர்ந்தாள். பொங்கலைப் பரிமாறி முடித்ததும் பாத்திரத்துடன் உள்ளே சென்றாள். உள்ளே இருந்து எடுத்துத் தந்து கொண்டிருந்த மாமியாரிடம், "எனக்குக் கால் வலிக்கிறது, அத்தை." என்றாள்.

"எங்கள் காலத்தில் எவ்வளவு வேலை செய்வோம்! இதற்குள் கால் வலி என்றால்..." என்று தொடங்கிய லெட்சுமி அம்மாள் வினயாவின் கலங்கிய முகத்தைப் பார்த்தார். "சரி தான், உள்ளே போய்ச் சற்று ஓய்வெடு. பச்சை உடம்பு. அலட்டிக் கொண்டால் நாளை படுத்துக் கொள்வாய்" என்று அனுப்பினார்.

வினயா தனது அறையில் சென்று அமர்ந்தாள்.

சற்று நேரம் சிந்தனைகூட ஓடவில்லை. பிறகுதான் நந்தகுமாரைப் பற்றிக் கணித்தது தவறு என்பதை உணர்ந் தாள். பழைய விஷயங்களைக் கிளற மாட்டான் என்று நினைத் தாளே; இப்போது பொங்கலைப் ப்ற்றிப் பேசி விட்டானே.

சந்தானம் தப்பாக நினைத்து விட்டானோ? நினைக்கா விட்டால் "எனக்கும்' என்று அந்த 'உம்' மில் அழுத்தம் கொடுத்து அவன் ஏன் பேச வேண்டும்? இப்போது என்ன செய்வது? அவளுக்குத் தலைவலி வரும் போல் இருந்தது. நெற்றிப் பொட்டை அழுத்திவிட்டுக் கொண்டாள். கண்களை மூடிக் கொண்டு படுக்கையில் சாய்ந்தபடி யோசித்தாள்.

மறைத்து வைத்தால்தானே வேதனை? சந்தானத்திடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் என்ன? அவன் தப்பாக ஏதேனும் எண்ணியிருந்தால், அது தெளிந்துவிடும் அல்லவா?

ஆனால், இன்னொன்று, அவன் ஒன்றுமே எண்ணாமல் இருந்து இவளாக ஏதேனும் சொல்லப் போக அது வீதியிலே போகிற வம்பை விலைக்கு வாங்கிய கதையாக ஆகிவிடக் கூடாதே. முத்தெடுக்கிறேன் என்று சேற்றைக் கலக்கிவிடக் கூடாதே!

இவளது விளக்கத்தை ஒப்புக் கொள்ள கணவன், மறுத்து விட்டால்? குற்ற மனதின் குறுகுறுப்பு என்று எண்ணி விட்டால்?



இப்படி நினைத்த போது சந்தானத்திடம் எதையும் சொல்லவும் வினயாவுக்குப் பயமாக இருந்தது.

சந்தானம் எந்த வழி செல்வான் என்று அவளால் உறுதி யாக எண்ண முடியவில்லை.

அவனை மதில்மேல் பூனையாக மதித்தாள். தன்னையே நொந்து கொண்டாள். முதலில் அவன் அவ்வளவு பிரியமாகப் பழகியபோதே அவளும் மனம் ஒன்றிப் பழகியிருந்தால் இப் போது அச்சப்படத் தேவையே இல்லையே. இல்லாத கதை யெல்லாம் நினைத்து எல்லாவற்றையும் கெடுத்துக் கொண் டாள். இப்போது, மணமாகி ஓர் ஆண்டு கழிந்த பிறகு ஒரு குழந்தைக்குத் தாயான பின்பு கணவனது குணம் புரியவில்லை என்று விழிக்கிறாள். வெட்கக் கேடு அல்லவா?

எப்படியும் சொல்லி விடுவது என்று வினயா முடிவு செய் தாள். நகத்தால் கிள்ளி எறியக்கூடிய முட்செடியை வளரவிடு வானேன்? புண்ணைப் புரையோட விட்டுவிட்டு, கத்தி கொண்டு அறுப்பானேன்?

விருந்தினர் எல்லோரும் சென்று விட்டனர். வீட்டினர் ஓய் கிற நேரம் சந்தானம் மட்டும் வாயிலில் தனியே நிற்பதை வினயா கண்டாள். உடனே அவனிடம் சென்றாள்.

"உங்களிடம் ஒன்று பேச வேண்டுமே" என்று தொடங் கினாள்.

"இன்று களைத்திருப்பாய், போய்ப் படுத்துக்கொள். எனக்கும் தூக்கம் வருகிறது" என்று அவளைப் பாராமலே உள்ளே போய் விட்டான், சந்தானம்.

வினயா விக்கித்து நின்றாள்.

# 6

# தேவதாஸ்

அவ்வளவு தூரம் உடல் களைத்த நிலையிலும் அன்றிரவு வினயா சரியாக உறங்கவில்லை. தூக்கம் வராமல் படுக்கையில்

புரண்டாள். எழுந்து கணவனிடம் சென்று பிடிவாதமாக அவனை எழுப்பிப் பேசலாமா என்று கூட ஒரு தரம் நினைத்தாள். ஆனால் காவலுக்குப் படுத்திருக்கும் அத்தையைத் தாண்டி அல்லவோ செல்ல வேண்டும். சே, என்ன அர்த்தமற்ற கட்டுப்பாடு; அதுவும் இந்த யுகத்தில் என்று ஆத்திரம் கூட வந்தது.

''அம்மாவின் கட்டுப்பாடுகளில் ஏதாவது அர்த்தம் இருக்கும், வினி. அப்படி இல்லாவிட்டாலும் பணிந்து போய் விடுவதே நல்லது,'' என்று கிடைத்த சில நிமிடத் தனிமையில் சந்தானம் சொல்லியிருந்தான். அது இப்போது நினைவு வந்தது.

''ஊ...ம்'' என்று பெருமூச்சுடன் திரும்பிப் படுத்தாள்.

''என்னடி. ஒரேயடியாக உருளாதே. எசகு பிசகாகப் பிடித்துக் கொள்ளப் போகிறது. பச்சை உடம்பு என்ற கவனமில்லை? ' என்று கண்ணைத் திறவாமலே லட்சுமி அம்மாள் அதட்டினார்.

மறு பேச்சின்றி அதற்கு பணிந்தாள். கொட்டக் கொட்ட விழித்து இருந்த போதும் அசையாது கிடந்தாள். கடைசியாக நித்திரை அவளை அடைகையில் மணி மூன்றடித்து விட்டது.

மறுநாள் எல்லோரும் நீட்டி நெளித்துக் கொண்டு அசதியுடன் நடமாடினர். எல்லோருக்குமே விழாக் களைப்பு—சோம்பேறித்தனம்.

வினயா அஞ்சிக் கொண்டே சந்தானத்தைப் பார்த்தாள். அவன் இயல்பாகச் சிரித்தான். உடனே இவளுக்கும் ஆனந்தம் பொங்கி விட்டது.

'கடுகை மலையாக்கி' என்பார்கள், அதுகூட இல்லாத ஒன்றைப் பூதமாக்கி பயந்தோம் போலிருக்கிறதே என்று எண்ணிக் கொண்டாள்.

இரண்டு நாட்களில் ரேவதி காஞ்சிக்குச் செல்வதாக இருந்தது. அவள் செல்லுமுன் ஒரு சினிமாவுக்குப் போகத் திட்டம் போட்டார்கள்.



''புதுப் படம் ஒன்றும் வேண்டாம், தம்பி. தேவதாஸ் வந்து இருக்கிறதாம். அதற்கே போகலாம்'' என்றாள் ரேவதி.

அவளுக்காகத்தானே சினிமாவே? ஆகவே அவளது விருப்பத்துக்கு 'அப்பீல்' இல்லாது போயிற்று.

எல்லோரும் தேவதாஸ் படம் பார்க்கப் போனார்கள். பிழியப் பிழிய அழுது விட்டு வந்தார்கள்.

''காசையும் கொடுத்துவிட்டுக் கண்ணீரையும் வடித்து விட்டு வந்தீர்களாக்கும்,'' என்று கேலி செய்தார், ரேவதியின் கணவர்.

''எப்பேர்பட்ட நடிப்பு! எவ்வளவு உயர்ந்த கதை?'' என்று வியந்தாள் ரேவதி.

''சரத்சந்திரருடைய கதைகள் எல்லாமே சிறந்தவைதான், அக்கா. கமலா என்று ஒரு கதை. நான் எத்தனை தடவைகள் படித்திருப்பேன் தெரியுமா? அவர் கதைகளை ஆழ்ந்து படிக்க வேண்டும். உண்மையான காதல், அதன் வேகம் எல்லாம் அவரது கதைகளைப் படித்தால்தான் நன்றாகப் புரியும்'' என்றாள், வினயா.

''எனக்கு இந்தப் படத்தில் நடிப்பு மட்டும்தான் பிடிக்கிறது. கதை கொஞ்சமும் நன்றாக இல்லை,'' என்று உரக்க அறிவித்தாள், அனுராதா!

''மக்கு என்னடி உளறுகிறாய்?'' என்று அதட்டினாள் ரேவதி.

''நான் ஒன்றும் உளறவில்லை,'' என்றாள். அனு, கோபத்தோடு. ''ஒன்று அவள் திருமணத்துக்கு மறுத்திருக்க வேண்டும். அல்லது மற்றவரை மணந்தபின் தேவதாசை அடியோடு மறந்திருக்க வேண்டும். இரண்டும் கெட்டானாக இது என்ன கதை?'' என்று ஆணித்தரமாக அவள் கேட்டாள்.

''இந்த வாண்டுக்கு இருக்கிற வாயைப் பாரேன்!'' என்று வியந்தாள் ரேவதி.

''நான் ஒன்றும் வாண்டு இல்லை எனக்கும் பதினாறு வயது ஆகிறதாக்கும். அதோடு நான் கேட்டதில் என்ன

தப்பாம்?'' என்று ரோஷத்தோடு கேட்டாள், அனு.

''இரண்டுமே தப்புதான்,'' என்றாள், வினயா. ''குடும்ப நிலவரம் காரணமாகக் காதல் ஒருபக்கம் கல்யாணம் ஒருபக்கம் என்று மற்றவனுக்குக் கழுத்தை நீட்ட நேரிடுவது உண்டு தான். மாட்டேன் என்று எல்லோராலும் மறுக்க இயலாது.''

''சரி போகட்டும். கழுத்தில் தாலி ஏறிய பிறகும் கணவனை விட்டு அடுத்தவனையே நினைக்கலாமா? பிறகு அவளுக்கும் வேசிக்கும் என்ன வித்தியாசம்?''

''அப்படிச் சொல்லாதே,'' என்று பதறினாள், வினயா. ''அந்த வார்த்தையெல்லாம் நீ பேசக் கூடாது, அனு. அதோடு மனம் என்பது புத்தகம் மாதிரி அல்ல. புத்தகத்தில் மறுபக்கத்தைப் புரட்டினால் முதல் பக்கம் அடியோடு மறைந்து போகும். நினைவில் ஒரு பகுதியை அடியோடு பூட்டுவது எளிதில்லை, மேலும். உண்மையான காதல் ஒரு போதும் அழிவதும் இல்லை,'' என்றாள் வினயா, வேகத்துடன்.

''ஆனாலும்...'' என்று அனு விடாமல் தொடங்கினாள்.

''போதும், இந்தப் பேச்சு. படம் பார்த்தால் பார்த்ததோடு முடிப்பார்களா? அல்லது, இப்படிச் சவப் பரிசோதனை செய்வார்களா? வேறு ஏதாவது பேசுங்கள்,'' என்றான் சந்தானம், அதட்டலாக.

பேச்சு மாறியது.

ரேவதி ஊருக்குச் சென்ற போது அனுராதா சென்னையிலேயே நின்று விட்டாள். அவளைக் கல்லூரியில் சேர்க்க வேண்டும். ''சென்னையிலேயே ஏதாவது பெண்கள் கல்லூரியில் படிக்கட்டும்,'' என்று சொல்லி விட்டார், லட்சுமி அம்மா.

முன்பே அவருக்கு அதே எண்ணம் தான், வயது வந்த பெண்ணை எவ்வளவு நாள் தான் தமக்கை வீட்டில் விடுவது? கிராமத்தில் தன்னோடு வைத்துக் கொள்ளலாம் என்றால், அங்கே படிப்புக்கு வழியில்லை. மகனுக்கு ஒரு மனைவி வரட்டும்; புதுக்கருக்கு மாறட்டும்; பிறகு மகளை அங்கே அனுப்பலாம் என எண்ணியிருந்தார். இப்போது பிள்ளையே பிறந்து ஆயிற்று. இனியும் அவர்கள் இளசுகள் அல்ல. அதோடு வினயாவும் குணம் மோசமில்லை. தைரியமாக அவளிடம் அனுவை விடலாம் என நினைத்தார்.



மேலும் ஒரு காரணமும் இருந்தது.

லட்சுமி அம்மா கிராமத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. கிராமத்தில் வாழைத்தார்கள் முற்றியிருக்கும். உடனிருந்து கவனிக்காவிட்டால் பாதி காரியக்காரர் வீட்டுக்குப் போய்விடும். ஆகவே, அவர் கட்டாயமாகக் கிராமத்துக்குச் சென்றாக வேண்டும். அப்படிச் செல்லும் போது வினயாவுக்கும் சந்தானத்துக்கும் இடையில் ஒரு நந்தியை வைத்துப் போக நினைத்தார். அவருடைய மகனும் மருமகளும் அறியாப் பெண் ஒருத்தி வீட்டில் இருக்கையில் அசட்டு பிசட்டு என்று நடக்கக் கூடியவர்கள் அல்ல. ஒரே ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போனால் போதும்.

திட்டமிட்டபடி அவர் கிளம்பினார். கிளம்புமுன் வினயா—சந்தானத்திடம் ஒரு சொற்பொழிவாற்றினார். "அனு சின்னப் பெண். அவள் மனதில் கண்ட நினைவுகளும் எழுந்து விடக் கூடாது. வெகு கவனமாக நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்...."

சந்தானம் சிரித்தான்.

''நிரம்பத் தெரிந்தவன் மாதிரி சிரிக்காதேடா'' என்று அதட்டினார், தாயார்.

''சரிதான் அம்மா. செல்விக்கு வயதாக வேண்டும். அதற்குள் அடுத்து ஒன்றும் வந்துவிடக் கூடாது. கவலையே வேண்டாம். இரண்டு ஆண்டுக்குள் நாங்கள் கிழவர்கள் ஆகிவிடப் போவது இல்லை'' என்றான் புன்னகையுடன்.

வினயாவின் சிவந்த முகம் நிமிரவே இல்லை.

''ஒரு வருடம் பார்க்காவிட்டாலும் பாப்பாவுக்கு ஏழெட்டு மாதமாவது ஆக வேண்டும் குறைந்தது ஆறாம் மாதம் சோறு ஊட்டும் வரையேனும்...''

''அதுதான் சரி என்றேனே, அம்மா'' என்று பொறுமை இழந்து சிடுசிடுத்தான் சந்தானம்.

அதன் பிறகுதான் அந்தப் பேச்சை லட்சுமி அம்மா நிறுத்தினார்.

''இந்த மருந்துகளை வாராவாரம் அரைத்துக்குடி'' என்று வினயாவிடம் கொடுத்தார்.

கடைசியாக அரை மனதாக ஊருக்குக் கிளம்பிச் சென்றார்.

அனுராதாவுக்கு கல்லூரியில் இடம் தேடினார்கள். ஒரு கல்லூரியில் சிரமப்பட்டு இடம் கிடைக்கும் போல இருந்தது. ஆனால், ''அங்கே படிக்க மாட்டேன்'' என்று அனு ஒரேயடியாக மறுத்து விட்டாள்.

''அங்கே வயிறு தெரியாமல் சேலை கட்ட வேண்டுமாம். முழங்கை வரை சட்டை போட வேண்டுமாம். நைலான் கட்டக் கூடாதாம். என்னை அங்கே சேர்ப்பதைவிடச் சன்னியாசி மடத்தில் சேருங்கள்'' என்றாள்.

''மறைக்கத்தானே உடை? அதை முறையாக சொல்லுவதில் என்ன தப்பு இருக்கிறது?'' என்று கேட்டான் சந்தானம்.

''மறைக்க வேண்டும் என்று சமுக்காளத்தை உடுத்துவார்களா? சுதந்திரம் கிடைத்து வெள்ளி விழாவும் கொண்டாடி முடித்தாயிற்று, இன்னமும் உடை சுதந்திரத்தில் கூடத் தலையிடலாம் என்றால் காந்தி அன்று சும்மாவே இருந்திருக்கலாம்.''

''நமக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த காந்தியே ஒரு முழத் துணிதானே உடுத்தினார்!'' என்று வினயா வினயமாகச் சொன்னாள்!

''அதற்காக உடம்பு...'' என்று தொடங்கி விட்டுச் சட்டென வாய் அடக்கினான் சந்தானம். தங்கையிடம் பேசக் கூடிய விஷயங்களுக்கு வரம்பு உண்டு. அதை மீறக் கூடாது.

தங்கையின் விருப்பம் போலவே வேறு கல்லூரியில் இடம் பிடித்தான், அவன்.

இதற்குள் பத்துப் பதினைந்து நாட்கள் ஓடிவிட்டன.

நந்தகுமாரின் வாடையே இல்லை. 'நல்ல வேளை' என்று வினயா நிம்மதி பெற்றாள்.



ஆனால், அந்த நிம்மதி நிலைக்கவில்லை. ஒரு நாள் சந்தானம் அலுவலகத்தில் இருந்து வந்த போது காரில் வந்து இறங்கினான், நந்தகுமார்.

தன் கலவரத்தை மறைத்தபடி ''வாருங்கள்'' என்றாள் வினயா.

'ஏன் வந்தான்?' என்று புலம்பியது மனம். சந்தானத்திடம் சொல்லாமல் தள்ளிப் போட்டு விட்டோமே என்று அச்சம் கொண்டாள். அந்தப் பயத்துடனேயே கணவனைப் பார்த்தாள்.

''அவருக்கும் சேர்த்து சிற்றுண்டி எடு,'' என்று கூறி விட்டு, சந்தானம் முகம் கழுவச் சென்றான்.

வினயா மனதை திடப் படுத்திக் கொண்டாள். அவசர அவசரமாக இரண்டு தட்டுகளில் வடைகளை எடுத்து வைத்தாள். தட்டுகளையும் இரண்டு தண்ணீர் தம்ளர்களையும் ஒரு 'ட்ரே' யில் வைத்தாள். எடுத்துக் கொண்டு, முன்னறைக்குச் சென்றாள். ''டீபாயில்'' தட்டை வைத்தாள்.

ஏதோ புத்தகத்தைப் புரட்டிக் கொண்டு இருந்தான், நந்தகுமார். வினயா வந்ததும் அவன் பார்வை அவள் மீது படிந்தது—முன் போலவே படிந்தது.

வினயா ஒன்றையும் கவனிக்கவில்லை. மடமடவென்று நந்தகுமாரின் அருகில் சென்றாள். ''மிஸ்டர் நந்தகுமார். நான் அவரிடம் உங்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நீங்களும் என்னைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளாமல் போய் விடுங்கள்,'' என்று தணிவான குரலில் அவசரமாகக் கேட்டுக் கொண்டாள்.

அவனது பார்வை இறங்கியது.

''அண்ணீ, யார் இவர்? இவரிடம் என்ன சொல்லிக் கொண்டு இருந்தீர்கள்?'' என்று கேட்டபடி அனுராதா உள்ளே வந்தாள்.

''அதுவா? முன்பே வினயா எனக்கு நிரம்ப பழக்கம். அதனால் நீங்கள் வந்ததில் மகிழ்ச்சி என்று சொல்லிக் கொண்டு இருந்தாள்,'' என்று தயங்காமல் சொன்னான், நந்தகுமார்.

# 7

# சொல்லத்தான் நினைக்கிறேன்

கல்லூரியிலிருந்து அப்போதுதான் அனு திரும்பியிருந்தாள். வந்தபோது ஒரு புது மனிதன் வீட்டில் இருப்பதும், அண்ணி அவனை நெருங்கிப் பேசுவதும் அவளுக்கு ஆவலை கிளப்பி விட்டு விட்டன. தான் வழக்கம் போலவே நினைத்ததைப் பட்டெனக் கேட்டும் விட்டாள்.

அந்தக் கேள்வியிலேயே வினயா பதறிப் போனாள். என்ன சொன்னால் இவள் சமாதானம் ஆவாள் என்று வினயா சிந்திக்கு முன் நந்தகுமாரே பதில் சொன்னான்.

அந்த பதிலில் வினயா இன்னமும் மிரண்டு போனாள். அவள் கேட்டுக் கொண்டது என்ன? இவன் நேர்மாறாகப் பேசுவது என்ன? பாவி! ''அப்படித்தானே வினு?'' என்று அவளிடமே கேள்வியும் கேட்டு விட்டான்.

மறுத்தால் அனுவுக்கு என்ன விளக்கம் சொல்வது? திணறிக் கொண்டே ''ஆ...ஆமாம்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள்.

முகம் துடைத்துவிட்டு சந்தானமும் வந்துவிட்டான். அவனும் கேட்டிருப்பான். கடவுளே!

அதற்குள் அனுவின் கவனம் இன்னொன்றில் பாய்ந்தது. ''அதென்ன அண்ணியை 'வினு, என்கிறீர்கள்?'' என்று விசாரித்தாள்.

''அவளை அப்படி அழைப்பது தான் எனக்கு வழக்கம்.'' என்றான் நந்தகுமார், வெகு இயல்பாக.

வினயா வாயடைத்துப் போனாள். ஏன் இப்படிப் பேசுகிறான் என்பது புரியாமல் திகைத்துத் திணறினாள்.



''வெளியிலிருந்து வந்தால் முகம் கிகம் கழுவாமல் வளவள வென்று என்ன பேச்சு?'' என்று தங்கையை அதட்டினான் சந்தானம்.

அதை ஏற்று அவள் உள்ளே சென்றாள்.

இதை நந்தகுமார் கவனித்துக் கொண்டான். அவனுடைய இதழ்களில் ஒருவகையாக சிரிப்பு பரவியது.

அவளது நல்ல வேளையோ பொல்லாத வேளையோ வினயா அவனைப் பார்க்கவில்லை. தன் முகம் மாறாமல் காப்பதில் அவள் முனைந்திருந்தாள். இன்னொரு 'டபாயை' எடுத்து ஒரு தட்டையும் தம்ளரையும் அதன் மேல் வைத்தாள். கை நடுக்கத்தில் தம்ளரைத் தவறவிட்டாள். இன்னொரு தம்ளரில் நீர் எடுத்து வந்தாள்.

அதற்குள் அனு ஆடை மாற்றிக் கொண்டு வந்தாள். கையோடு தனக்காக ஒரு தட்டில் வடையும் எடுத்து வந்தாள்.

''இந்த நிறம் உனக்கு மிக அழகாக இருக்கிறது அனுராதா'' என்றான் நந்தகுமார்.

அனுவுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. ''மெய்யாகவா சொல்லுகிறீர்கள்?'' என்று பெருமையோடு கேட்டாள்.

''சத்தியமாகச் சொல்லுகிறேன். அதோடு நான் பொய் பேசுவது கிடையாது,'' என்று உறுதியாகச் சொன்னான், நந்தகுமார்.

அனு சிரிப்போடு அவன் பக்கத்தில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தாள்.

''உட்காரேன், வினு. நீ மட்டும் நிற்கிறாயே'' என்று கரிசனம் காட்டினான் நந்தகுமார்.

வினயாவுக்கு முள்ளின் மீது நிற்பதுபோலிருந்தது.

''நான் காபி எடுத்து வரவேண்டும்'' என்று உள்ளே விரைந்தாள்.

அவளுக்கு மனம் ஆடிவிட்டது. இப்போது சந்தானத்திடம் எதைப்பற்றி என்ன கூற முடியும்? அனு வரும்போது வினயா நந்தகுமாரிடம் பேசியதற்கோ, அவன் 'வினுவு'க்குக் கூறிய விளக்கத்துக்கோ என்ன மறுப்புச் சொல்ல முடியும்? எல்லா

வற்றுக்கும் மேலாக, நந்தகுமார் ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்? பண்பு உள்ளவன் என்று நினைத்தாளே! அவன் வைக்கோல் போர் நாயாக மாறுகிறானே. அவனுக்கு வேண்டாதவளை மற்றவனும் வெறுக்க வழி வகுக்கிறானே. இது என்ன சோதனை?

சோதனைதான் வேதனைதான். கொண்டவனைச் சரணடையாமல் மற்றவனிடம் வேண்டுவானேன்? அவளுக்குத் தேவையான தண்டனைதான்.

''அண்ணீ, காபி கொண்டுவர எவ்வளவு நேரம்?'' என்று கத்தினாள் அனுராதா.

''நீயும் போய் எடுத்துவா, அனு'' என்றான் சந்தானம்.

''போங்கண்ணா எனக்கு ஒரே சோர்வாக இருக்கிறது. சும்மா வீட்டில் இருந்தவர்கள் தானே, அண்ணி. கூட ஒரு தடவை நடக்கட்டுமே,'' இருந்த இடத்தைவிட்டு நகராமல் அனு பதில் கூறினாள்.

நந்தகுமார் அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான். ''நீ... நீ என்று உன்னை அழைக்கலாமா, அனுராதா?'' என்று வினயமாகக் கேட்டான்.

''ஓ...தாராளமாக'' என்று களிப்போடு அனுமதி தந்தாள், அனு.

அந்த அனுமதிக்காக மிகமிக மகிழ்ந்தான். நந்தகுமார். ''உங்கள் தங்கை மிகவும் புத்திசாலி,'' என்றான், சந்தானத்திடம். பிறகு சந்தானத்தை அடியோடு மறந்தவன் போல அனுவிடம் பேச்சுக் கொடுத்தான். பேச்சில் அனுவின் விருப்பப் பாடம் ஆங்கிலம் என்பது வெளியாயிற்று.

''ஆகா! என்னிடம் சில ஷேக்ஸ்பியர் நாடகங்கள்—வெகு அருமையான விளக்கக் குறிப்புகளோடு கூடியவை—இருக்கின்றன. நாளையே கொண்டு வந்து தருகிறேன்,'' என்று முன் வந்தான், நந்தகுமார்.

''வேண்டாம் வேண்டாம். வீண் அலைச்சல் எதற்கு?'' என்று தன் எதிர்ப்பை மறைமுகமாகத் தெரிவித்தாள், வினயா.



''வீண் அலைச்சலா? வரப்பிரசாதம் அல்லவா? வரலாம் என்று அனுமதி கொடுத்தால் ஒரு நாளைக்கு நூறுமுறை ஓடி வரமாட்டேனா?'' என்று நாடக வசனம் பேசினான், நந்தகுமார்.

''அனுமதி என்ன, மிஸ்டர் நந்தகுமார்? இது என் அண்ணன் வீடு. எனக்காக வரு...புத்தகங்கள் கொண்டு வருகிறீர்கள், இதில் உங்களைத் தடுக்க யாருக்கு அதிகாரம் இருக்கிறது?'' என்று மிதப்பாக கேட்டாள், அனு.

''ஏன் இல்லை? உன் அண்ணா தானே வீட்டின் தலைவர்?'' என்று வினவினான் நந்தகுமார்.

''அண்ணா ஒன்றும் உங்களைத் தடுக்க மாட்டார். ஏன் அண்ணா, அப்படித்தானே?''

''நீங்கள் தாராளமாக வரலாம், நந்தகுமார்'' என்றான், சந்தானம்.

நந்தகுமாரின் கண்கள் வெற்றியுடன் வினயாவைப் பார்த்தன.

வினயா குழப்பத்துடன் தலைகுனிந்தாள். இவன் இப்படி நடந்து கொள்வானேன்?

சுரீரென்று அவள் மனதில் இன்னொன்று உறைத்தது. சந்தானம் எப்போதுமே கலகலப்பாகப் பேசுகிறவன்; இன்று அவன் கிட்டதட்டப் பேசவே இல்லையெனலாம். ஏன்?

யோசனையோடு வினயா கணவனைப் பார்த்தாள். அவன் விழிகளும் கூர்மையாக அவளைத் துளைத்தன. அந்தப் பார்வைக்கு ஈடு கொடுக்க முடியாமல் வினயா மீண்டும் தலை கவிழ்ந்தாள்.

''அனுவுக்காக உங்களுக்கு என் நன்றி,'' என்று சுருக்கமாக நன்றி செலுத்தினான் சந்தானம்.

''நன்றிதானே? அதை நீங்கள் வண்டி வண்டியாகத்தான் எனக்குத் தரவேண்டும். உங்கள் வினு கல்லணையில் அன்றே செத்திருப்பாள். கூட இருந்த நான் அவளைக் காப்பாற்றியிராவிட்டால் நீங்கள் அவளைப் பார்ப்பதேது? மணப்பதுதான் ஏது?'' என்று சிரித்தான் நந்தகுமார்.

வினயா குலுங்கிப் போனாள். பாவி, எல்லாவற்றையும் சொல்லுகிறானே! அதுவும் என்னமாதிரியாகச் சொல்லுகிறான்?

சந்தானம் சலனமற்றுச் சொன்னான். ''அப்படியா? உங்களுக்கு மிக்க நன்றி,''

''அட ஒரு பேச்சுக்குச் சொன்னேன். சந்தானம் மற்றபடி நன்றி கின்றி என்று நமக்குள் என்ன? ஆனால்...வினு உங்களிடம் இதைச் சொல்லாமலா இருந்தாள்! மற்றதைச் சொல்லா விட்டாலும் தண்ணீரில் மூழ்கியதையாவது சொல்லியிருப்பாள் என்று நினைத்தேன்'' என்று நந்தகுமார் ஆச்சரியமும் குழப்பமுமாகப் பேசினான்.

''அப்போ உங்களுக்கு நீந்தவும் தெரியுமா, நந்தகுமார்?'' என்று வியந்தாள், அனு.

''முன்பெல்லாம் அதை ஒரு பயிற்சியாகவே செய்து கொண்டிருந்தேன். வெளிநாடு போனபின் அதற்கெல்லாம் நேரமில்லை'' என்று அலட்சியமாகச் சொன்னான், நந்தகுமார்.

பேச்சு அப்படியே வெளிநாட்டை பற்றிக் கொண்டு சுற்றியது. கடைசியாக ஒருவழியாக நந்தகுமாரும் விடை பெற்றுக் கொண்டுபோய்ச் சேர்ந்தான்.

அனு பாடத்தை எடுத்துக் கொண்டு அமர்ந்தாள்.

அதற்குமேல் பொறுக்க மாட்டாமல் வினயா கணவனிடம் வந்தாள். அவ்வளவு நேரம் அவளுக்கு மனம் குமுறிக் கொண்டே இருந்தது. இந்த நந்தகுமார் எப்படி எல்லாம் திரித்துக் கூறுகிறான். ''மற்றதைச் சொல்லா விட்டாலும்'' என்று குறிப்பு கொடுத்து பேசுகிறானே. ஏதோ அவனும் அவளும் மட்டும் கல்லணைக்குச் சென்றது போல் தோன்றச் செய்துவிட்டானே சந்தானம் கூட அப்படித்தான் எண்ணியிருப்பான். இன்னமும் தள்ளிப் போடாமல் அவனிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும். இந்த முடிவுடன்தான் அவள் சந்தானத்திடம் வந்தது.

''கல்லணைக்கு நாங்கள் தோழிகளாகச் சேர்ந்து தான் குளிக்கப் போனோம்'' என்று சொல்லி விட்டாள்.

''ஓகோ. பிறகு?''

''பிறகு நான் நீரில் சிக்கிவிட்டேன் நந்தகுமார் காப்பாற்றினார்.''

''பிறகு?''

''பி...பி...பிறகு...ஒன்றும் இல்லையே,'' என்று தடுமாறினாள், வினயா.

சந்தானம் ஒன்றும் சொல்லாமல் எழுந்து சென்றான். போகிற போக்கில் உரக்க முணுமுணுத்தான். ''குழந்தையைப் பார்க்க ஆசையென்று வந்தார். கடைசியில் அவளை மறந்தே போனார்.''

வினயாவுக்கு அடி வயிற்றில் ஏதோ பிசைந்தது.

நந்தகுமார் அடிக்கடி வினயாவின் வீட்டுக்கு வந்தான். கலகலப்பாகப் பேசினான். சிரித்தான். அனுவுக்கு அதிகமாக 'ஐஸ்' வைத்தான். உடை அழகில் இருந்து குரல் அழகுக்கு வந்தான். பிறகு உறுப்பு அழகு. ''உதடுகள் ரொம்ப ரொம்ப அழகு, அனு. ஆனால், வினயாவுக்குக் கண்களில் காந்தம் இருக்கிறது,'' என்றான் ஒரு நாள். 'இல்லையா, சந்தானம்?' என்று அவனையும் சாட்சிக்கு இழுத்தான். ''உங்களைக் கேட்கவும் வேண்டுமா? தேன் குடத்தில் விழுந்த ஈ போல நீங்கள்தான் மயங்கிக் கிடக்கிறீர்களே... ஆனால் உங்களைச் சொல்லி குற்றமில்லை. அவள் கண்களின் சக்தி அது'' என்று சிறு பெருமூச்சுடன் முடிப்பான்.

குழந்தையைத் தூக்கி கொஞ்சுவான். ''அம்மா மாதிரி மயக்கச் சிரிப்பு'' என்பான். அனுவையும் விட்டு விடாமல் ''அத்தை மாதிரி அழகாக வளர வேண்டும்'' என்பான். அனுவும் உச்சிக்குளிர்ந்து போவாள்.

வினயா தவித்தாள். மெல்ல அனுராதாவிடம் பேசிப் பார்த்தாள். ''உரிமை உள்ளவர் போல உன்னை 'அனு' என்கிறாரே, அந்த நந்தகுமார். கேட்க நன்றாக இல்லை, அல்லவா?'' என்று தொடங்கினாள்.

"உங்களை வினு என்பவர் என்னை அனு என்றால் என்னவாம்?" என்று அவள் பட்டென்று கொடுத்தாள்.

அவளிடம் பேச முடியாமல் சந்தானத்திடம் திரும்பி வந்தாள். ஆனால், அவனை நெருங்கவே முடியவில்லை. அவள் அருகில் வந்தாலே அவன் விலகிச் சென்றான். அல்லது தீ போலக் காய்ந்தான். விழா அன்று முத்தமிட்டவன் இவன் தானா என்று வினயாவுக்குத் தோன்றியது.

இந்த நிலை கொஞ்சம் கொஞ்சமாக முற்றியது.

ஒருநாள் நந்தகுமார் அனுராதாவைத் தன்னுடன் சினிமாவுக்கு அழைத்தான்.

அதுவும் எப்படி?

# 8

## எப்படிச் சொல்வது?

அன்று சந்தானம் சற்று சீக்கிரமாகவே வீடு திரும்பினான்.

அவனுக்குக் கதவைத் திறந்து விட்ட வினயாவின் முகமெல்லாம் ஒரே சிரிப்பு.

லேசான ஆச்சரியத்துடன் அவன் புருவங்களை உயர்த்தினான்.

"வாருங்களேன், காட்டுகிறேன்" என்று உற்சாகத்துடன் அவனை உள்ளே அழைத்துச் சென்றாள், வினயா.

அறையில் செல்வி பாயில் குப்புறக் கிடந்தாள். "செல்லிம்மா, கண்ணு இதோ பார். இதோ..." என்று ஒரு பொம்மையை ஆட்டிக்காட்டினாள், வினயா, பிறகு, அதைக் குழந்தையின் முன்னே சற்று தூரத்தில் வைத்தாள்.

பொக்கை வாயில் சிரிப்புடன் செல்வி தன் கைகளை ஊன்றி உடலை முன்னே கொண்டு வந்தாள். நீந்துவது போல



இரண்டு மூன்று அசைவுகள். பொம்மை செல்வியின் பிஞ்சுக் கைகளில் சிக்கிக் கொண்டது. "ஆ... ஊ..." என்று கத்தியபடி தந்தையைப் பார்த்தாள்.

சந்தானம் பெருமையுடன் மகளைத் தூக்கிக் கொண்டான். "என் செல்லக் கண்ணு. அதற்குள் நீந்தக் கற்றுக் கொண்டதே," என்று முத்தமாரி பொழிந்தான்.

வினயாவுக்கும் ஒரே ஆனந்தம். வெகு நாட்களுக்குப் பின் கணவன் முகம் மலர்ந்து சிரிக்கிறானே. உள்ளம் துள்ளியது. 'ஆயிரம் நந்தகுமார்கள் வரட்டுமே. இந்த உறவை உடைக்க முடியுமா?" என்று நினைத்தாள்.

நந்தகுமார் என்றதும் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. கணவனுக்குச் சிற்றுண்டியை எடுத்த படியே யோசித்தாள்.

சந்தானம் மகிழ்வுடன் இருக்கிறான். இந்தத் தருணத்தில் தன் கதையை ஆதியோடு அந்தமாகச் சொல்லி விட்டால் என்ன? போனால் போகிறது என்று மன்னித்துவிட மாட்டானா?

அச்சமும் துணிவும் மனதில் அலை பாய அவள் முன்னே வந்த போது மணி ஐந்தரை ஆகி விட்டது. அப்பொழுது அனுவின் குரலும் வாயிலில் கேட்டது.

அனு தனியாகவும் வரவில்லை. நந்தகுமாரும் வந்திருந்தான்.

அவனோடு அனு தனியாகக் காரில் வரும் அளவிற்கு முதிர்ந்துவிட்டதே என்று வினயா துணுக்குற்றாள். அதைக் காட்டிக் கொள்ளாமல், "வா, அனு. டிபன் சாப்பிடு" என்றாள்.

"வேண்டாம், அண்ணி. வருகிற வழியில் 'டிரைவ் இன்' ஓட்டலில் பாசந்தியும் பக்கோடாவும் சாப்பிட்டோம்," என்று பயமற்று சொல்லி விட்டு அவள் உள்ளே சென்றாள். செல்லு முன், நந்தகுமாரின் பார்வையை அவளது பார்வை சந்தித்துப் பிரிந்தது.

இந்தப் பார்வை பரிமாறலை வினயா கவனித்தாள். கண்டிக்கும் உரிமை உள்ள கணவனைப் பார்த்தாள், அவன் முகம் இறுகி விட்டிருந்தது. அவன் ஏதோ சொல்ல வாயெடுக்குமுன் நந்தகுமார் முந்திக் கொண்டான்.

"இன்றுதான் வரும் வழியெல்லாம் கவனித்துப் பார்த்தேன், சந்தானம். ஒரே சினிமா போஸ்டர்கள் மயம். வேறு ஒன்றுமே கிடையாது, இன்னொன்று வினு..." என்று வினயாவின் பக்கம் திரும்பினான். "பாபு படம் இங்கே அடுத்த ரவுண்டு வந்திருக்கிறது. உனக்கு நினைவு இருக்கிறதா? கேட்கிறேன், பார். அதெல்லாம் மறக்கிற விஷயமா? நீ திருச்சியில் அந்தப் படம் பார்த்து விட்டுக் கண்ணெல்லாம் சிவக்க அழுதாயே," சிரித்தபடி மீண்டும் சந்தானத்திடம் திரும்பினான் "வினுவுக்கு நிரம்பவும் இளகிய மனம். அவள் வடித்த கண்ணீரில் அவளது கைக் குட்டை முழுக்க நனைந்து போயிற்று. பிறகு நான் என்னுடையதை.... கொடுத்தேன். ம்... அது ஒரு காலம்..." என்று முடித்தான்.

"இப்போது கூட நல்ல படங்கள் நடக்கின்றன." என்றபடி வந்து சேர்ந்து கொண்டாள், அனு.

"என்ன படம்—அந்த 'நீயும் நானும்' மிகவும் பிரமாதம்" என்றான், நந்த்குமார்.

"நீங்கள் பார்த்து விட்டீர்களா? எனக்கு பிடித்த நடிகர்கள். நான் கட்டாயம் பார்க்க வேண்டும் என்று நினைத்தேன்..."

"உனக்காக அந்தப்படத்தை இன்னொரு தடவை பார்க்கவும் நான் தயார். வருகிறாயா, போகலாம்" என்று அனுவை அழைத்தான், நந்தகுமார்.

"ஓ, நான் தயார்!" என்று குதித்தாள், அனு.

'ஊகூம். வேண்டாம்' என்று அவசரமாக மறுத்தாள், வினயா.

அனுராதா தலையைச் சிலுப்பிக் கொண்டு திரும்பினாள். "ஏனாம்?"



"நீ சின்னப் பெண்ணம்மா. அன்னிய ஆண்களோடு தனியே..."

"ஏன் நீங்கள் பாபு படம் பார்க்கப் போகவில்லை? ஊருக்குத்தான் உபதேசம், உங்களுக்கு இல்லையா?" என்று கண்ணில் பொறிபறக்கக் குறுக்கிட்டாள், அனு.

"நான் அவரோடு தனியே செல்லவில்லை," வாய்ப்புக் கிடைத்ததை நழுவ விடாமல் வினயா சொன்னாள். "அவருடைய தங்கை வாணி என்னோடு படித்தவள். அவளும் நானுமாகத்தான் போனோம்" என்று விளக்கினாள்.

"மெய்யாகவா?" என்று அண்ணியை நம்பாமல் நந்தகுமாரை வினவினாள், அனு.

அவனோ வருந்துவது போன்ற புன்னகையுடன், "உன் அண்ணி சொன்னால் ஒப்புக்கொள்ளேன், அனு," என்றான்.

"முடியாது" திட்ட வட்டமாக அறிவித்தாள் அனு. "நான் இன்று உங்களுடன் சினிமாவுக்கு வரத்தான் போகிறேன்" என்று பறைசாற்றிவிட்டு, ஒப்பனை செய்து கொள்ள உள்ளே சென்றாள்.

மடியில் தூங்கிவிட்ட குழந்தையைத் தூக்கிக் கொண்டு சந்தானமும் உள்ளே சென்றான்.

நந்தகுமாரை வெட்டுவது போல பார்த்துவிட்டு வினயாவும் கணவனைத் தொடர்ந்தாள்.

"அனு இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாளே. நான் சொன்னால் கேட்கவில்லையே."

வினயாவின் கவலையையோ பதட்டத்தையோ சந்தானம் கவனித்ததாகத் தெரியவில்லை. தன் போக்கில் செல்விக்கு நிதானமாகப் போர்த்தி விட்டான்.

"நீங்கள்கூட நான் சொல்ல சொல்லக் கேளாதது போல் இருக்கிறீர்களே. அவளைத தடுத்து நிறுத்துங்கள் அத்தான்." என்று எரிச்சலும் அலுப்புமாக வினயா சற்று அழுத்திச் சொன்னாள்.

அவளைப் பாராமலே சந்தானம் கேட்டான். ''எப்படித் தடுப்பது?''

''எப்படித் தடுப்பது என்றால்...? உங்கள் பேச்சைக்கூட அவள் கேட்க மாட்டாளா?''

''கேட்பாள்தான். என் சொல்லைத் தட்ட மாட்டாள் தான். ஆனால் சொல்வது எப்படி?''

வினயா புரியாமல் விழித்தாள். ''எப்படிச் சொல்வது என்றால்...போகாதே அம்மா, அன்னியரோடு இரவில் சுற்று வது தவறு என்று எடுத்துச் சொல்லுங்கள்.''

சந்தானம் சரேலென்று திரும்பி அவளைக் கண்களாலேயே கொன்று விடுபவன் போலப் பார்த்தான். ''அதுதான் எப்படிச் சொல்லுவது என்று கேட்கிறேன். உனக்குப் புரியவில்லை? என் தங்கைக்கு நல்ல வழி காட்ட முடியாமல் என்னை தடுப்ப வளே நீதான் வினயா, நீதான்.''

''நானா?''

''ஆமாம் நீயே தான். ஆனால், உன் நிலை என் தங்கைக்கு நேர்ந்து விடக்கூடாது பார். அதனால் நானும் அவர்களோடு கூடப்போய்த் தொலைக்கிறேன்.''

அதுவரை கண்டறியாத கோபத்துடன் சந்தானம் பேசி னான். வினயா அதிர்ச்சியடைந்தாள்.

''நா...ன் மெய்யாகவே வா... வாணியுடன் தான்...'' திக்கித் திணறுவதைக் கேட்க சந்தானம் அங்கே இல்லை. அவன், தனது அறைக்குள் சென்று கதவைச்சாத்தி விட்டிருந் தான்.

இடி விழுந்தது போல வினயா நிலைகுலைந்து நின்றாள். முதல் தடவையாகச் சந்தானத்தின் சீறலைச் சந்தித்தது மட்டும் அதற்குக் காரணம் அல்ல. அவளுடைய கணவன் அவள் சொல்வதைக் கொஞ்சமும் நம்பவில்லையே. அந்த நச்சுப் பாம்பு நந்தகுமாரை அல்லவோ நம்புகிறான். அந்தப் பாம்பின் நச்சு தலைக்கேறி விட்டதுபோல் தோன்றுகிறதே.



''கதவைத் தாளிட்டுக் கொள்,'' என்ற சந்தானத்தின் குரல் அரை குறையாக வினயாவின் காதில் விழுந்தது. விழுந் தடித்து வாயிலுக்குள் ஓடினாள். நந்தகுமாரின் கார் சிவப்பு விளக்குகள் தான் அவள் கண்ணுக்குத் தெரிந்தன.

ஆற்றுவாரின்றித் தேற்றுவாரின்றி அங்கேயே சோபாவில் விழுந்து விம்மி அழத் தொடங்கினாள்.

அந்த ஒரு சீறலுக்குப் பிறகு கணவனை நெருங்கிப் பேச வினயாவுக்கு அச்சமாக இருந்தது.

நாத்தனாரிடமே புத்தி சொல்லிப் பார்த்தாள். ''அனும்மா, அந்த ஆளோடு நிரம்பப் பழகக்கூடாது, அம்மா, அவர் நல்லவர் அல்லம்மா,'' என்று இதமாக எடுத்துச் சொன்னாள்.

''எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?'' என்று பட்டுக் கத்தரித்தாற் போல அனுராதா வினவினாள்.

வினயா, ஒரு பெருமூச்சு விட்டாள்.

இவளிடம் உடைத்துச் சொல்லிவிட்டால் என்ன? அதன் பிறகேனும் புரிந்து கொள்ள மாட்டாளா? ஏதோ அவளேனும் மீண்டால் சரிதானே. தான் அனுபவித்த பழைய வேதனைகள் நினைவு வந்தன. அப்பப்பா அவையெல்லாம் இந்த வெகுளிப் பெண்ணுக்கும் நேருவானேன்? மனதைத் திடப்படுத்திக் கொண்டு மெல்லிய குரலில் கூறினாள். ''தெரிந்துதான் அனும்மா சொல்லுகிறேன். அந்த நந்தகுமார் முன்பு என்னிட மும் இப்படித்தான் பழகுவார்.''

கண்கள் பளபளக்க ''நினைத்தேன்'' என்று அனு வெற்றிக் குரலில் கூவவும் வினயா திகைப்புடன் பேச்சைப் பாதில் நிறுத்தினாள்.

''நான் நினைத்தது சரியாகிப் போயிற்று,'' என்றாள் அனு. ''நந்தகுமார் அன்று உங்களிடம் பழகினார். ஆனால், இன்று? இன்று அவருக்கு உங்களைப் பிடிக்கவில்லை உங்களை மதிக்காமல் என் அழகில் லயித்துவிட்டாரே என்று உங்களுக்குப் பொறாமை பிறந்துவிட்டது. அப்படித்தானே அண்ணி? அதை

மறைக்க எனக்காக உருகுவது போல நடிக்கிறீர்கள். ஆகா! ஆகா! என்ன அன்பு! என்ன பரிவு! அண்ணி, எனக்குச் சின்ன வயதிலேயே காது குத்திவிட்டார்கள். இனி நீங்கள் வேறு குத்த வேண்டாம்'' என்று எகத்தாளமாகப் பேசிவிட்டுத் திரும்பியவள் சற்று நின்றாள். ''இதோ பாருங்கள் அண்ணி. நான் குழந்தை அல்ல. எனக்கும் பதினாறு வயது நிரம்பி விட்டது. கல்லூரியில் வேறு படிக்கிறேன். என்னைக் கவனித்துக் கொள்ள எனக்கே ... நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள் ... எனக்கே தெரியும். நீங்கள் அனாவசியமாக உருகி வழியத் தேவையில்லை. இனியும் என் காரியங்களில் தலையிட்டீர்களானால் நன்றாக இராது ஜாக்கிரதை.'' என்று எடுத்தெறிந்தாற் போலப் பேசிவிட்டுப் போனாள் அனுராதா.

வினயா செயல் இழந்து நின்றாள்.

இப்போது என்ன செய்வது? கணவனிடம் பேசிப் பயன் இல்லை என்றுதான் அவனுடைய தங்கையிடம் முயன்று பார்த்தாள். ஆனால், அவனே மேல் என்று ஆக்கி விட்டாள் இவள். ஆக, யாரிடம் முயன்றாலும் பலன் ஒன்றுதான். எந்த வழியில் சென்றாலும் பாறையில் மோதிக் கொண்டு மண்டை உடைவதாகவே இருக்கிறது.

இதன் முடிவுதான் என்ன?

அவளது வாழ்வும் அந்த அறியாப் பெண்ணின் வாழ்வும் என்ன ஆவது?

# 9

# புரியாத மொழி

வினயாவின் துன்பமும் துன்பத்தின் காரணமும் மேலும் மேலும்வளர்ந்து விசுவரூபம் எடுக்கலாயின.

சினிமா—நாடகம் என்று நாடகமாடிய நந்தகுமார் கடைசியாக மகாபலிபுரத்து ''பிக்னிக்'' என்ற நாடகத்தைத் தொடங்கினான்.



இந்தப் ''பிக்னிக்'' கைத் தடுக்க வினயா செய்த முயற்சிகள் பயன்தரவில்லை. அனுவிடம் அவளது மன்றாடல் விழல் நீராயிற்று. சந்தானத்திடமோ வினயாவால் நெருங்க முடியவில்லை. அனு, நந்தகுமார் இருவருடனும் வெளியே சுற்றிய நேரம் போக சந்தானம் வீட்டில் இருப்பதே அரிதாயிற்று. அப்படி இருந்தாலும் வினயா அவன் அருகே வந்தால் போதும், நான் சிகரெட் பிடிக்க வேண்டும்'' என்று எழுந்து வெளியே சென்று விடுவான். (செல்விக்கு சிகரெட்டுப் புகை ஆகாது என்று அவன் வீட்டினுள் புகை பிடிப்பது இல்லை) அப்படியும் மீறி வினயா பேசத் தொடங்கினால், எதையாவது பிடித்துக் கொண்டு அவளிடம் எரிந்து விழுந்தான். அவனது சொற்களின் சூடு தாங்காமல் வினயா கண்ணீரோடு திரும்பி விடுவாள்.

எத்தனையோ முயற்சிகள் பலனின்றிப் போனது போலவே இம் முறையும் வினயாவின் முயற்சி பலனின்றி போயிற்று. அனுராதா மகாபலிபுரம் செல்வது உறுதியாயிற்று. அதிலும் ஓர் ஆறுதல், தங்கையின் காவலாகச் சந்தானமும் செல்லுகிறான். ஆகவே. அனுவுக்கு ஆபத்து ஏதும் நேராது.

அனுவுக்கு ஆபத்து இல்லை. சரிதான் ஆனால் அவளது சொந்த வாழ்வு? அது நாளுக்கு நாள் மேலும் மூழ்கும் கப்பலாகிறதே. அதைக் காப்பாற்ற ஒரு வழியும் தெரியவில்லையே. வினயாவுக்கு மனம் கலங்கியது. ஆனாலும் பரவாயில்லை என்று மனதைத் தேற்றிக் கொண்டாள். இப்போது முதல் முக்கிய விஷயம் அனுவின் விஷயம். பிறகு வினயாவுக்குத் தான் வாழ்க்கை முழுவதும் இருக்கிறதே. பார்த்துக் கொள்ளலாம். என்றைக்குமேயா இந்த நந்தகுமார் கூடவே இருந்து குடி கெடுப்பான்?

கொஞ்சம் ஆறுதலுடன் தன் வேலைகளை வினயா கவனிக்கலானாள். ஆனால், இந்த ஆறுதலிலும் இடிவிழுந்தது.

காலாண்டு விடுமுறை அனுவுக்கு அந்த புதன் கிழமையிலிருந்து தொடங்கியது. அன்றே மகாபலிபுரம் செல்வதாகவும் திட்டம் போட்டார்கள். சந்தானமும், நந்தகுமாரும் அன்று

மட்டும் விடுமுறை எடுப்பதாக தீர்மானம்.

அந்தத் தொழிற்சாலையின் உற்பத்திப் பிரிவில் நந்த குமார் வேலை செய்தான். சந்தானம் அலுவலகப் பிரிவு. உற்பத்திக்கு உரிய கச்சாப் பொருள் வந்ததில் ஒரு தவறு ஏற்பட்டு விட்டது. இந்தக் கச்சாப் பொருள் பற்றிய பைலைச் சந்தானம் கவனித்து வந்தான். இப்போது பொருளில் தவறு ஏற்பட்டுவிடவே அது சம்பந்தமான பைல்களை எல்லாம் எடுத்து முழு 'ரிப்போர்ட்டு' ஒன்றை...அதுவும் உடனடியாக... அனுப்ப வேண்டிய வேலை அவனுக்கு ஏற்பட்டு விட்டது. அதனால் அவனது புதன்கிழமை விடுமுறை ரத்தாகி விட்டது.

திங்கள் அன்று மாலையில் சந்தானத்துடன் நந்தகுமாரும் வந்தான். போகிறபோது, ''அதனால் என்ன சந்தானம். நீங்கள் இன்னொரு முறை வாருங்கள். இப்போது அனு ஏமாற்றம் அடையாதபடி நானும் அவளும் சென்று வருகிறோம்,'' என்றபடி காரைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டான்.

''வேண்டாம் வேண்டாம், நீங்கள் உடன் செல்லாதபடி அனு மட்டும் போக வேண்டாம்.'' என்று பதட்டத்துடன் மறுத்துக் கூறினாள் வினயா.

அவ்வளவு தான், அனு பிரமை தாண்டவம் ஆடி விட்டாள். ''நான் சற்று மகிழ்ச்சியாக இருந்தால் அண்ணிக்கு ஆகாது,'' என்று அண்ணனிடம் முறையிட்டு அழுதாள்.

''அவர் என்னோடு பேசுவதைக் கண்டு அண்ணிக்குப் பொறாமை,'' என்று அண்ணனிடம் கோள் முட்டினாள்.

''நீங்கள் மட்டும் கல்லணைக்கு அவரோடு செல்லவில்லையா? என்னை மட்டும் தடுப்பானேன்?'' என்று அழுத்தமாகக் கேட்டாள்.

''நான் தனியே அவருடன் செல்லவில்லையம்மா'' மிகவும் சிரமத்துடன் பொறுமையைக் கடைப் பிடித்தாள் வினயா. ''நாங்கள் தோழிகளாகச் சேர்ந்து...''

''அப்படி நீங்கள்தானேசொல்லிக் கொள்ளுகிறீர்கள்,'' என்று அனு அலட்சியமாகச் சொன்னாள்.



''உங்கள் தீவிரத்தைப் பார்த்தால் எனக்கு என்னென்வோ தோன்றுகிறது. அண்ணி ஒரு வேளை கள்ளனுக்குத் திருட்டுப் புத்தியா?'' என்று குத்தலாகக் கேட்டாள்.

''அனு!'' என்று கத்தினாள் வினயா. ''நான் மெய்யாகத் தான்...'' அதற்குள் வினயாவின் பார்வை சந்தானத்தைச் சந்தித்தது. அவன் பார்வை! கடவுளே...இந்த வினயா ஏன் இன்னமும் செத்துச் சுண்ணாம்பாகவில்லை?

''விடுமுறை கிடைக்குமா என்று இன்னொரு தடவை முயன்று பார்க்கிறேன், அனு'' என்றான் சந்தானம்.

''கிடைக்காவிட்டால்?'' அனுவின் குரல் ஆத்திரமிகுதியில் கிரீச்சிட்டது.

சந்தானம் ஒரு பெருமூச்சு விட்டான். 'அதை நாளை பார்க்கலாம் அனு,'' என்றான் அயர்வுடன்.

''உங்களுக்கு விடுமுறை கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் நான் நிச்சயமாக மகாபலிபுரம் போகிறேன் அண்ணா, உங்கள் பெண்டாட்டி பேச்சைக் கேட்டு என்னைத் தடுக்க முயலாதீர்கள்,'' என்று அழுத்தம் திருத்தமாக் கூறிவிட்டுத் தன் அறையை நோக்கி நடந்தாள் அனு

அவள் சென்றதும் வினயா சந்தானத்திடம் ஓடிவந்தாள், சந்தானம் சிகரெட்டுக்காகப் 'பான்ட்' பாக்கெட்டைத் தடவினான். அதைக் கண்டதும் அவளுக்கு ஆத்திரம் மிஞ்சிவிட்டது.

''இந்த நிலையில் கூடவா நீங்கள் இப்படி ஒடுகிறீர்கள்? அவள் சொன்னதைக் கேட்டீர்கள் அல்லவா? இதற்கு ஒரு வழி செய்யாமல்...''

சந்தானமும் சினத்துடன் அவளை இடை மறித்தான். ''அவள் சொன்னதை நீயும் கேட்டாய் அல்லவா? கூடவே அவள் கேட்டதும் காதில் ஏறிற்று அல்லவா? அவளது கேள்விகளுக்கு உன்னால் பதில் சொல்ல முடிந்ததா? இதற்கு மேலும் வழி எங்கே என்று என்னிடமே கேட்கிறாயா? வழியை அடைத்தவளே வழியைத் தேடுகிறாளாம் வேடிக்கை தான்.'' வெறுப்பும் கோபமுமாகப் பொரிந்து தள்ளி விட்டு சந்தானம் வெளி

யேற முயன்றான்.

வினயா தன்னை மறந்தவளாக ஓடிச்சென்று அவன் கையைப் பிடித்துத் தடுத்தாள். ''என்னை நம்புங்கள்...''

''சை!'' சந்தானம் கையை உதறிய வேகத்தில் வினயா எங்கோ சென்று விழுந்தாள். அவன் திரும்பிப் பாராமல் வெளியே சென்று விட்டான்.

அன்று இரவு அந்த வீட்டில் யாருமே சாப்பிடவில்லை. இரவு முழுவதும் சிந்தித்து வினயா ஒரு முடிவுக்கு வந்தாள்.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து வேலைகளைக் கவனித்தாள். சமையல் முடிந்தது. பாத்திரங்களில் எடுத்து மேசை மீது வைத்தாள். சுமார் எட்டரை மணியிருக்கும் உடை மாற்றிக் கொண்டு குழந்தையையும் தூக்கிக் கொண்டு கிளம்பினாள் வினயா.

''சாப்பாடு எல்லாம் மேசை மேல் இருக்கிறது. இருவரும் சாப்பிட்டுவிட்டுப் போங்கள்,'' என்றாள் பொதுவாக, ''நான் டாக்டரிடம் போய்விட்டு வருகிறேன். செல்விக்கு லேசாக உடம்பு சரியில்லை,'' என்றாள் கணவனிடம்.

கவலையுடன் சட்டெனக் குழந்தையைத் தொட்டுப் பார்த்தான் சந்தானம்.

சிரித்துக் கொண்டே தந்தையிடம் தாவினாள் செல்வி.

சந்தானம் மனைவியைப் பார்த்தான்.

அவள் முகம் சிவந்தது. கண்கள் தரையை நோக்கின. ''இரவில் லேசான சுரம் அடித்தது...'' என்று முணுமுணுத்தாள்.

''ஓ...நானும் கூடவரவா?'' அவன் பார்வை வினயாவின் முகத்திலிருந்து நீங்கவில்லை.

வினயா பதட்டத்துடன், ''இல்லை, நானே போய்விட்டு வருகிறேன்,'' என்று அவசரமாக சொன்னாள்.

சந்தானம் விலகி வழி விட்டான். ''சரிதான் சென்றுவா,''



ஒரு வினாடி காலம் வினயா தயங்கி நின்றாள். பிறகு மடமடவென்று வெளியே சென்றாள்.

வீட்டை விட்டுச் சற்று தூரம் சென்றதும் ஒரு வாடகைக் காரில் ஏறினாள். நந்தகுமாரின் முகவரியைச் சொன்னாள்.

வண்டி செல்லச் செல்ல மனதில் ஏனோ ஒரு பரபரப்பு உண்டாயிற்று. அங்கே செல்லவே பிடிக்கவில்லை. திரும்பி விடலாமா என்றுகூட ஒரு கணம் நினைத்தாள். ஆனால், தொடங்கியாயிற்று; இனி முடிவு காணாமல் விடுவானேன் என்று தொடர்ந்து சென்றாள்.

ஆம் சாட்சிக்காரன் காலில் விழுவதை விடச் சண்டைக்காரன் காலிலேயே விழுந்துவிடுவது மேல் என்று தான் வினயா நந்தகுமாரின் வீட்டுக்குக் கிளம்பினாள்.

''ஏன் இப்படி நாரதர் வேலை செய்கிறாய்?'' என்று நேரிலேயே கேட்டு விடுவது,

'அனு அறியாப் பெண், பேதை. அவள் மனதைக் கெடுத்து விடாதே' என்று வேண்டிக் கொள்வது;

''தயவு செய்து எங்களை வாழவிடு' என்று கெஞ்சி மன்றாடுவது.

இப்படியெல்லாம் மனதில் ஆயிரம் ஒத்திகை பார்த்துக் கொண்டு சென்றாள், வினயா. நந்தகுமாரின் வீட்டை அடைந்ததும் வாடகைக்காரை அனுப்பினாள். மனதைத் திடப்படுத்திக் கொண்டு படியேறினாள்.

நந்தகுமாரின் வரவேற்பு அவள் எதிர்பாராத விதமாக இருந்தது. வாயிலுக்கே வந்து வரவேற்றான், ''வா வா வினு, உள்ளே வா, உட்கார். உன் வரவை எத்தனை நாளாக எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிறேன் தெரியுமா? கடைசியாக இன்றுதான் உனக்கு கருணை பிறந்ததா? இப்போது என்ன சாப்பிடுகிறாய்? காப்பியா? ஓவல்? ஆர்லிக்ஸ்? எது வேண்டுமானாலும் சொல். கொண்டு வரச் சொல்கிறேன்'' என்று ஏகப்பட்ட உபசாரம் செய்தான்.

''ஒன்றுமே வேண்டாம்'' என்றாள் வினயா மெல்லிய குரலில். உள்ளூர மனதில் ஏதோ உறுத்தியது. ''என்... என் வரவை எதிர்பார்த்ததாகச் சொன்னீர்களே, எப்படி?''

''ஓ அதுவா? அதை அப்புறம் சொல்லுகிறேன்,'' என்று நமட்டுச் சிரிப்புச் சிரித்தான், நந்தகுமார். ''இப்போது ஏதாவது குளிர்பானமாவது அருந்துகிறாயா?''

''எனக்கு எதுவும் வேண்டாம்'' என உறுதியாக மறுத்தாள் வினயா. ''என் கேள்விக்கு பதில் சொல்லுங்கள்போதும்.''

கால்மேல் கலைப் போட்டுக் கொண்டு வசதியாக, ஸ்டைலாக உட்கார்ந்தான் நந்தகுமார். பிறகு ''சொல்லாவிட்டால் விடமாட்டாய். சொல்லி விடுகிறேன். உன் குடும்பத்தில் மனவேற்றுமை தொடங்கியதுமே வருவாய் என்று எதிர் பார்த்தேன். அழுத்தக்காரி, நீ வரவில்லை. பிறகு அனுவுக்காக வருவாய் என்று நினைத்தேன். அப்போதும் நீ வரவில்லை. இப்போது சந்தானத்துக்குப் புது வேலை வந்து விட்டதே. அதனால் கட்டாயமாக இங்கே உன் வரவை எதிர்பார்த்தேன். நல்லவேளை இந்த முறையும் ஏமாற்றாமல் வந்துவிட்டாய்,'' என்று திருப்தியுடன் விளக்கினான்.

ஏதோ தோன்றவும், ''அவருக்கு வேலையை இழுத்து வைத்ததும் நீங்கள்தான். அப்படித் தானே?'' என்று வினயா கேட்டாள்.

''அப்படித்தான் என்று வைத்துக் கொள்ளேன்,'' என்று சிரித்தான் அவன்.

''உண்மையில் அந்த மூலப் பொருளில் ஒரு கெடுதலும் இல்லை...?

''அதில் எதையாவது கலப்படம் செய்து கெடுப்பது வெகு எளிது வினு...அது போகட்டும். உன் விஷயத்துக்கு வருவோம். நான் சொன்னது சரிதானே?'' என்று முன்னே சரிந்து இரகசியச் சிரிப்புடன் கேட்டான்.

வினயா உதட்டைக் கடித்துக் கொண்டு தலை குனிந்தாள்.



''ம்ம்...? சொல்லேன் வினு'' நந்தகுமாரின் குரல் குழைந்தது.

வினயா சட்டென அவனை நிமிர்ந்து பார்த்தாள். உடல் குறுக சேலை சரியாக இருக்கிறதா என்று கவனித்தாள். அவன் பார்வையும் சிரிப்பும்! அனுவை வளைக்க முயல்கிறவன். அவளை ஏன் இப்படிப்பார்க்கிறான்? அவளது மனதில் குழப்பம் மண்டியது. சமாளித்துக் கொண்டு தான் சொல்ல வந்ததை மடமடவென்று ஒப்பித்தாள்.

''மிஸ்டர் நந்தகுமார், அனு மிகவும் சின்னப் பெண் வெகுளி. அவள் மனதைக் கெடுத்து விடாதீர்கள். அவள் தாங்க மாட்டாள். தயவு செய்து அவளை விட்டு விலகி இருங்கள்.''

''ஓ. தாராளமாக'' என்று நந்தகுமார் உடனே ஒப்புதல் அளிக்கவும் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவன் மறுப்பான்; தகராறு செய்வான் என்று பயந்து கொண்டு வந்தாளே, திகைப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் முகத்தில் அதே பார்வையும் சிரிப்பும்.

உடல் குறுக நீங்கள்...நீங்கள்...'' என்று தடுமாறினாள்.

''நான் மெய்யாகத்தான் சொல்லுகிறேன் வினு. அனுவை நான் விரும்பியதே இல்லை. எனக்கு வேண்டியது அவள் அல்ல. நீதான்,'' என்று நிதானமாக சொல்லி முடித்தான், அவன்

அவன் பேசிய மொழி புரியாதவள் போல விழித்தாள் வினயா,

## 10

## உடன் பிறவாத சகோதரி

திருமணம் ஆன ஒரு பெண்ணிடம், அதுவும் ஒரு குழந்

தைக்கு தாயாகிவிட்டவளிடம், ஒருவனால் இப்படிப் பேச முடியுமா?

வினயா நம்ப முடியாமல் திகைப்பதைக் கண்டு நந்தகுமார் லேசாகச் சிரித்தான்.

"வியப்பாக இருக்கிறதா, வினு உண்மையாகவே நான் அணு அணுவாக ரசிக்க விரும்புவது இந்த அழகு மேனியைத் தான். என்று அவளைத் தொட்டு விடுகிறவன் போல் விரலை நீட்டிச் சுட்டிக் காட்டினான்.

வினயா சட்டென எழுந்து நின்றாள். "உளராதீர்கள்" என்றாள் கடுமையாக,

"இது உளறல் இல்லை வினு. உண்மை வேண்டுமானால் உன் தலையில் அடித்து சத்தியம் செய்யட்டுமா?" என்று தானும் எழுந்தான், நந்தகுமார்,

வேகமாக விலகி நின்றாள் வினயா. "வேடிக்கையாக இருக்கிறது, நீங்கள் விருப்பத்தைக் காட்டும் விதம்" என்றாள் வெறுப்புடன்.

"வேறு எப்படிக் காட்டச் சொல்லுகிறாய்? முதலிலேயே நேரடியகே உன்னிடம். 'வினு உன்னை விரும்புகிறேன்' என்றிருந்தால் சும்மா விடுவாயா? கழுத்தில் கை வைத்து வெளியே தள்ளி இருப்பாய் அல்லவா?"

"அதற்காக கொக்கு தலையில் வெண்ணையை வைத்தீர்களாக்கும்..." என்று ஏளனமாகப் பேசினாள் வினயா.

"இல்லை யானைக்குக் குழிவெட்டி வைத்து விட்டுக் காத்திருந்தேன். இவ்வளவு நாள் வீணாகி இப்போதுதான் விழுந்திருக்கிறது வினு," என்றான், அவன், கெஞ்சலாக.

"என்னை வினு என்று அழைக்காதீர்கள்" என்றாள் வினயா கோபத்துடன்.

"வினி என்று உன் கணவன் போலக் கூப்பிடவா?"

"சந்தானம் அழைப்பது போலவா?" வினயாவுக்குத் தொண்டை அடைத்தது. அவன் 'வினி' என்று கனிவாக அழைத்துப் பேசி எத்தனை காலம் ஆயிற்று! 'எல்லாம் இந்தப் பாவி என் வீட்டில் அடியெடுத்து வைத்த வேளை. என் ஆனந்தம் அவலமாகிப் போயிற்று' ஆத்திரத்துடன் பல்லைக் கடித்தாள் வினயா.



"அந்த உரிமை உங்களுக்குக் கிடையாது, அதோடு உங்களுக்கு ஒரு கோடி கும்பிடு. மிஸ்டர் நந்தகுமார், இனி எங்கள் வீட்டுப் பக்கம் தலை வைத்துகூடப் படுக்காதீர்கள்." கடுமையாகப் பேசி விட்டு வாயிலை நோக்கி நடந்தாள் வினயா.

"பேசவந்த விஷயத்தை மறந்துவிட்டுப் போகிறாயே, வினு," என்று கிண்டலாகக் கேட்டது நந்தகுமாரின் குரல்.

"எதைப் பற்றியுமே நான் உங்களுடன் பேசத் தயாராக இல்லை," என்றபடி மேலே நடந்தாள் வினயா.

"சரி, உன் விருப்பம் போல. என் விருப்பம் போல நான் நாளைக்கு அனுராதாவுடன் 'பிக்னிக்' போகிறேன்."

வினயாவின் வேகம் தடைப்பட்டது.

"அவளோடு கடலில் 'ஜலக்கிரீடை' நடத்துகிறேன்."

வினயா நின்றாள்.

"திரும்பும் போது என் கார் ரிப்பேராகிவிடும். அங்கேயே 'ரூம்' எடுத்து நாங்கள் இருவரும் தங்குகிறோம்! இரண்டு அறைகள் அனேகமாகக் கிடைக்காது. ஆகவே ஒரே அறையிலேயே..."

"போதும் நிறுத்துங்கள்," என்று கத்தினாள்," வினயா,

"ஓ! தாராளமாக" என்று நந்தகுமார் திருப்தியுடன் புன்னகைத்தான்-

வினயாவுக்கு நெஞ்சு கொதித்தது, "பிளாக் மெயில்" பண்ணுகிறீர்களா?" என்று வெடித்தாள்.

நந்தகுமார் அலட்சியமாக தோளைக் குலுக்கினான். "நீ எப்படி எடுத்துக் கொண்டாலும் சம்மதமே. எனக்குத் தேவை நீ. நீ மறுத்தால்—உன் அனுவின் வாழ்வு பாழ்."

''நான் அவளைத் தடுத்து விடுவேன்,'' என்றாள் வினயா தீவிரமாக.

''முயற்சி செய்துதான் பாரேன்'' என்றான் நந்தகுமார் லேசான புன்னகையுடன்.

''நடந்ததையெல்லாம் சொல்லி விடுவேன்.''

''நம்புவாள் என்றா நினைக்கிறாய்!'' என்று அவன் வியப்பு காட்டினான்.

வினயா ஒரு கணம் நிதானித்தாள், அவன் கூறுவது இந்த விஷயத்தில் மெய்தான். வினயாவை அனு நம்பமாட்டாள். 'உனக்குப் பொறாமை. அதுதான் இட்டுக் காட்டுகிறாய்' என்று தான் மீண்டும் சொல்லுவாள்.

சந்தானம்? அவனும் இதுவரை அவனுடைய தங்கையைப் போலத்தான் எண்ணிக் கொண்டு இருக்கிறான். இப்போது மட்டும் வினயாவை நம்புவானா? ஊகூம், அவனும் நம்ப மாட்டானே, பின்னே?

இவன் — இந்தப் பாவி திட்டமிட்டுத்தான் இத்தனை நாளாக வேலை செய்து இருக்கிறான், முன்பே வருவாய் என்று நினைத்தேன் என்றானே. இதெல்லாம் என்ன அசிங்கம்?

''நந்தகுமார், இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமாயில்லை?'' என்று அருவெறுப்புடன் கேட்டாள்.

''இல்லையே வினு. காதலிலும் போரிலும் எதுவும் நியாயம் என்பார்கள்.

''காதலா? சே! வாயைக் கழுவுங்கள். அந்த வார்த்தையை உங்கள் வாயால் சொல்லுவது கூடப் பாவம்.''

நந்தகுமார் சிரித்தான். பாவத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை வினு''

''நான் இன்னொருவனுடைய மனைவி. பிறன்மனை விழையாமை என்பது பற்றி திருக்குறளில் ஓர் அதிகாரமே இருக்கிறது தெரியுமா,'' என்று சூடாகக் கேட்டாள் வினயா.



''பாவம் அறியாத்தனமாக எழுதிவிட்டார் வள்ளுவர். ஆனால் அவர் காலத்துக்கு முன்பே, இது நடந்துதானே இருக்கிறது? தெய்வம் என்கிறோம். அந்த ராமனுடைய மனைவியையே ராவணன் கொண்டு போய் விட்டானே''

''அந்த ராவணனை ராமர் அழித்து விட்டார் தெரியுமா?'' என்று பட்டென்று கேட்டாள் வினயா.

''இருக்கட்டுமே. இந்த ராமனே இந்திரனோடு சேர்ந்து தவறு செய்த அகலிகை சாபத்தை நீக்கினானே'' என்றான் நந்தகுமார் பதிலுக்கு.

வாயில் சொல்லியிருந்தால் எதையும் எப்படியும் திரித்துச் சொல்லலாம் போலும்.

வினயா நேராக நிமிர்ந்தாள். ''எப்படியும் என்ன ஆனாலும் சரிதான். உங்கள் ஆசை நிறைவேறப் போவது இல்லை,'' என்றாள் வைரத்தின் உறுதியோடு.

''அய்யோ பாவம். உன் நாத்தனார் நாளை மகாபலிபுரத்தில் என்ன கதி ஆவாளோ?'' என்று வெகுவாக அனுதாபப் பட்டான், அவன்.

''அவளை அங்கே வரவிடமாட்டேன்'' என்றாள் வினயா பல்லைக் கடித்துக் கொண்டு.

''முயன்று பார். அதிர்ஷ்டம் உனக்குத் துணையிருக்கட்டும்'' என்று கிண்டலாக வாழ்த்தினான் அவன்.

மேலே பேசாமல் திரும்பினான் அவன்.

''வினயா,'' என்று அழைத்து விட்டு நந்தகுமார் மேலே பேசினான். ''உன்னிடம் முரட்டுத் தனமாக நடந்து கொள்ள எனக்கு விருப்பம் இல்லை. எப்படியும் உன்னை அடையும் வரை நான் ஓயப்போவது இல்லை. வீணான கண்ணீரில் இருந்து தப்ப வேண்டுமானால் நீயாக இணங்கி விடுவது நல்லது'' என்று எச்சரித்தான்.

காது கேளாதவள் போல வினயா அந்த வீட்டை விட்டு வெளியேறினாள்.

தீவிரமான சிந்தனையில் மூழ்கியபடி தோளில் சாய்ந்திருந்த குழந்தைதான் ஆதாரம் என்பது போல் செல்வியை இறுக அணைத்துக் கொண்டு வினயா நடந்தாள்.

சற்று தூரத்தில் நின்றிருந்த ஒரு டாக்சியையோ அது கிளம்பிச் சென்றதையோ அவள் கவனிக்கவில்லை.

தன் போக்கில் சற்று தூரம் சென்றபின்தான் சுற்றுப்புறம் நினைவு வந்தது. சுதாரித்துக் கொண்டு ஒரு டாக்சியில் ஏறி வீடு வந்து சேர்ந்தாள்.

சந்தானம் அலுவலகத்துக்கு சென்று விட்டிருந்தான். அனு கிளம்பிக் கொண்டிருந்தாள். வினயாவிடம் பேச்சு வார்த்தை அற்றவள் போல் தன் போக்கில் காரியங்களைச் செய்தாள்.

வினயா அவளை அணுகினாள். ''அனும்மா, நான் சொல்வதைக் கேளேன்'' என்று கெஞ்சுதலாகக் கேட்டாள்.

''நாளையைப் பற்றி என்னால் ஒரு வார்த்தையைக்கூடக் கேட்பதற்கு இல்லை'' வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசினாள் அனு.

''அது கிடக்கட்டும் அனு. அந்த நந்தகுமாரைப் பற்றி...''

''அவரைப் பற்றியும் நீங்கள் எதுவும் சொல்லத் தேவை இல்லை. நந்து நல்லவர் என்பது எனக்குத் தெரியும்.''

''நந்துவா!''

''ஆமாம். நீங்கள் நந்தன் என்பீர்களாமே! நான் நந்து என்பதால் என்ன கெட்டு விட்டது?'' என்று ஏளனமாகக் கேட்டாள் அனு.

இனி அவளிடம் பேசிப் பயன் இல்லை என்று கண்டு கொண்டாள், வினயா. வாயை மூடிக் கொண்டாள்.

''ஊருக்கு உபதேசம் சொல்லுமாம் பல்லி, கழனிப் பானையில் விழுமாம் துள்ளி'' என்று முணு முணுத்தபடி கல்லூரிக்குச் சென்றாள், அனு.

இனி வேறு வழியில்லை. இந்த வீட்டுக்குள் சமாளித்து



விடலாம் என்று எண்ணியது பொய்த்துப் போயிற்று. இனி அடுத்தவர் உதவியை நாட வேண்டியதுதான்.

சற்று நேரத்துக்கு முன்பு தான் வேலைக்காரி வந்திருந்தாள். வினயா அவளை அழைத்தாள். செல்வியை அவளிடம் ஒப்படைத்தாள். பக்கத்து வீட்டுக்குச் சென்றாள்.

பக்கத்து வீட்டில் டெலிபோன் இருந்தது. உரிய காசைக் கொடுத்து விட்டு அங்கிருந்து டெலிபோன் செய்வது வழக்கம் தான். அவர்களிடம் சொல்லிவிட்டுக் காஞ்சீபுரத்துக்கு டெலிபோன் செய்தாள்.

மறுமுனையில் ரேவதியின் அன்பான குரல் கேட்டது.

''அக்கா, நான் வினயா பேசுகிறேன்,'' என்றாள் ஒரு விம்மலுடன்.

''ஏம்மா, என்ன? என்ன விஷயம்? ஏன் குரல் உடைகிறது?'' என்று அக்கறையுடன் பதறினாள், ரேவதி.

அன்பும் ஆதரவுமான அவளது குரல் வினயாவுக்குப் புத்துயிர் ஊட்டியது. இவளும் அந்தக் குட்டையில் ஊறியவள் தானே; தம்பி, தங்கையைப் போலத்தானே; இவளும் இருப்பாள் என வினயா ஒருதரம் நினைத்தது உண்டு; அது எவ்வளவு பெரிய மடத்தனம் என்பது அந்தக் குரலைக் கேட்டதுமே புரிந்தது. தாயின் குரலைக் கேட்டவள் போலக் குரல் தழுதழுக்க ''அக்கா,'' என்றாள்.

''என்ன வினி? என்னவென்று சொல்லு. செல்விக்கு உடம்பு சரியில்லையா?''

''அதெல்லாம் இல்லை அக்கா, எல்லோரும் நலம் தான் ஆனால்—''

''ஆனால் என்னம்மா?''

மனதைத் திடப்படுத்திக் கொண்டு ''அக்கா நான் ஒன்று சொல்லுகிறேன். நீங்கள் என்ன ஏது என்று கேளாமல் அது போலச் செய்வீர்களா?'' என்று கேட்டாள், வினயா.

''நீயும் என் உடன் பிறந்தவள் போலத்தான் என்று நான்

உன்னிடம் முன்பே சொல்லியிருக்கிறேன் அல்லவா? என்ன செய்ய வேண்டும் என்று சொல். செய்கிறேன்,'' என்று வினயா வுக்குத் தெம்பூட்டினாள் ரேவதி.

''விஷயம் இதுதான் அக்கா. நாளை அனுவுக்கு விடுமுறை தொடங்குகிறது. நீங்கள் ஏதேனும் சாக்கிட்டு இன்றே அவளைக் காஞ்சிக்கு அழைத்துச் சென்று விட வேண்டும் நான் ஏற்பாடு செய்ததாகத் தெரியக் கூடாது.''

வினயா கூறி முடித்தபின் ஒரு கணம் எதிர் முனையில் அமைதி நிலவியது,

''அக்கா, நீங்கள் அங்கே இருக்கிறீர்கள் அல்லவா? நான் பேசுவது கேட்கிறது இல்லையா?'' என்று பதட்டத்துடன் வின வினாள் வினயா.

''கேட்கிறது. ஏன் வினயா. அனு உன்னிடம் சரியாக நடந்து கொள்ள வில்லையா? அவள் ஓர் அசடு. வெகுளி மற்ற படி...''

''அக்கா அக்கா, அனுவுக்காக நீங்கள் என்னிடம் வக்காலத்து வாங்கிப் பேச வேண்டுமா? நீங்கள் என் தமக்கை என்றால் அனு என் தங்கை அல்லவா? இது வேறு விஷயம் அக்கா. அது...''

''சரிதான் வினிம்மா. நான் இன்று மதியமே அத்தானை அங்கே அனுப்புகிறேன். எனக்கு உடம்பு சரியாக 'இல்லை என்பதாகச் சொல்லி அனுவை உதவிக்கு அழைத்து வரச் சொல்லுகிறேன். சரிதானா...டேய்....'' என்று திடீர் என்று கத்தினாள் ரேவதி.

''என்னக்கா?'' என்று அச்சத்துடன் கேட்டாள் வினயா.

''ஒன்றுமில்லை வினி. இங்கே இந்தக் கதிர் பந்தை வீசிக் கடிகாரத்தை உடைத்துவிட்டான். அவர்களுக்கு விடுமுறை தொடங்கி விட்டது அல்லவா? இனி இப்படித்தான் இருக்கும் .. நான் அத்தானை அனுப்புகிறேன், சரிதானா?''

''சரிதான் அக்கா. உங்களுக்கு நிரம்பவும் நன்றியக்கா.''



என்று உருகினாள் வினயா.

''சரிதானடி, சோறு அள்ளித் தருகிறதே என்று கைக்கு வாய் நன்றி சொன்னதாம். நமக்குள் இதெல்லாம் என்ன?'' என்று டெலிபோனை வைத்தாள் ரேவதி.

அதன்படியே ரேவதியின் கணவர் வந்தார். மாலையிலேயே அவர் அனுராதாவை அழைத்துப் போவதாகச் சொன்னார்.

அனு முதலில் தயங்கினாள்.

''அங்கே அக்காவுக்கு உடம்பு சரியில்லை. என்ன தயங்கிக் கொண்டு நிற்கிறாய்?'' என்று அதட்டியபோது அனு பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போனாள். உடனே கிளம்பி விட்டாள். ஒரு தந்தையின் நிலையில் அவரை மதித்து அங்கே வளர்ந்தவள் ஆயிற்றே.

அவர்களை வழியனுப்பி விட்டு வினயா நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள்.

பாவம். அந்த நிம்மதிக்கு அற்பாயுசு என்பது அவளுக்கு அப்போது தெரியாது!

# 11

## பூமாலை பாம்பு ஆயிற்று!

சமயத்தில் ரேவதி கை கொடுக்கவும் வினயாவுக்கு மனதில் மிகுந்த நம்பிக்கை உண்டாகிவிட்டது.

அனுவை இப்போதைக்கு காப்பாற்றியாயிற்று. அவள் மீண்டும் இங்கு வரக் குறைந்தது பதினைந்து நாள் ஆகும். இந்தப் பதினைந்து நாட்களுக்குள் சந்தானத்திடம் எவ்வளவோ பேசிவிடலாமே. முன் போல சினிமா, நாடகம் இருக்காது; வீட்டிலும் அனுவுக்காக யோசித்து மறைத்துப் பேச வேண்டியது இல்லை.

எதையும் ஒளியாமல் அப்படியே சந்தானத்திடம் சொல்லி விடுவது; பிறகு அன்று நடந்த வகைக்கு வருந்துகிறேன் என்று அவன் காலில் விழுந்தால் அவன் அவளை மன்னித்து விடமாட்டானா? அதற்குமேலும் வெறுப்பைக் கொட்ட அவன் கல்நெஞ்சன் அல்லவே. தன் தாய் இறந்ததும் சந்தானம் நடந்துகொண்ட விதம் அவளுக்கு நினைவு வந்தது. 'எவ்வளவு அன்பானவன்' என்று மனம் உருகினாள். அப்பேர்ப்பட்டவனிடம் ஒட்டாமல் ஒதுங்கிப் போனோமே என்று வருந்தினாள். எல்லாவற்றுக்கும் கழுவாயாக அவன் காலடியே தஞ்சம் என்று விழுந்து விடுவது என்பதாக முடிவு செய்தாள். 'ஐம்புலனும் உன் அடைக்கலம்' என்று கணவனிடம் சரண் அடைந்து விட வேண்டும் என்று நினைத்தாள்.

இப்படியாகத் தன் போக்கில் தீர்மானம் செய்து கொண்டு, செல்வியை தொட்டிலில் கிடத்திவிட்டு, முன்னறைக்கு வந்தாள், வினயா.

முடிச்சிட்ட புருவங்களுடன் எதையோ தீவிரமாகச் சிந்தித்த படி அங்கே அமர்ந்திருந்தான் சந்தானம்.

''அத்தான்'' என்று அருகே வந்து மெல்ல அழைத்தாள் வினயா.

சந்தானம் திடுக்கிட்டவன் போலத் திரும்பினான்.

அதே நேரத்தில் வாயிலில் ஒரு கார் வந்து நின்றது. அது நந்தகுமாரின் கார்.

வினயாவுக்கு மிகவும் ஏமாற்றமாகி விட்டது. நல்ல நேரம் பார்த்து வந்தான், 'சனியன்' என்று மனதில் அர்ச்சனை செய்தாள். கூடவே தன் சவாலை நிறைவேற்றி விட்டோம்; சொன்னதைச் சாதித்து விட்டோம்; 'பிக்னிக்'கைத் தடுத்து விட்டோம் என்ற பெருமையும் கர்வமும் உண்டாயிற்று. 'அனு இங்கே இல்லை' என்று தெரியும் போது அவன் முகம் எப்படி இருக்கும்!

முகத்தில் லேசான முறுவலுடன் வினயா வாயிலை நோக்கினாள்.



அவளுடைய முகத்தைக் கூர்ந்து பார்த்து விட்டுச் சந்தானம் நந்தகுமாரை வரவேற்கச் சென்றான். அவனை அழைத்து வந்து சோபாவில் உட்கார வைத்தான். ''எனக்கு லேசாகத் தலையை வலிக்கிறது. மூலைக் கடையில் இரண்டு 'சாரிடான்' வாங்கி வருகிறேன்'' என்று வெளியே சென்று விட்டான்.

வினயா அவனைத் தடுக்கவில்லை. அவன் முன்னிலையில் வெற்றி கொண்டாட முடியாதே.

சந்தானத்தின் தலை மறைந்ததும் நந்தகுமாரிடம் திரும்பினாள்.

''அனுராதா இந்த ஊரிலேயே இல்லை, தெரியுமா?'' என்று எக்களிப்போடு அவனிடம் சொன்னாள். ''அய்யோ பாவம் உங்கள் பிக்னிக்; உங்கள் கடல் குளியல், உங்கள் கார் மக்கர், உங்கள்...எல்லாம்'' என்றாள் கிண்டலாக.

நந்தகுமாரின் முகம் கறுத்தது. வினயாவைப் பாக்கு வெட்டியில் மாட்டிவிட்டோம், இனி தன் எண்ணம் விரைவில் நிறைவேறிவிடும் என்று வெகு நிச்சயமாக இருந்தான். இது எதிர்பாராத ஏமாற்றம். அதை மறைக்க எவ்வளவோ முயன்ற போதும் அவன் முகம் காட்டி விட்டது.

வினயா கலகலவென்று சிரித்தாள்,

''வென்றுவிட்டோம் என்று நினைக்கிறாயா, வினயா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

மீண்டும் சிரித்தாள் வினயா.

நந்தகுமாரின் முகம் மீண்டும் மாறியது பழையபடியே முகத்தில் கள்ளச் சிரிப்பு படர்ந்தது.

''ஏன் வினு, நாளை என்று ஒரு நாள் வருவது உண்டு தெரியுமா? அனு மீண்டும் இங்கே வரத்தான் போகிறாள், இல்லையா?''

''அதற்குள் நான் என் நிலையைச் சீர்செய்து கொண்டு விடுவேன்'' என்று மிடுக்காகக் கூறினாள் வினயா.

"அய்யோ பாவம், அப்படி என்றால் உன் நிலை சீராக இல்லையா வினு?" என்று போலியாக அனுதாபப்பட்டான் நந்தகுமார்.

வினயா உதட்டைக் கடித்துக் கொண்டாள். மடத்தனமாக வாயை விட்டு விட்டாளே. சமாளித்துக் கொண்டு, "அதைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் இல்லை. நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள்," என்று எடுத்தெறிந்து பேசினாள், வினயா.

"உன்னை அடைவதுதான் என் வேலை" என்று எழுந்தான் நந்தகுமார்.

"அதற்கு நீங்கள் இன்னமும் ஏழு பிறவி எடுத்து முடிக்க வேண்டும்" என்றாள் வினயா ஏளனமாக.

"அந்த ஏழு பிறவிக்கும் முன்னோடியாக இந்தப் பிறவியிலேயே உன்னை அணைக்கப் போகிறேன்," என்ற நந்தகுமார், அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தான்.

வினயா திடுக்கிட்டாள். இந்த வீட்டிலேயே இவன் தவறாக நடக்க துணிவானா? ஒரு மாதிரி வருகிறானே. "அங்கேயே நில்லுங்கள் மிஸ்டர். நான் ஒரு சத்தமிட்டால் ஊர் கூடிவிடும். ஜாக்கிரதை," என்று அவசரமாக எச்சரித்தாள்.

வினாடிக்குள் நந்தகுமாரின் முகம் மாறியது. ஆத்திரமும் வெறியும் மறைந்தன. "கிணற்றுத் தண்ணீரை வெள்ளமா கொண்டு போய்விடும்?" என்றான் குரூரமான புன்னகையுடன்.

வாயிலில் காலடி ஓசை கேட்டது. நந்தகுமாரின் முகம் இன்னமும் ஒரு படி மாறியது. லேசான ஏக்கப் புன்னகை முகத்தில் விரிந்தது. உள்ளே வந்த சந்தானத்திடம், "அனு ஊரில் இல்லையாமே சந்தானம். நாளைய பிக்னிக் ஹோகையா தான். அந்த ஏமாற்றத்தை மறக்க நீங்களேனும் என்னோடு ஒரு சினிமாவுக்கு வாருங்களேன்."

"ஓ. அதற்கென்ன நந்தகுமார், வாருங்கள் போகலாம்" என்று அப்படியே கிளம்பிவிட்டான் சந்தானம்.

அதிகாலையிலேயே வீட்டை விட்டுச் செல்வதும் இரவில்



வெகு நேரம் கழித்துத் திரும்புவதுமாக சந்தானத்தின் இந்தப் புதிய பழக்கம் நீடித்தது.

மூன்று தினங்களுக்குப் பின் வினயாவால் பொறுக்க முடியவில்லை. காலையில் வெளியே கிளம்பிக் கொண்டிருந்த கணவனை வழி மறித்தாள். "நீங்கள் ஏன் இப்படி மாறி விட்டீர்கள்?" என்று ஆற்றாமையோடு கேட்டாள்.

"எப்படி?" என்று உணர்ச்சியற்றுக் கேட்டான்.

"அது தான், ஒரு மாதிரி ஒரு மா.... திரி விலகிப் போகிற மாதிரி....ஒட்டாத மாதிரி..." என்று தடுமாற்றத்துடன் பதில் சொல்ல முயன்றாள் வினயா.

"என்றைக்குத்தான் நாம் ஒரேடியாக ஒட்டி உருகிக் கொண்டு கிடந்தோம்—இன்று விலகித் தெரிவதற்கு? சரிசரி வழியைவிடு" என்று அவளை சுற்றிக்கொண்டு போய்விட்டான் அவன்.

வினயா அத்துடன் விடுவதாக இல்லை. விட்டால், கெடுவது அவளது வாழ்வு அல்லவா?

அவன் மாலையில் வீடு திரும்பினான்.

முகம் கழுவப் போனபோது அவன் பின்னால் சென்றாள். "எனக்கு நந்தகுமாரைப் பிடிக்கவில்லை அவரை வீட்டுக்குள் வரவிடாதீர்கள்." அவசரமாக ஒப்பித்தாள்.

எதனாலே நந்தகுமாரிடம் சந்தானத்துக்கு ஒரு பிடிப்பு உண்டாகியிருக்கிறது. வெளிநாடு சென்று திரும்பியிருக்கிறான். கைநிறையச் சம்பளம் வாங்குகிறான்; அவர்களை விட வசதியான குடும்பத்தவன்; அனுவுக்குச் சிறந்த வரன் என்று சந்தானம் எண்ணியிருக்கலாம். இப்படித்தான் வினயா நினைத்திருந்தாள். 'அவரை பிடிககவில்லை? என்ன காரணம்?' என்று கேட்பான். கேட்டதும் எல்லா விவரமும் சொல்லி விடலாம் என்பது அவள் எண்ணம்.

ஆனால், சந்தானம் மிகுந்த வெறுப்புடன் அவளைப் பார்க்கவும் வினயா திகைத்தாள். "சீ! நாயே" என்று சொல்

லாத குறைதான். தன்னையும் அறியாமல் ஓர் எட்டு பின் வாங்கினாள். அவள் முகத்தில் அடிப்பது போலக் குளியலறைக் கதவை அறைந்து சாத்தினான்.

வினயா பிரமை பிடித்தவள் போல மூடிய கதவைப் பார்த்த படி சற்று நேரம் நின்றாள்.

வேறு ஒன்று தோன்றியது. முன் அறைக்கு ஓடினாள். சந்தானத்துடன் வந்த நந்தகுமார் அங்கே அமர்ந்திருந்தான். தனிமையில் பார்க்கும் ஒவ்வொரு நேரத்தையும் போலவே இப்போதும் அவனது பார்வை அவள் அங்கமெங்கும் படிந்தது. வினயா ஒன்றையும் கவனிக்கவில்லை ''ஏன் இங்கே வந்தீர்கள்? போங்கள், போய்விடுங்கள் உடனே,'' என்று அவனை விரட்டினாள்.

அவர்கள் இருவரில் யாரும் எதிர்பார்க்காதபடி சந்தானத்தின் குரல் பக்கவாட்டில் அவன் அறையில் ஒலித்தது. ''வினயாவுக்கு அவள் பெற்றோர் தவறாகப் பெயர் வைத்துவிட்டார்கள் இல்லையா, மிஸ்டர் நந்தகுமார்? அவளிடம் வினயத்தையே காணவில்லையே, வந்தவருக்கு ஏதேனும் பானம் கொடுப்பதில்லையா வினயா?'' என்று அவளைக் கண்டிப்பது போல முடித்தான் அவன்.

வினயா மிரண்டு விழித்தாள். அவள் பின்னோடேயே சந்தானமும் குளியல் அறையிலிருந்து வெளியேறி அவனது அறைக்குச் சென்றிருக்கிறான். அவளது பேச்சைக் கேட்டு மேலும் சினங்கொண்டு விட்டான். இல்லாவிட்டால் இப்படிப் பேசுவானா? இவ்வளவு தூரத்துக்கு நந்தகுமாரிடம் அவனுக்கு என்ன மோகம்? வினயாவிடம் என்ன வெறுப்பு? இதெல்லாம் என்ன கூத்து? இது எதில் போய் முடியப் போகிறது?

எதில் முடியப் போகிறது என்பது விரைவிலேயே தெரிந்தது.

சந்தானம் அந்த 'ரிப்போர்ட்' அனுப்பி முடித்த மறுநாள் சனிக்கிழமை.

என்றும் இல்லாத அதிசயமாக அவன் வினயாவை அழைத்



தான். ''வினயா, நாம் நாளைக்குக் கொடைக்கானலுக்குக் கிளம்புகிறோம்'' என்று சன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு சொன்னான்.

'நந்தகுமார் இருக்கும் இடத்தைவிட்டு வெகு தூரத்துக்கு அழைக்கிறான்.' இந்த எண்ணம் தான் வினயாவுக்கு முதலில் தோன்றியது. முகம் பளீர் என்று மலரக் கணவனை நோக்கினாள்.

அவன் இன்னமும் அவள் புறமாகத் திரும்பவில்லை. மேலே தொடர்ந்து சொன்னான். ''அங்கே நந்தகுமாரின் உறவினருக்கு வீடு இருக்கிறதாமே. கோடை பங்களாவில் நாலு நாள் தங்கலாம் என்று அழைத்தார். சரியென்று விட்டேன். இப்போது இரண்டாவது சீசன் நன்றாக இருக்குமாம்'' என்று அதே குரலில் கூறி முடித்தான்.

பூமாலை என்று எண்ணி அணிய அது பாம்பாக மாறினால் எப்படி இருக்கும்.

அப்படித்தான் உணர்ந்தாள் வினயா!

# 12

# வெடித்த இதயம்

ஆக, இதுவும் நந்தகுமாரின் வேலைதானா?

''வேண்டாம்,'' என்றாள் வினயா மொட்டையாக.

''வருவதாகச் சொல்லிவிட்டேன்'' என்றான், சந்தானம்.

''நான் வரமாட்டேன்'' என்றாள், வினயா, பிடிவாதமாக.

''நிதானமாக யோசித்து விட்டுச் சொல்,'' என்று திரும்பினான் சந்தானம்.

''யோசிப்பதற்கு எதுவுமே இல்லை. நான் எங்கும் வருவதாக இல்லை''

எரிச்சலுடன் முடித்தாள் வினயா.

தோளை குலுக்கிவிட்டு அகன்றான், சந்தானம்.

கண்மறையும்வரை கணவனைப் பார்த்தாள் வினயா. முன்னனைக்கு இப்போது அவன் மெலிந்திருந்தான். ஏன்? ஏன் மெலிய வேண்டும்? உடைத்துப் பேசாமல் உள்ளூர வைத்துக் கொண்டு உருகுவானேன்? அவளையும் பேச விடுவது இல்லை.

தன்னையும் நந்தகுமாரையும் இணைத்து சந்தேகப்படுகிறான் என்பது வினயாவுக்குப் புரிந்தது. ஆனால், அவளிடம் இருந்து விலகி ஓடுகிறவன் நந்தகுமாருடன் இழைவானேன்?

இப்போதெல்லாம் இன்னொரு வேதனை வேறு. நந்தகுமார் வரும்போதெல்லாம் அநேகமாக அவளைத் தனியாக வீட்டில் விட்டுவிட்டு, சந்தானம் வெளியே போய் விடுகிறான். இது ஏன்?

வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து விட்டு, கையும் களவுமாகப் பிடிக்கும் முயற்சியா?

வினயாவுக்கு அப்படியும் தோன்றவில்லை.

சந்தானம் பெருந்தன்மை உள்ளவன். உண்மையாகவே உள்ளத்தாலும் உயர்ந்த மனிதன். இந்த மாதிரிக் கீழ்த்தரமான நந்தகுமார் புத்தி அவனுக்கு வராது. பின்னே ஏன் இப்படி?

ஏன்—ஏன்—ஏன்— என்று ஆயிரம் முறை கேட்டுக் கொண்டபோதும், அவளுக்கு பதில் கிட்டவில்லை. சிந்தித்து சிந்தித்து சிந்தை சலித்தது தான் மிச்சமாயிற்று. இறுதியில், எத்தனையோ தரம் செய்தது போலவே, கடைசியாகத் தன்னையே நொந்து கொள்வதில் முடிப்பது வழக்கமாயிற்று. அன்றே சந்தானத்திடம் மனம் ஒன்றிப் பழகியிருந்தால்?

அன்று மாலையும் சந்தானத்தோடு அட்டை மாதிரிஒட்டிக் கொண்டு நந்தகுமார் வந்தான்.

கொடைக்கானல் பேச்சை இப்போது அவன் தொடங்கினான். ''இந்த சீசன் மிகவும் நன்றாக இருக்கும் வினு. மே சீசனிலாவது வெயில் அதிகமாக இருக்கும். இப்போது எந்நேரமும் ஏ. சி. போட்ட மாதிரி குளுகுளுவென்று இருக்கும். அந்த வீடும் ரொம்ப அழகு....



''இப்படியாகத்தான், என் வலை மிக அழகு என்று சிலந்தி ஈயிடம் சொல்லியிருக்கும்' என்று எண்ணிக் கொண்டாள் வினயா.

''நான் வருவதற்கில்லை'' என்று பட்டுக் கத்தரித்தாற் போல பதில் அளித்தாள். நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்தான், நந்தகுமார். ''அதுதான் ஏன் என்று கேட்கிறேன். புலி சிங்கம் வந்து உன்னைக் கடித்துத் தின்று விடுமா? பயமே வேண்டாம் நான் உன் அருகிலேயே இருந்து காப்பாற்றுகிறேன்.''

'உன் அருகாமைதான் புலி சிங்கத்தை விடக் கொடியது' என்று சந்தானத்தின் எதிரில் கூற முடியுமா?

''உங்களுக்கு அத்தக் கஷ்டம் வேண்டாம்'' என்றாள் சுருக்கமாக.

''கஷ்டமா? அதற்கெல்லாம் கொடுத்து வைக்க, வேண்டாமா என்றான் அவன் குறும்பாக.

மடியில் தூங்கிவிட்ட செல்வியை வருடியபடி சந்தானம் பேசாமல் இருந்தான்.

''தூங்கிவிட்டாளா? கொடுங்கள், தொட்டிலில் விடுகிறேன்'' என்று வினயா கையை நீட்டினாள்,

இல்லை. நானே படுக்க வைக்கிறேன்'' என்று குழந்தையுடன் உள்ளே சென்றான் சந்தானம்.

அவன் போனதும் ''வினயா என்னை மிகவும் முட்டாளாக நினைக்கிறாய். இந்த கொடைக்கானல் இல்லாவிட்டாலும் வேறு வழி எனக்குக் கிடைக்கும்'' என்றான் தணிந்த குரலில் நந்தகுமார்.

''உங்கள் பேச்சே எனக்குக் குமட்டுகிறது'' என்று உள்ளே செல்லத் திரும்பினாள் வினயா. கூடவே ஓர் ஆவல் சற்று நின்று, முன்பு வேண்டாதது. அதில் இன்று திடீர் மோகம்

வந்தது எப்படி?'' யோசனையுடன் கேட்டாள்.

நந்தகுமாரின் பார்வை கட்டவிழ்ந்த திடீர் வெறியுடன் அவளுடைய மேனியில் மேய்ந்தது. ''முன்பு எடுத்த புகைப் படங்கள் இருக்குமே வினு. ஒன்றை எடுத்துக் கொண்டு கண்ணாடி முன்னே நில். கண்ணாடியில் தெரியும் பிம்பத்தை யும் படத்தையும் ஒப்பிட்டுப் பார். எல்லாம் தானே புரிந்து விடும். ஏன், என்மீது கருணைகூடப் பிறந்து விடும்'' என்றான் ரகசியக் குரலில் .

அதற்குமேல் சகிக்காமல் வினயா உள்ளே சென்றாள். குழந்தையை அவளது அறையில் கிடத்தி விட்டு சந்தானம் பின் புறம் சென்றிருந்தான். சஞ்சலத்துடன் தொட்டிலின் அருகே வந்தாள்.

நந்தகுமாரின் பேச்சு காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. நிலைக் கண்ணாடி முன்னே நின்று தன்னையே மதிப்பிடுவது போலப் பார்த்தாள். கண்ணாடிக்கு மேலேயே அவளது திரு மணத்தின் போது எடுத்த படம் பெரிய அளவில் மாட்டி இருந் தது. அதையும் பார்த்தாள். இந்த ஒரு விஷயத்தில் நந்தகுமார் கூறியது மெய்தான் என்று உணர்ந்தாள்.

படத்தில் சற்று வாடினாற்போல மெலிவாக இருந்த உடல், மாமியாரின் மருந்துகளாலோ அல்லது பிள்ளை பெற்ற பூரிப்பிலோ—இப்போது பூத்துக் குலுங்கும் பூங்கொடி போலத் தளதளத்தது. கண்களில் மட்டும்தான் வேறு விதமான வித்தி யாசம், படத்தில் உணர்ச்சியற்று நோக்கிய விழிகளில், இப் போது வேதனை நிரம்பியிருந்தது. மற்றபடி கூழாங்கல்லுக்கும் பட்டை தீட்டிய வைரத்துக்கும் உள்ள வித்தியாசம் இரண்டு தோற்றங்களுக்கும் இடையே காணப்பட்டது.

கூடவே அவளுக்கு இன்னொரு நினைவு தோன்றியது. அவள் கூழாங்கல்லைப்போல இருந்த காலத்திலேயே சந்தானம் அவளிடம் காதலைப் பொழிந்தானே. அது மெய்யான காதல், மாறக்கூடிய அழகில் தோன்றக் கூடிய காமம் அல்ல என்பதைப் பெருமிதத்துடன் உணர்ந்தாள்.



அந்தக் காதல் இப்போது எங்கே ஓடி ஒளிந்து கொண்டது? அவளது நிழலைக் கூடக் காண விரும்பாதவன் போல ஒதுங்கு கிறானே என்று நினைக்கும் போதே அவள் கண்களில் கண்ணீர் சுரந்தது. மெல்லத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்,

முன் அறையில் சந்தானத்தின் குரல் கேட்டது. எப்போது சென்றானோ? போகிற போது அவள் அழுவதை கண்டானோ! கண்டிருந்தால் நல்லதுதான்; 'ஏன்' என்று கேட்கும் அளவுக்கு இரக்கம் பிறக்காதா?

அந்த மாதிரி இரக்கத்தின் அறிகுறி ஏதும் தெரியவில்லை. அவன் அவளிடம் எதுவும் பேசவும் இல்லை.

மறுநாள் சந்தானம் ஒரு பெட்டியில் சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தான்,

எப்படி என்ன என்பது புரியாவிட்டாலும் இதுவும் நந்த குமாரது முயற்சிகளில் ஒன்று என்பது வினயாவுக்குப் புரிந்தது, எனவே சந்தானத்தைத் தடுக்க முயன்றாள்.

தனியே இருக்க வேண்டுமே, பயமாக இருக்குமே, செல் விக்கு திடீர் என்று காய்ச்சல் வந்தால் என்ன செய்வது, அது இது என்று ஏதேதோ சொல்லிப் பார்த்தாள்.

பொறுமையோடு அவள் பேச்சைக் கேட்டுவிட்டு சத்தானம் சொன்னான். ''வேலைக்காரியை இரவிலும் இங்கேயே படுக் கச் சொல். பயம் இராது.''

சுற்றுவழி பயனற்றுப் போகவே வினயா நேரடியாகப் பிரச்சினைக்கு வந்தாள். ''நீங்கள் கொடைக்கானலுக்குப் போவது எனக்குப் பிடிக்கவில்லை. அதுவும் அந்த நந்தகுமாரு டன் செல்வது அடியோடு வெறுப்பாக இருக்கிறது, அவர் கொஞ்சம் கூட நல்லவர் இல்லை, அத்தான்'' என்றாள்.

சந்தானம் பதிலே சொல்லவில்லை.

வினயா பதட்டத்துடன், ''என்னை நம்புங்கள், அத்தான், அவர்...அவர் மெய்யாகவே மோசமானவர். அவருக்கு என்னி டம்...என்னிடம்...'' என்று தடுமாறிக் கொண்டே சொல்லலா

னாள். குலமகளான வினயாவுக்கு நந்தகுமாரின் கேவலமான ஆசையைப் பற்றிச் சொல்லக்கூட நா கூசியது.

பெட்டியைப் பட்டென மூடிவிட்டுச் சந்தானம் திரும்பினான். ''வினயா, எனக்கு எல்லாமே புரிகிறது. நந்தகுமாரைப் பற்றி நீ இப்படி என்னிடம் பேசத் தேவையே இல்லை தெரியுமா?'' என்றான் அயர்வுடன்.

''இல்லை, அத்தான் நீங்கள் ஒன்றையுமே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவர் கூறுவதை மட்டும் வைத்துக் கொண்டு ஏதேதோ தப்பாக எண்ணிக் கொண்டு இருக்கிறீர்கள். அவர்...''

''வினயா?''

அவன் குறுக்கிடுவதைக் கவனியாதவள் போல வினயா தொடர்ந்தாள். ''என் முன்னிலையிலேயே இவ்வளவு பேசுகிறாரே, உங்களிடம் தனியே என்னென்ன கதையெல்லாம் அளந்தாரோ அதையெல்லாம் அப்படியே நம்பிக் கொண்டு நீங்கள் என்னைப் பற்றி தவறாகவே எண்ணிக் கொண்டீர்கள். அவரை நான்....''

'வினயா!'' அந்த அழுத்தமான அழைப்பு வினயாவின் சொற்பெருக்கை நிறுத்தியது. இதயத்தில் எங்கோ வலியெழச் செய்தது.

அழைத்துவிட்டு எழுந்து, அவள் பக்கமாகத் திரும்பித் தன் முழு உயரத்துக்குமாக நிமிர்ந்து நின்றான், சந்தானம். பிறகு அவள் முகத்தையே தீவிரமாகப் பார்த்தபடி கேட்டான் ''வினயா, அவர் சொன்னது சொல்லாதது எல்லாவற்றையும் விடு. நம் வாழ்வில் நடந்ததை மட்டும் எண்ணிப் பார்த்தாலே போதாதா? நம் திருமணத்தின் போது நந்தகுமாரின் நினைவில் நீ கல்லாய் உணர்ச்சியற்று இருக்கவில்லை? முதல் இரவின் போது கண்ணீர் விடவில்லை? பின்னரும் என்னிடம் மனம் விட்டுப் பழகாமல் முடிந்தமட்டும் ஒதுங்கவில்லை. ஏன், உன் தாயாரின் உடல் நிலைக்காக மட்டுமே நீ என்னை மணக்கவில்லை? நெஞ்சில் கை வைத்து இதெல்லாம் இல்லையென்று



நீ சொல்லிவிடு பார்க்கலாம்...வினயா, நான் குருடன் அல்ல, அதோடு என் வேதனையும் தவிப்பைவிட எள்ளளவும் குறைந்ததில்லை.,''

பேச முடியாமல், அவன் முகத்தைப் பார்க்க முடியாமல், தன் கைகளில் முகத்தைப் புதைத்த படி நெஞ்சு பிளந்து விடுவது போல வினயா கேவிக் கேவி அழலானாள்.

சில கணங்கள் அவள் அழுவதைப் பார்த்தபடி சந்தானம் சும்மா நின்றான். பிறகு சற்றுத் தணிந்த குரலில், ''இந்த நாலு நாட்களும் நீ தனியே இருந்து நன்கு சிந்திக்கவேண்டும், வினயா. எங்கள் இருவர் முகங்களையும் பாராமல் குரலையும் கேளாமல் நீ அமைதியாகச் சிந்திக்க வேண்டும். அதற்காகத்தான் நான் உன்னை விட்டு விட்டு அவருடன் செல்கிறேன், வருகிறேன், வினயா. நான் அவரது வீட்டுக்கே வந்து விடுவதாகச் சொல்லியிருந்தேன்!'' என்று பெட்டியைத் தூக்கிக் கொண்டு வேகமாக நடந்தான், சந்தானம்.

''நீங்கள் சொன்னது பழைய கதை, அத்தான். நான் இப்போது மாறி விட்டேன்...'' என்று அழுகையின் ஊடே வினயா கதறினாள்.

அது அவளுடைய கணவனின் காதுகளை எட்டவில்லை போலும், அவன் போயே விட்டான்.

இரண்டு தினங்கள் யுகங்களாகக் கழிந்தன.

மூன்றாவது நாள் அதிகாலையில் பக்கத்து வீட்டு அம்மாள் வினயாவை அழைத்துச் சொன்னாள்: ''வினயா, உங்களுக்குக் கொடைக்கானலில் இருந்து டெலிபோன் வந்திருக்கிறது. உடனே, வந்து பேசுங்கள்.''

வினயா திகிலுடன் ஓடினாள்!

னாள். குலமகளான வினயாவுக்கு நந்தகுமாரின் கேவலமான ஆசையைப் பற்றிச் சொல்லக்கூட நா கூசியது.

பெட்டியைப் பட்டென மூடிவிட்டுச் சந்தானம் திரும்பினான். ''வினயா, எனக்கு எல்லாமே புரிகிறது. நந்தகுமாரைப் பற்றி நீ இப்படி என்னிடம் பேசத் தேவையே இல்லை தெரியுமா?'' என்றான் அயர்வுடன்.

''இல்லை, அத்தான் நீங்கள் ஒன்றையுமே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவர் கூறுவதை மட்டும் வைத்துக் கொண்டு ஏதேதோ தப்பாக எண்ணிக் கொண்டு இருக்கிறீர்கள். அவர்...''

''வினயா?''

அவன் குறுக்கிடுவதைக் கவனியாதவள் போல வினயா தொடர்ந்தாள். ''என் முன்னிலையிலேயே இவ்வளவு பேசுகிறாரே, உங்களிடம் தனியே என்னென்ன கதையெல்லாம் அளந்தாரோ அதையெல்லாம் அப்படியே நம்பிக் கொண்டு நீங்கள் என்னைப் பற்றி தவறாகவே எண்ணிக் கொண்டீர்கள். அவரை நான்....''

'வினயா!'' அந்த அழுத்தமான அழைப்பு வினயாவின் சொற்பெருக்கை நிறுத்தியது. இதயத்தில் எங்கோ வலியெழச் செய்தது.

அழைத்துவிட்டு எழுந்து, அவள் பக்கமாகத் திரும்பித் தன் முழு உயரத்துக்குமாக நிமிர்ந்து நின்றான், சந்தானம். பிறகு அவள் முகத்தையே தீவிரமாகப் பார்த்தபடி கேட்டான் ''வினயா, அவர் சொன்னது சொல்லாதது எல்லாவற்றையும் விடு. நம் வாழ்வில் நடந்ததை மட்டும் எண்ணிப் பார்த்தாலே போதாதா? நம் திருமணத்தின் போது நந்தகுமாரின் நினைவில் நீ கல்லாய் உணர்ச்சியற்று இருக்கவில்லை? முதல் இரவின் போது கண்ணீர் விடவில்லை? பின்னரும் என்னிடம் மனம் விட்டுப் பழகாமல் முடிந்தமட்டும் ஒதுங்கவில்லை. ஏன், உன் தாயாரின் உடல் நிலைக்காக மட்டுமே நீ என்னை மணக்கவில்லை? நெஞ்சில் கை வைத்து இதெல்லாம் இல்லையென்று



நீ சொல்லிவிடு பார்க்கலாம்...வினயா, நான் குருடன் அல்ல. அதோடு என் வேதனையும் தவிப்பைவிட எள்ளளவும் குறைந்ததில்லை.,''

பேச முடியாமல், அவன் முகத்தைப் பார்க்க முடியாமல், தன் கைகளில் முகத்தைப் புதைத்த படி நெஞ்சு பிளந்து விடுவது போல வினயா கேவிக் கேவி அழலானாள்.

சில கணங்கள் அவள் அழுவதைப் பார்த்தபடி சந்தானம் சும்மா நின்றான். பிறகு சற்றுத் தணிந்த குரலில், ''இந்த நாலு நாட்களும் நீ தனியே இருந்து நன்கு சிந்திக்கவேண்டும், வினயா. எங்கள் இருவர் முகங்களையும் பாராமல் குரலையும் கேளாமல் நீ அமைதியாகச் சிந்திக்க வேண்டும். அதற்காகத் தான் நான் உன்னை விட்டு விட்டு அவருடன் செல்கிறேன். வருகிறேன், வினயா. நான் அவரது வீட்டுக்கே வந்து விடுவதாகச் சொல்லியிருந்தேன்!'' என்று பெட்டியைத் தூக்கிக் கொண்டு வேகமாக நடந்தான், சந்தானம்.

''நீங்கள் சொன்னது பழைய கதை, அத்தான். நான் இப்போது மாறி விட்டேன்...'' என்று அழுகையின் ஊடே வினயா கதறினாள்.

அது அவளுடைய கணவனின் காதுகளை எட்டவில்லை போலும், அவன் போயே விட்டான்.

இரண்டு தினங்கள் யுகங்களாகக் கழிந்தன.

மூன்றாவது நாள் அதிகாலையில் பக்கத்து வீட்டு அம்மாள் வினயாவை அழைத்துச் சொன்னாள்: ''வினயா, உங்களுக்குக் கொடைக்கானலில் இருந்து டெலிபோன் வந்திருக்கிறது. உடனே, வந்து பேசுங்கள்.''

வினயா திகிலுடன் ஓடினாள்!

# 13

## வலையில் சிக்கிய மான்

சந்தானம் நந்தகுமாருடன் கொடைக்கானலுக்கு சென்ற பின் இருதினங்களும் வினயாவுக்கு இரண்டு யுகங்களாகக் கழிந்தன. அதிலும் எப்படிப்பட்ட யுகங்கள், சீன முறையில் சித்திர வதை அனுபவித்த யுகங்கள்.

என்னென்ன பயங்கரக் கற்பனைகள்? சந்தானத்தை இனி பார்க்க முடியாது என்றே நினைத்து விட்டாள் வினயா. மனைவியை துறந்து மகளை மறந்து, மனம் வெறுத்து சாமியாராகப் போய்விடுவானோ என்று மனம் கலங்கினாள். பிறகு தானாகவே மனம் தேறுவாள். அவளுடைய கணவன் அறிவு கெட்டவன் அல்ல; அப்படி நடந்து கொள்ளமாட்டான்; அவன் மன உறுதி உடையவன். பொறுப்பைக் கைகழுவி விட்டு ஓடுகிற கோழை அல்ல என்று அமைதி அடைவாள்.

நாலே நாட்கள் பொறுத்துக் கொண்டால் போதும். அவன் வந்து விடுவான். நேரிலேதானே அவனிடம் பேச முடியவில்லை? நடந்ததை எல்லாம் ஒரு கடிதமாக எழுதி அவன் கையில் கொடுத்து விடுவது. அதைப் படித்து விட்டானானால் பிறகு எல்லாம் சரியாகிவிடும் என்று நம்பிக்கையோடு எண்ணுவாள்.

ஆனால், அதற்குள் வேறு குருட்டு எண்ணங்கள் தோன்றி விடும், அல்லலுற்ற பெண் மனம் ஆயிற்றே! அலைபாயத் தொடங்கி விடும். இந்த நந்தகுமார் படுபாதகனாக இருக்கிறானே அங்கே சந்தானத்தை ஏதேனும் செய்து விட்டால்? பள்ளி உல்லாசப் பயணத்தின் போது கொடைக்கானலில்



பார்த்த சாவு முனை படுபயங்கரமாக அவள் கண்முன்னே வந்து நின்றது. அதில் அவன் சந்தானத்தைத் தள்ளி விட்டால்? எண்ணும் போதே இதயம் நின்றது வினயாவுக்கு. ''அப்படியெல்லாம் நடக்காது; நடக்காது'' என்று பைத்தியக்காரி போல உரக்கவே சொல்லிக் கொள்ளுவாள். 'ஆனாலும்...' என்று அடங்காத மனம் குரல் கொடுக்கையில் வேதனையால் துவண்டாள்.

இந்த நிலையில் அடுத்த வீட்டம்மாள் கொடைக்கானலில் இருந்து ''டெலிப்போன்'' என்றதும் வினயா பயத்தால் நடுங்கி விட்டாள். செல்வியைக் கூட மறந்து ஓடினாள்.

டெலிபோனில் சந்தானத்தின் குரலைக் காது குளிரக் கேட்ட பிறகுதான் அவளுக்கு உயிர் வந்தது.

முதலில் செல்வியின் நலத்தை விசாரித்தான் சந்தானம்.

''உங்களைத் தேடுகிறாள்'' என்றாள் வினயா.

''எனக்கும் எப்போதும் அவள் நினைவுதான்'' என்றான் தகப்பன்.

'வினயாவின் கேள்வியை கவனியாதவனாக சந்தானம் தன் பேச்சைத் தொடர்ந்தான். ''அதனால் வினயா செல்வியையும் உன்னையும் இங்கே வர வழைத்துக் கொள்ள முடிவு செய்து இருக்கிறேன்.''

''அங்கேயா? நான் வரமாட்டேன்'' என்றாள் வினயா.

மீண்டும் அவள் பேசாதது போலவே பாவித்தான் அவன். ''இன்று காலை பத்து மணிக்கு அங்கே ஒரு கார் வரும். காரோட்டியிடம் நான் ஒரு கடிதம், அனுப்பியிருக்கிறேன். நீயும் குழந்தையும் அந்தக் காரில் கிளம்பி விடுங்கள். கார் வந்த உடனேயே கிளம்பி விட்டால் இரவே இங்கே வந்து சேர்ந்துவிடலாம். புரிந்ததா?'' என்று முடித்தான் சந்தானம்.

வினயாவுக்குத் தலையும் புரியவில்லை. வாலும் புரிய வில்லை. இவ்வளவு தூரம் சொல்லியிருக்கிறாள். நந்த குமாரைப் பற்றி அவனுக்கே தெரிந்து இருக்கிறது. இதற்கு மேலும் அவன் இருக்கும் அதே வீட்டிற்கு அவளை வரவழைப் பது ஏன்? பிள்ளைப் பாசம் பொறுக்க முடியவில்லை. என்றால், பெற்றவனே இங்கே வந்துவிடலாமே, அவன் காலைக் கட்டித் தடுப்பவர் யார்?

திடீரென்று இன்னொன்று தோன்றியது. சந்தானத்தை எங்கேனும் அடைத்து வைத்துவிட்டு நந்தகுமாரே இப்படிக் குரலை மாற்றிப் பேசுகிறானோ? பதட்டத்துடன், ''நீங்களே தானே பேசுகிறீர்கள்?'' என்று வினவினாள்.

சந்தானம் வரட்சியாகச் சிரித்தான். ''இரண்டு நாட்களுக் குள் என் குரல்கூட மறந்துவிட்டதா. உனக்கு'' என்று கேட்டான்.

அவனது குரலேதான். அந்த அளவில் நிம்மதி. ''எப்படி யும் நான் வரமாட்டேன். நான்தான் முன்பே சொன்னேனே, நீங்கள் வேண்டுமானால் இங்கே...''

''வினயா'' என்றான் சந்தானம், அதட்டலாக. பத்து மணிக்குள் தயாராயிரு. கார் வந்ததும் கிளம்பி வா. இது என் கட்டளை'' என்று கம்பீரமாக உத்தரவிட்டு, விட்டு டெலி போனை வைத்து விட்டான்.

'கணவன் காட்ட வேண்டிய கனிவையும் காதலையும் மறந்து விட்டார். கட்டளையிட மட்டும் வந்து விட்டாரே என்று ஆத்திரத்துடன் நினைத்தாள், வினயா.

கொடைக்கானலில் விபரீதம் காத்து இருக்கிறது என்பது மனதில் தெளிவாகப் பட்டது. அங்கே செல்வது வலியச் சென்று வலைக்குள் சிக்குவது போலத்தான் என்று நினைத்தாள். இது அவள் வீடு., பாது காப்பாக இருந்தது. அந்தப்பாதுகாப்பை விட்டு வெளியேற அவளுக்குப் பயமாக இருந்தது.



முதலைக்குத் தண்ணீரில்தான் பலம். அது போல அவரவர் இடத்தில்தான் அவரவருக்கு பலம் அதிகம். தெரிந்தும், நந்த குமாரின் இடத்திற்குச் சென்று சிக்கிக் கொள்வது மதியீனம் அல்லவா? ஆனால், சந்தானம் அந்தக் கணவன் குரலில் கட்டளையிட்ட பின் மீறவும் துணிவில்லை.

என்ன, வினயா. ஒரு மாதிரி இருக்கிறீர்களே. அங்கே அவருக்கு ஒன்றும் இல்லையே.' என்று கேட்டபடி வீட்டுக்கார அம்மாள் உள்ளே வந்தாள்.

''ம்...? ஒன்றுமில்லை.'' என்று டெலிபோனை தாங்கியில் வைத்தாள் வினயா. ''அவர் என்னையும் அங்கே வரச் சொல்லு கிறார்.

''பின்னென்ன? கிளம்புங்கள். ஜமாயுங்கள். அழகழகான இயற்கைக் காட்சிகள், ஆனந்தமாக அனுபவித்து விட்டு வாருங்கள். மறக்காமல் குறிஞ்சியாண்டவரைத் தரிசித்துவிட்டு வாருங்கள். கேட்டவரம் தருகிறவர். அவரிடம் அடுத்தது ஆண் பிள்ளை என்று கேட்டுக் கொள்ளுங்கள்'' என்று சிரித்தாள், அந்த அம்மாள்.

வினயாவுக்கு முகம் சிவந்தது; அன்பான சொல்லுக்கே வழி யைக் காணவில்லை, அடுத்த பிள்ளையாம்.

''நான் வருகிறேன், அம்மா. கிளம்ப வேண்டும்.'' என்று வீட்டை நோக்கி நடந்தாள்.

சந்தானம் சொன்னது போலவே பத்து மணிக்குக் கார் வந்துவிட்டது. அவனது கடிதத்தைக் காரோட்டி வினயாவிடம் கொடுத்தான்.

படபடக்கும் நெஞ்சுடன் தோளில் குழந்தையுடன் காரில் ஏறினாள், வினயா.

'உங்களது வார்த்தைக்காக கிளம்பியிருக்கிறேன். ஆபத்தில்லாமல் என்னைக் காப்பாற்றும் பொறுப்பு உங்களுடையது' என்று கற்பனையில் சந்தானத்துடன் பேசினாள்.

முதலில் பெட்ரோல் வாங்கிவருதாக ஓர் அரை மணி நேரம் சென்று வந்தான் காரோட்டி, பிறகு அங்கங்கே உணவுக்காகத் தாமதித்ததுதான். மற்றபடி நில்லாமல் சென்று கொடை ரோடை அடைந்து கார் சாலையை விட்டு விலகி ஒரு கிளை வழியே சென்றது. சற்று நேரத்தில் ஒரு மாடி வீட்டின் முன்னே சென்று நின்றது.

காரோட்டி, பின் பக்கக் கதவை மரியாதையாக திறந்து விட்டான். ''மலை ஏறவே இல்லையே'' என்று யோசித்தபடி வினயா அவன் முகத்தைப் பார்த்தாள்.

''இதுவும் வேண்டப்பட்டவங்க வீடுதாம்மா. கார் இனி மலை ஏறனும் பாருங்க. நிரம்ப 'ஹீட்'டாகும். அதனால் 'மெக்கானிக்'கிடம் 'செக்' பண்ணிட்டு இதோ வந்துவிடுகிறேன். அதுவரையிலும் நீங்க இங்கே தங்கி சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள். அய்யா அதுக்கு எல்லா ஏற்பாடும் செய்திருக்கிறார்,'' என்றான் அவன் பணிவாக.

''சரி'' என்று காரை விட்டு இறங்கி வீட்டினுள் சென்றாள், வினயா. ஒரு பணிப்பெண் மேலே மாடியில் உள்ள அறைக்கு வினயாவை அழைத்துச் சென்றாள்.

மடியிலும் காரிலும் மட்டுமே இருந்ததில் குழந்தை சூடாக இருந்தாள். பாலைக் கரைத்துக் கொடுத்துவிட்டு அங்கே இருந்த கட்டிலில் குழந்தையைத் தூங்க வைத்தாள் வினயா. உடலை நெட்டி முறித்துக் கொண்டு முகம் கழுவச் சென்றாள். கழுவித் துடைத்துப் பொட்டிட்டாள். கட்டிலின் அருகே இருந்த சாய்வு நாற்காலியில் ஓய்வாக அமர்ந்தாள்.

பாலையும் பழத்தையும் அவள் அருகே இருந்த மேசை மேல் வைத்தாள் பணிப்பெண்.



எதையும் உண்ண மனமில்லை, வினயாவுக்கு. பழக்கமில்லாத பயணத்தால் உடல் அயர்ந்திருந்தது. சோர்வுடன் நாற்காலியில் சாய்ந்து கொண்டாள்.

கார் செல்லும் ஓசை கேட்டது. திடுக்கிட்டு எழுந்தாள். உடனேயே காரோட்டி சொன்னது நினைவு வந்தது. பாவம்! அவனும் ஏதாவது சாப்பிட்டுவிட்டு இப்போதுதான் கிளம்புகிறான் போலும் என்று நினைத்தாள். எதற்கெடுத்தாலும் பயம் எதற்கு என்று தன்னையே கடிந்து கொண்டாள். மீண்டும் வசதியாக நாற்காலியில் சாய்ந்தாள்.

ஒரு பதினைந்து நிமிடம் கடந்திருக்கலாம். வினயாவுக்கு மீண்டும் மனதில் படபடப்பு தொடங்கி விட்டது. இன்னமும் மிஞ்சி மிஞ்சி இரண்டுமணி நேரம். பிறகு சந்தானத்தைப் பார்த்து விடலாம். அதற்குள் என்ன நேர்ந்து விடும்? ஏன் நடுங்க வேண்டும்?

எவ்வளவோ முயன்றபோதும் மனம் அமைதி அடைய மறுத்தது. தனிமையில் இருப்பதால் தானே இப்படி? அந்தப் பணி பெண்ணிடமாவது பேசிக் கொண்டு இருக்கலாம் என்று தோன்றியது. மகளைப் பார்த்தாள். செல்விக்கு அயர்ந்த உறக்கம். எதற்கும் இரண்டு பக்கங்களிலும் இரண்டு தலையணைகளை அண்டை கொடுத்தாள், வினயா. பிறகு கீழே இறங்கி வந்தாள்.

கீழே வரும்போதே வாயில்புறமாகப் பணிப் பெண்ணின் குரல் கேட்டது,

குரல் வந்த திசையை நோக்கி மெல்ல நடந்தாள்.

வாயில் கதவு சாத்தியிருந்தது. திறப்பதற்காகக் கையை நீட்டினாள்.

அதற்குள் கதவு தானாகவே திறந்தது.

திறந்த வாயிலில் நின்றவனைக் கண்டதும் வினயாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. பேயைக் கண்ணுக்கு நேராகக் கண்டு விட்டவள் போல விழித்துக் கொண்டு நின்றாள்.

அங்கே நின்றவன் நந்தகுமார்!

அவன் முகத்தில் கர்வமும் திருப்தியும்—கூடவே அவளை உடல் கூச வைக்கும் இன்னொன்றும்.

# 14

## தடை கட்டிய நாகம்

நந்தகுமாரை வாயிலில் கண்டதும் சற்று நேரம் வினயா கல்லாய்ச் சமைந்து போனாள். அச்சத்தின் பனிக்கரம் நெஞ்சைப் பற்ற, உடலும் உள்ளமும் உறைந்து போனாள். புறப் பட்டதில் இருந்து 'ஆபத்து! ஆபத்து!' என மனம் எச்சரிக்கை செய்ததே. அது சரியாகப் போயிற்றே; அகன்ற விழிகளில் பீதி யுடன் அவனை வெறித்துப் பார்த்தபடி அசையாமல் நின்றாள்.

சிலையாக நின்ற வினயாவை நந்தகுமார் ஆசைமிகப் பார்த்தான். பிறகு திரும்பி கதவை உட்புறமாகத் தாளிட்டான்.

அவன் அசையவும் வினயாவுக்கும் உணர்வு உண்டாயிற்று. அவனைத் தனியே கண்டதால் சந்தானத்துக்கு என்ன ஆயிற்றோ என்ற பழைய கிலி எழுந்தது. ''அவர் எங்கே?'' என்று ஆத்திரமாகக் கேட்டாள்.

''யார்? சந்தானமா? இதென்ன அசட்டுக் கேள்வி வினயா? இந்த நேரத்தில் நமக்கு இடையே அவன் வரலாமா?'' என் றான் கிண்டலாக.



''சீ'' என்று அவனை ஒரு சொறி நாய் போலப் பார்த்தாள் வினயா.

நந்தகுமாரின் மனம் கடுத்தது. ''அவ்வளவு அலட்சியம் ஆகாது, வினு. இப்போது நீ முழுக்க முழுக்க என் வசத்தில் இருக்கிறாய். தெரிந்து கொள். இங்கே உனக்கு ஆதரவு என்று யாருமே இல்லை'' என்று ஏளனமாகப் பேசினான்.

''பழைய கால வில்லன் போலப் பேசுகிறீர்களே! அங்கே உயிரும் உணர்வும் உள்ள ஒரு வேலைக்காரி இருக்கிறாள் தெரியுமா?'' என்றாள் வினயா பதிலுக்கு.

''அவளைத்தான் அனுப்பி விட்டேனே'' என்றான் நந்த குமார், திட்டம் போட்டு வெற்றி கண்டுவிட்ட எக்காளம் அவன் முகத்திலும் பேச்சிலும் குரலிலும் தெறித்தது.

அந்த வீடும் கொடைக்கானலில் சத்தானம் தங்கியிருந்த பங்களாவும் நந்தகுமாரின் மாமனாருக்குச் சொந்தம். அந்தப் பக்கத்தில் அங்கங்கே பல வீடுகளை வளைத்துப் போட்டிருந் தார். கோடை பங்களா ஏற்கெனவே முதல் சீசன் முடிந்ததில் இருந்து காலியாக இருந்தது. இந்த வீட்டில் வசித்தவர்களும் சமீபத்தில் வெளியூருக்கு மாற்றலாகிச் சென்றிருந்தார்கள். வீட்டில் சில சில்லறை மராமத்து வேலைகள் நடந்து கொண் டிருந்தன. எனவே இந்த வீடும் காலியாக இருந்தது. இது நந்தகுமாருக்கு மிகவும் வசதியாகப் போயிற்று.

'அலுவலக ரீதியில் வெகு முக்கியமான சிலர் வருகிறார்கள். கோடை பங்களா வேண்டும்' என்று தன் மாமாவிடம் நந்த குமார் டெலிபோனில் கேட்டான். வெளிநாடு சென்று வந்த வன். கை நிறையச் சம்பளம். அவனுக்குத் தன் பெண்ணைக் கட்டிக் கொடுத்து மாப்பிள்ளையாக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணம் அந்த மாமனுக்கு உண்டு. உடனடியாக சம்மதம் கொடுத்தார். மலை ஏறுமுன் சிரமபரிகாரம் செய்து கொள்ள கொடைரோடு வீடும் வேண்டுமா என்று தானாகவே கேட்டார்.

எதற்கும் இருக்கட்டும் என்று ''தேவைதான்'' என்றான். இப்போது அதுதான் வசதியாயிற்று.

வினயாவை வரவழைப்பதுதான் கடினம் என்று நினைத்தான், நந்தகுமார். அதுவும் வெகு எளிதாக முடிந்து விட்டது, அசட்டு சந்தானத்திடம், ''உன்னை மணந்தபின் வினயா அடங்காப் பிடாரி ஆகிவிட்டாளே!'' என்று நைசாகக் குத்தினான். இவ்வளவு அழகான இயற்கை காட்சிகளை அவள் பார்க்க வேண்டாமா? கட்டாயம் வா என்று, நீ கட்டளையிட்டால் கூடவா மதிக்கமாட்டாள்' என்று இரண்டு முறை சீண்டி விட்டான். சந்தானம் மசிந்து விட்டான்.

அப்போதுகூட நந்தகுமாருக்குச் சந்தேகம்தான். வினயா கிளம்புவாளா? இது யாரது ஏற்பாடு என்று அவளுக்கு புரியாமலா இருக்கும்?

கூலிக்கு ஒரு கார். காரோட்டி, இங்கே ஒரு பணிப்பெண் இவையெல்லாம் கடினமான வேலைகள் அல்ல. ஆனால், வினயா கிளம்ப வேண்டுமே.

வினயா கிளம்பிவிட்ட சேதியைக் காரோட்டி 'டிரங்க்கா'லில் சொன்னான். நந்தகுமாருக்கு உற்சாகம் பிய்த்துக் கொண்டு கிளம்பியது. கூடவே இருந்த சந்தானத்துக்கு அதைக் காட்டாமல் மறைத்தான்.

இனி சந்தானத்திடம் இருந்து தனியே பிரிந்து கிளம்ப வேண்டும். தன்னை மட்டும் விருந்துக்கு ஒருவர் அழைத்திருப்பதாக அழகாகக் கதை விட்டான். 'நான் இங்கேயே இருக்கிறேன், சென்று வாருங்கள்' என்று வாயில் வரை வந்து வழியனுப்பினான்.

நந்தகுமாருக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. 'அசடு' என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

கொடைக்கானலை விட்டுக் காரில் கிளம்பியதில் இருந்து நந்தகுமாரின் மனதில் நிறைந்து நின்றது வினயாதான். அதுவும் எந்த வினயா? ரோஜா வண்ணச் சேலையில் பதினெட்டு வயதின் மலர்ச்சியுடன் தாய்மையின் பூரிப்புடன் வெகு அழகாகக் கரங்குவித்து நின்ற அந்த வினயா.



செல்வியின் விழாவில் அவளைப் பார்த்ததும் நந்தகுமாருக்கு என்னவோ போலாகி விட்டது. தன் பொருளை இழந்து விட்டாற் போல, கைக்கெட்டியது வாய்க்கெட்டு முன் தவற விட்டாற் போல ஒரே ஏமாற்றத்தின் தவிப்பு. அது தீ போல உடலெங்கும் தகித்தது. 'இந்தப் பேரழகு என் சொந்தமாகி இருக்குமே, அசடனாகக் கை நழுவ விட்டேனே' என்று தன்னையே நொந்து கொண்டான்.

முதலில் தன்னையும் அறியாமல் தான் பொங்கலைப் பற்றி பேசினான். அப்போது வினயாவின் முகம் மாறிய விதம் விசித்திரமாக இருந்தது. பிறகு சந்தானத்தின் பேச்சும் அப்படித் தான் ஆயினும், அந்தநேரத்தில் நந்தகுமார் அதைப் பற்றிப் பெரிதாக நினைக்கவில்லை. வீடு வந்து சேர்ந்து விட்டான். பிறகுதான் அவனது வேதனை தொடங்கியது. இப்போது வினயா கணவனுக்கு பால் கொண்டு போவாள், அவனைப் பார்த்து அரிசிப்பல் தெரியச் சிரிப்பாள். அணைப்பாள், என்றெல்லாம் எண்ணி எண்ணித் தவித்தான்.

வினயா வேறு ஒருவனுடைய மனைவி. அவனுடைய குழந்தையின் தாய் என்பது எல்லாம் நந்தகுமாரின் எண்ணங்களைத் தடுக்கவில்லை. ஏன். அவன் பிரயாணம் சென்ற நாடுகளில் நடவாததா? அவன் பாராததா?

வினயாவை ஒரு முறையேனும் அடைய வேண்டும் என்ற எண்ணம் அவனைப் பேயாகப் பற்றிக் கொண்டது.

ஆனால் வினயா? அவள் இதற்கு உடன் படுவாளா? உடன் பட்டால் நல்லது என்ற நிலையில் அவளை வைத்து விட்டால் என்ன, அன்றைய விருந்தின்போது நடந்தது நினைவுக்கு வந்தது. கொஞ்சம் சிரமப்பட்டுச் சிந்தித்தான். வினயா தன்

பழைய கதையைக் கணவனிடம் சொல்லவில்லை என்பது தெரிந்தது. அதை பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தான்.

அவ்வாறே அடிப்படையை அமைத்தான். அனு வேறு சரியான பகடைக் காயாக உதவினாள்.

அவன் சென்ற நாடுகளில் கண்ட வளைந்து கொடுக்கும் ஒழுக்கம், இப்போது இங்கேயே 'நியூவேவ்' என்ற பெயரில் தயாரிக்கப்படும் திரைப் படங்கள், வெகு சாதாரண சுகங்களுக்காகக் கற்பை விலையாக்கும் பத்திரிகைக் கதைகள் எல்லாமாக அவனுக்கு நம்பிக்கையைத் தந்தன. தன் வாழ்வில் ஏற்படும் சில சங்கடங்களைப் போக்கிக் கொள்ள வினயா நந்தகுமாரை ஒருமுறை அணைத்தால் என்ன? இது நந்தகுமாரின் கணிப்பு.

குலமகளின் கற்பு அவ்வளவு சாதாரணமாகப் புரண்டு விடக் கூடியது அல்ல என்பதை அவன் புரிந்து கொள்ள வில்லை.

ஏன், முதலில் வினயா அவனிடம் ஏனென்று கூடக் கேட்க வில்லை. பிறகும் அவள் இணங்கிவர வில்லை. மாறாக அவள் எதிர்த்து நின்ற கோலம அவனது ஆவலை மேலும் தூண்டி விட்டது. அவள் தானாக இணங்கி வராவிட்டாலும் வலிய அவளை அடைந்து விடுவது என்று உறுதி கொண்டான். எளி தான திட்டம். வெகு எளிதாகவே நிறைவேறப் போகிறது. இன்று இரவு முழுவதும் வினயா அவனது கைப்பிடிக்குள், இரவு முடியும் போது அவள் அவனது காலடியில்.

இப்போதும் வினயா அலட்சியம் காட்டவே அவனுக்கு ஆத்திரம் உண்டாயிற்று. அடக்கிக் கொண்டான். அவளாகவே வந்தால் அந்த சுகம் எப்படி இருக்கும்?

தப்பும்வழி தேடுவது போல சுற்றிலும் மருண்டு விழித்தான், வினயா. நந்தகுமார் அவளிடம், "வினயா, நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இன்று இரவு நீ என்னவள். புரிந்து



கொண்டு புத்தியோடு நடந்து கொள்," என்றான், நயம் பாதி—மிரட்டல் பாதியாக.

இது மெய்யில்லை; பயங்கரக் கனவு என்று நினைத்தாள், வினயா. ஆனால், பேயனைப் போல அவன் எதிரே நிற்கிறானே. "பாவி" என்று கதறினாள். "நீ அழிந்து போவாய். அவருக்குத் தெரிந்தால் உன்னைக் கொன்று விடுவார்." என்று ஆத்திரமும் அழுகையுமாகப் பேசினாள்.

"தெரிந்தால்தானே? நீ இதைப் போய் அவனிடம் சொல்லுவாயா?" என்று வெகு சாதாரணமாகக் கேட்டான் நந்தகுமார்.

"நீ அழிந்துபோவாய். நிச்சயமாக நீ அழிந்தே போவாய்" என்றாள் மீண்டும். அடிபட்ட மானின் கதறலாகவே இது ஒலித்தது.

நந்தகுமார் நிதானமாக ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். ஒருதரம் புகை இழுத்தான். பிறகு கேட்டான். "ஏன் வினயா, கிட்டதட்ட ஒன்றரை ஆண்டுக்குமுன் ஒரு நாள் என் அறைக்கு வந்தாயே; அன்று நான் 'இம்' மென்று ஒரு ஜாடை காட்டியிருந்தால் நீ என்னைத் தானே மணந்து—அதுவும் மிகுந்த ஆசையுடன் மணந்திருப்பாய்? அன்று என்னை விரும்பியவள் தானே? இன்று என்ன வெறுப்பு வந்துவிட்டது?"

பேச்சுடன் கூடவே அவனது பார்வை அவளைப் பசியுடன் மேய்ந்தது. வினயாவுக்கு அருவெறுப்பும் ஆத்திரமும் தாள முடியவில்லை. "முன்னைவிட நீங்கள் பார்க்க மிகவும் அசிங்கமாகி விட்டீர்கள் போலிருக்கிறது." என்று முகத்தில் அடித்தாற்போல வெறுப்புடன் கூறினாள்.

அவன் முகம் சட்டெனக் கறுத்தது. கையில் இருந்த சிகரெட்டை வீசி எறிந்தான், சினத்துடன் அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்துவைத்தான்.

தவறாகப் பேசிவிட்டோம், அவனைச் சீண்டி விட்டு விட்டோம், என்று வினயா புரிந்து கொண்டாள். அவன் தன்ன

ருகே வருவதைக் கண்டு உடல் நடுங்கியது. ஆபத்துக் காலத்தில் நிதானம் வேண்டும் என்பதெல்லாம் மறந்தது.

''இல்லை, இல்லை. அப்படி இல்லை, என் காரணம் இது தான்,'' என்று கதறியவாறு தன் மாங்கல்யத்தை எடுத்துக் காட்டினாள்.

''அதைக் கழற்றி வீசிவிட்டு என்னிடம் வா,'' வாய் கூசாமல் சொன்னபடி அவளை நோக்கி முன்னேறினான் நந்தகுமார்.

வினயா பயத்துடன் மடமடவென்று பின் வாங்கினாள். அங்கே கிடந்த ஒரு மேசையின் பின்னே சென்று நின்று கொண்டாள். இந்த நிலையில் ஒரு மேசை தனக்குப் பாதுகாப்பு ஆகுமா என்பதெல்லாம் மூளையில் ஏறவில்லை, எங்கோயோ அவள் அவனை விட்டு விலகி ஓட வேண்டும் அவன் விரல் கூட அவள் மேனி மீது பட்டுவிடக் கூடாது. அவ்வளவுதான். அது ஒன்று தான் அவளுக்குத் தோன்றியதெல்லாம்.

நந்தகுமார் ரசனையுடன் சிரித்தபடி அவளை நோக்கி நிதானமாக முன்னேறினான். ''சும்மாவே நீ அழகி வினு. ஓடினால் அங்கங்கள் வெகு அழகாகத் தெரியும்,'' என்றான்.

''கிட்டே வராதே'' என்று கத்தினாள் வினயா. ''உதவி உதவி'' என்று குரல் கொடுக்கும் போதே இந்த வீடு எவ்வளவு தனிமையான இடம் என்பது மனதில் பட்டது. அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்.

அவன் அவளுக்கு மிக அருகில் வந்து விட்டான். இன்னமும் நகர இடம் இல்லாமல் வினயா ஒரு கணம் திகைத்தாள். மறு கணமே அருகில் கிடந்த நாற்காலியை அவன் மீது வீசினாள்.

வினயா எதிர்பார்த்தது போல நாற்காலி அவன் தலையை உடைக்கவில்லை. ஆனால் அவன் அதைப் பிடித்துக் கீழே



வைத்துவிட்டு நிமிருமுன் வினயா அம்பு போல் பாய்ந்து வாயில் கதவை எட்டி விட்டாள். இனி அவள் தாளைத் திறக்குமுன் அவனால் அவளைப் பிடிக்க முடியாது.

ஒரே ஒரு வினாடி அவனது முகத்தில் நிராசை பரவியது. உடனேயே சிரித்தான். கதவின் தாளில் அவள் கைபட்டபோது அவன் சொன்னான், ''எங்கே போகிறாய் வினயா? உன் செல்வி மாடியில் உறங்குகிறாள் போலிருக்கிறதே, அவள் இனி உனக்குத் தேவையில்லை?'' என்றபடி மாடிப்படியில் ஏறலானான்.

தடைகட்டிய நாகமாக—இடியோசை கேட்ட வேழமாக வினயா செயல் இழந்து நின்றாள்!

# 15

## கத்தி காக்குமா?

நந்தகுமாரிடம் அகப்படாமல் தப்ப வேண்டும் என்ற ஒரே எண்ணம் தான் வினயாவுக்கு இருந்தது. அந்த வேகத்தில் மாடியில் கிடந்த மகளை மறந்து போனாள். 'தப்பிவிட்டோம்' என்று ஒரு வினாடி மகிழ்ந்தாள். இப்போது திகைத்துவிட்டாள். செல்வி? செல்வியை எப்படி....அதற்கு மேல் வினயாவால் முடியவில்லை. செயல் இழந்து நின்றாள்.

வினயா தயங்கி நிற்பதை நந்தகுமார் குரூர திருப்தியுடன் கண்டான். தன் போக்கில் சொல்லுவது போல உரக்கக் கூறினான். 'ஏதோ' வினயாவின் உடல் கிடைக்கா விட்டாலும் செல்வியின் உயிரை எடுத்தாவது திருப்திப் படலாம்,''

வினயாவுக்கு அடி வயிற்றில் நெருப்பு மூண்டது. தாளின் மீது இருந்த கை தானாக நழுவி விழுந்தது. மாடி ஏறிச் சென்ற

நந்தகுமாரை வெறித்துப் பார்த்தாள். இந்த மிருகத்திடம் ஒரு காலத்தில் அவள் மனது லயித்திருக்கக் கூடுமா? ஊகும்.

நந்தகுமார் மாடி அறைக்குள் சென்று செல்வியைத் தூக்கிக் கொண்டு திரும்பி வந்தான்.

அயர்ந்த தூக்கத்தில் இருந்து விழித்த குழந்தை மருள விழித்தவாறு சிணுங்கியது.

கீழே பெற்ற வயிறு ஒன்று துடித்தது.

நந்தகுமாருக்கோ நிலைமை வெகு ஆனந்தமாக இருந்தது. செல்வியுடன் மாடிப்படியின் கைப்பிடிச் சுவர்மீது அமர்ந்தான்.

"இங்கிருந்து வீசினால் குழந்தை பிழைக்குமா வினயா?" என்று வினயாவிடம் எக்காளமாகக் கேட்டான். தொடர்ந்து "ஒரு வேளை மண்டை உடையாவிட்டால் பிழைக்கலாம். ஆனால் எப்படியும் கை கால் ஏதேனும் நிச்சயமாகப் போய் விடும்" என்று தானே பதிலும் கூறிக் கொண்டான்.

வினயாவுக்குக் கரகரவென்று கண்களில் நீர் பொங்கி வழிந்தது. ஓடி வந்து அவனுக்குக் கீழே நின்று கையேந்தினாள். "வேண்டாம். நந்தகுமார் வேண்டாம். செல்வியை ஒன்றும் செய்யாதீர்கள்" என்று பரிதாபமாக யாசித்தாள்,

நந்தகுமார் சிரித்துக் கொண்டே அந்தரத்தில் ஊசலாட்டினான். "இங்கிருந்து எதிர்ச் சுவரில் வீசியடித்தால்....நிச்சயமாகக் குழந்தையின் தலை பிளந்து விடும்...." என்று கண்கள் பளபளக்கக் கூறலானான்.

வினயா சகிக்க முடியாமல் காதுகளைப் பொத்திக் கொண்டாள். "வேண்டாம் நந்தகுமார், வேண்டாம்...அய்யோ அம்மா...." என்று விம்மினாள்.



"சுவரின் பச்சை நிறத்துக்கும் இரத்தத்தின் சிவப்பு நிறத்துக்கும்..."

"அய்யோ நிறுத்துங்கள்" வினயா வீரிட்டாள். "நந்தகுமார், ஒரு காலத்தில் உங்கள் மேல் வைத்த அன்பின் பேரால் கேட்கிறேன். என் குழந்தையைத் தந்துவிடுங்கள்" என்று கண்ணீரோடு கெஞ்சினாள்.

"அது உன் கையிலேதான் இருக்கிறது" என்றான் நந்தகுமார், திருப்தியோடு. உடனே தொனியை மாற்றினான். "வினயா, நான் பத்து வரை எண்ணப் போகிறேன். அதற்குள் நீ படியேறி வந்து அந்தப் படுக்கை அறைக்குள் செல்லவேண்டும். அல்லது நான் என்ன செய்வேன்...பாவம் உன் செல்வியின் ஆயுசு அவ்வளவுதான்" என்று போலியாகப் பரிதாபம் காட்டினான். தொடர்ந்து எண்ணவும் தொடங்கி விட்டான். "ஒன்று...இரண்டு..."

"நந்தகுமார்..." என்றாள் வினயா இறைஞ்சுதலாக.

"ஐந்து...ஆறு" இரக்கமற்ற நந்தகுமார் தொடர்ந்து எண்ணினான்.

வினயாவுக்கு ஒரு கணம் கும்மென்று கண் மங்கியது. குப்பெனக் காதை அடைத்தது. உடனேயே "எட்டு..." நந்தகுமாரது குரல் கேட்டது.

சட்டென—எப்படியோ தெரியவில்லை...கடவுளாகத் தோற்றுவித்த மாதிரி...ஒரு கத்தி அவள் மனக்கண் முன் தெரிந்தது. மாடியில் பழத் தட்டில் இருந்த கத்தி கூரானது தான்.

வலிவிழந்து தொய்ந்த கால்கள் சட்டென பலம் பெற்றன. 'இப்போது குழந்தையைக் காப்பாற்றி விட்டால் பிறகு அந்தக் கத்தி என் மானத்தைக் காக்கும்!'

இயந்திரமாகப் படியேறினாள்.

படிகள் முடிந்ததும் குழந்தையின் அருகில் சற்றுத் தயங்கினாள்.

''அறைக்குள்ளே...'' என்றான் நந்தகுமார் வெற்றிக் களிப்புடன்.

அவனுக்கு முதுகு காட்டியபடி வினயா உள்ளே சென்றாள். நேரே பழத்தட்டு இருந்த மேசையை அடைந்தாள். கத்தியின் பிடியை இறுகப் பிடித்தது வலதுகை.

காதுகள் கூர்மையுடன் நந்தகுமாரது ஆசையைக் கவனித்தன.

நந்தகுமார் உள்ளே வந்தான்.

முதலில் அவள் அருகே வரவில்லை. சற்றுத் தள்ளி இருந்த...முன்பு வினயா அமர்ந்திருந்த...சாய்வு நாற்காலியிடம் சென்றான்.

செல்வியை அவன் அந்த நாற்காலியில் விடுவது வினயாவுக்கு ஓரக் கண்ணில் தெரிந்தது,

பிறகு லேசாக சிரித்தபடி வினயாவை நெருங்கிவந்தான். ''வின்'' என்றான் கொஞ்சலாக.

சரேலெனத் திரும்பினாள் வினயா.

திரும்பிய வேகத்திலேயே செல்விக்கும் நந்தகுமாருக்கும் இடையே சென்று விட்டாள்.

வினயாவின் கையில் கத்தியைக் கண்டதும் நந்தகுமார் திகைத்தான். இதை அவன் எதிர் பார்க்கவில்லை.



வினயாவுக்கு இந்தக் கத்தியைப் பயன்படுத்தும் துணிவு இருக்குமா?

வினயாவின் கண்களைப் பார்த்ததும் அவனது சந்தேகம் மறைந்தது.

அளவுமீறி வளைக்கப்பட்டவில் திருப்பியடிப்பது போல வினயா எதற்கும்—கொலைக்கும் துணிந்தவளாக நின்றாள்.

எதற்கும் பார்க்கலாம் என்று ஓர் எட்டு முன்னே எடுத்து வைத்தான், நந்தகுமார்.

''கிட்டவந்தால் கொன்றுவிடுவேன்'' என்று உறுதியாக எச்சரித்தாள் வினயா.

நந்தகுமார் சற்று சிந்தித்தான்.

மேசைமேல் தட்டில் இருந்த பழங்களில் ஒன்றை எடுத்தான். கத்தி மீது குறிபார்த்து எறிந்தான். வினயாவும் கவனத்துடன் நிற்கவே குறி தவறியது.

அடுத்த பழத்தை சட்டென இலக்கு மாற்றிச் செல்வி மீது வீசினான் குறி தவறாமல் பழம் குழந்தையின் தலையில் அடித்தது.

வலியால் வீறிட்டு அழுதபடி எழுந்த செல்வி, நாற்காலியில் இருந்து விழுந்தாள்.

நிலைமையை மறந்து குழந்தையை எடுக்க அவசரமாகக் குனிந்தாள், வினயா.

அந்த ஒருவினாடி போதுமே. நந்தகுமார் பாய்ந்துவந்து வினயாவின் கத்தியை பறித்தான். சன்னல் வழியே வீசி எறிந்தான். ''என்னிடமா உன் ஜாலம்'' என்று அவளது ஒரு கையைப் பற்றி இழுத்தான்.

"சீ" என்று அவள் உதறும்போதே திடீர் என்று அவனது பிடி தளர்ந்தது. வினயா அதை கவனியாமல் குழந்தையைத் தூக்கினாள்.

"சந்தானம்!" என்ற திகைப்பும் அச்சமுமாக நந்தகுமாரது குரல் கேட்டது.

சரேலென நிமிர்ந்தாள். பார்த்தால் அங்கே சந்தானம் நின்றான்.

"சந்தானமா?" என்று திகைத்து முகம் வெளுத்தான் நந்த குமார்.

"ஆமாம், சந்தானமேதான். உனக்கு விருந்து தரப்போகும் நண்பன்," என்று அவன் முகத்தில் ஓங்கி குத்தினான், சந்தானம்.

நந்தகுமார் கன்னத்தைப் பிடித்தபடி தடுமாறி விழுந்து எழுந்து நின்றான்.

இடதுசாரி வலதுசாரி என்று சரமாரியாக அடியும் குத்தும் உதையுமாக அவனை நொருக்கினான் சந்தானம்.

தன் கணவனது உறுதியான உடல் கட்டில் வினயாவுக்கு எப்போதும் பெருமை உண்டு, கிட்டத் தட்ட அவன் அளவே உள்ள' நந்தகுமார், சந்தானத்திடம் படும்பாட்டைப் பார்த்து அவளுக்குப் பெருமிதத்தால் நெஞ்சு விம்மியது.

சந்தானத்துக்கு உடலில் மட்டுமின்றி உள்ளத்திலும் வலு இருந்தது. நியாயத்தின் பக்கம் இருக்கிறோம் என்ற தைரியம் இருந்தது. அவன் கை ஓங்கியது. ஆனால் நந்தகுமாரது விஷயம் வேறு. தன் போக்கில் தன் ஆசைக்குச் சரியாக அவன் ஆயிரம் சமாதானங்கள் கூறிக் கொண்டிருக்கலாம். ஆனால், அவனும் இந்த இந்திய மண்ணில் ஒரு தாய்க்கு மகனாக—ஒரு தங்கையோடு பிறந்தவன் தானே? தப்பு வழி சென்றோம் என்ற



எண்ணம் வேறு அவனைத் தடுமாற வைத்தது. உடல் அலுக்காமல் ஆள் பாதி ஆடை பாதியாக சொகுசாக வாழ்ந்தது வேறு சந்தானத்திடம் நன்றாக வாங்கிக் கொண்டான்.

கடைசியாக அடிதாங்க முடியாமல் "விட்டு விடுங்கள்" என்று கதறலானான்.

நார் நாராகிவிட்ட சட்டையின் காலரைப் பற்றி அவனைத் தூக்கி நிறுத்தினான் சந்தானம், "இனி மேல்..." என்று வினயா பக்கமாகத் தலையசைத்துக் காட்டினான்.

"இல்லை இல்லை உங்கள் மனைவியை இனி மனதாலும் நினைக்க மாட்டேன்" என்று நடுங்கினான், நந்தகுமார். உயிருள்ள வரையில் இந்த உடல் வேதனை மறக்குமா?

"உம்" என்று அவனைத் தூரத் தள்ளினான். சந்தானம். "ஆனாலும் உன்னைச் சும்மா விடுவதும் தவறு..." என்று அங்குமிங்கும் பார்த்தான். மேசை விரிப்பை எடுத்தான் 'டவல்' போல நீளமாக மடித்தான். அதைக் கொண்டு நந்தகுமாரின் கைகளைக் கட்டினான். வெளியே தள்ளிக் கொண்டு வந்து அங்கே ஒரு நாற்காலியில் உட்கார வைத்தான். நாற்காலியின் கைப்பிடியோடு சேர்த்து மேலும் கட்டினான்.

"லேசாகத்தான் கட்டியிருக்கிறேன். சற்று முயன்றால் நீங்களே கட்டவிழ்த்துக் கொண்டு விடலாம். ஆனால், நாங்கள் செல்லும்வரை சகித்துக்கொண்டு பொறுமையாக இருக்க வேண்டும்" என்றான்.

பின் மீண்டும் அறைக்குள் வந்தான். பிறகுதான் வினயாவை முழுப் பார்வையாகப் பார்த்தான். கண்களில் இருந்த கடுமை, சீற்றம் எல்லாம் மெல்ல மறைந்தன. இதழ்கள் லேசாக மலர்ந்தன.

பெரும் கேவலுடன் அவன் தோளில் சாய்ந்தாள் வினயா.

காட்டாற்று வெள்ளம் போல விம்மலும் விக்கலுமாகப் பொங்கிப் பொருமி அழலானாள்.

ஒருமுறை அவளுடைய முதுகை மெல்ல வருடினான், சந்தானம். பிறகு, ''உஸ்ஸ்...போதும் வினி. இப்படி அழக் கூடாது. செல்வி பயப்படுகிறாள் பார்'' என்றான் லேசான கண்டிப்புடன்.

மெல்ல வினயாவிடமிருந்து மகளைத் தூக்கிக் கொண்டான். ''முகம் கழுவிவிட்டு வா. இங்கிருந்து சீக்கிரமாகப் போய்விட வேண்டும். பிறகு மற்றது பேசலாம்'' என்று வினயாவை அனுப்பினான்.

வினயா வந்ததும், இருவருமாக வெளியே வந்தார்கள். நந்தகுமாரைப் பார்த்தான். அவன் குனிந்த தலையுடன், அவமானத்துடன், கூடவே சந்தானத்திடம் பயத்துடன் அசையாமல் இருந்தான்.

அவனை அழைத்தான் சந்தானம். ''மிஸ்டர் நந்தகுமார், இனியும்கூட நீங்கள் எங்களது இல்லத்துக்கு வரலாம். ஆனால், தனியாக அல்ல. உங்களது தங்கையோடோ அல்லது மணமானபின் மனைவியோடோ வாருங்கள்'' என்றான். 'அது வரை வராதே' என்ற எச்சரிக்கை மறைமுகமாகத் தெரிந்தது.

வினயாவின் தோளை லேசாக அணைத்தபடி கிளம்பி விட்டான்.

பெரிய ஆபத்திலிருந்து தப்பி விட்ட போதும், வினயாவுக்கு மனதில் மகிழ்ச்சி பிறந்து விடவில்லை. தனது அவமானக் கதையைச் சந்தானத்திடம் கூற வேண்டுமே.

# 16

## பிரிந்தவர் கூடினர்!

சந்தானமும் முன்னேற்பாடாக ஒரு காரை வெளியே சற்று தூரத்தில் நிறுத்தி வைத்திருந்தான். அதில் ஏறிக் கொண்டு ஓர் ஓட்டலை அடைந்தார்கள். அங்கேயே அன்று தங்கினார்கள்.



வினயா மகளை உறங்க வைக்கும் வரையில் ஒரு சிகரெட்டைப் புகைத்தபடி சந்தானம் பால்கனியில் நின்றான்.

பிறகு உள்ளே வந்தான் ''வினி'' என்ற அழைப்புடன் கைகளை விரித்தான்.

வினயா சற்றுத் தயங்கினாள், ''நான் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்...''

விரித்த கரங்களை மடக்காமல், ''இங்கு வந்து சொல்,'' என்றான் அவளுடைய கணவன்.

வினயாவுக்கு இன்னமும் தயக்கம்தான். அவனது அணைப்பை அனுபவித்து விடலாம். பிறகு அவள் ஏதேதோ சொல்லப் போகிறாளே. அதைக் கேட்டு அவன் விலகி நின்றால் அவளால் தாங்க முடியாது.

ஆனால், சந்தானம் விடவில்லை. ''நீ வராவிட்டால் நான் வருகிறேன்'' என்று இரண்டு எட்டில் அவளை அணுகினான்.

வலிய கரங்களால் அவளை இறுக தழுவினான்.

மயங்கினாள்; மகிழ்ந்தாள்.

அன்போடு அவள் தன் தலையை விரிந்த தன் தோளில் சாய்த்து அணைத்துக் கொண்டு, ''இப்போது சொல்'' என்றான்.

கணவனது அணைப்பில் நெகிழ்ந்து நின்ற வினயாவுக்கு இப்போது அவமானத்தால் முகம் சிவந்தது. பேச்சு வராமல் மென்று விழுங்கினாள்.

அவளுடைய தோளைத் தட்டி ''கஷ்டமாயிருந்தால் சொல்ல வேண்டாம் வினி'' என்றான் சந்தானம் கனிவோடு.

''இல்லை. இல்லை. சொல்லி விடுகிறேன்'' என்று அவசர மாகச் சொன்னாள், வினயா. இதுவரை சொல்லாமல் விட்ட தால் வந்த வினை எத்தனையோ. முதலும் கடைசியுமா எல்லா வற்றையும் இன்றே கூறிவிட வேண்டும் என்று நினைத்தாள்.

அவன் அவளை அருகிலிருந்த சோபாவுக்கு நடத்திச் சென் றான். அதில் அவளை அமர வைத்து தானும் அருகில் உட் கார்ந்தான். ஒரு கையால் அவளுடைய தோளை சுற்றி அணைத்துக் கொண்டு ''உம்'' என்றான்,

அவள் தொடங்கினாள். ''பள்ளிப் படிப்பில் இருந்தே நாங்கள் ஐந்துபேர் இணை பிரியாத தோழிகள். பஞ்ச பாண்ட விகள். என்று கூட எங்களை கேலி செய்வார்கள். எங்களுக்குள் வாணியின் அண்ணன்—அவர்தான் நந்தகுமார்—ஒரு ஹீரோ. கார் ஓட்டுவார்; கிதார் வாசிப்பார்; மிகவும் டீக்காக உடை அணிவார்.

''புதுமுக வகுப்பில் படிக்கும்போது நாங்கள் ஐவருமாகக் கல்லணைக்குப் பிக்னிக் கிளம்பினோம். எங்களுடன் வந்த ரீடா வின் அன்னை கல்லூரி ஆசிரியை, அவரும் உடன் வந்ததால் யாருடைய பெற்றோரும் எங்களைத் தடுக்கவில்லை.

''பஸ்ஸில் செல்வதாக ஏற்பாடு. நாங்கள் பஸ்ஸில் ஏறி விட்டோம். வாணி மட்டும் பிந்தி விட்டாள். ஆனால், அவளது குடும்பம் வசதி உள்ளது, கார்களே இரண்டு உண்டு. இவள் பெற்றோரிடம் அழுதுவிட்டாளாம். உடனே அவளுடைய அண்ணனோடு காரில் அவளை அனுப்பி விட்டார்கள், வாணி யின் பெற்றோர்.

கல்லணையில் ஐவரும் சேர்ந்து கொண்டோம்.

நாங்கள் பேசிக் கொண்டே நடந்தபோது, கலங்கு தட்டி நீரில் நான் வழுக்கி விட்டேன். கூடவே வந்து கொண்டு இருந்த நந்தகுமார், சட்டென என் கையைப்பிடித்துக் கரை சேர்த்தார்.



உடனே எங்கள் மனதில்...என் மதிப்பில் அவர் பல படிகள் உயர்ந்து விட்டார். எல்லாரும் போட்டி போட்டுக் கொண்டு அவருக்கு உபசாரம் செய்தோம். அன்று பரிமாறிய போதுதான் 'பொங்கல் பிடிக்காது' என்றார். இதுதான் நடந்தது. மற்றபடி நாங்கள் தனியே எங்கும் சென்றது இல்லை....''

வினயா ஒருகணம் பேச்சை நிறுத்தினாள்.

வருத்தத்தைக் காட்டும் ஒரு சிறு புன்னகையுடன் அவளு டைய தோளை லேசாக அழுத்தி விட்டான், சந்தானம்.

வினயா மேலும் தொடர்ந்தாள்.

''நாங்கள் ஐவருமே ஒருவர் மற்றொருவர்வீட்டுக்கு அடிக் கடிசெல்வது வழக்கம். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகும் நான் வாணி யின் வீட்டுக்கு வழக்கம் போலச் சென்றேன். ஆனால் அங்கே கூட நாங்கள் இருவரும் தனிமையில் சந்தித்தது இல்லை. ''பாபு'' படம் பற்றிச் சொன்னாரே. அதுகூட நானும் வாணியு மாகச் சென்றதுதான். எனக்குத் துணை தம்பி. அவளுக்குத் துணை நந்தகுமார். அவ்வளவுதான்.

'ஆனால், வாணியின் வீட்டில் அவர் ஜாடை மாடையாகப் பேசுவார். சிரிப்பாக. கிண்டலாக ஏதாவது சொல்லுவார். அவர் என்னை விரும்புவதாக நான் நினைத்தேன். ஆற்று வெள்ளத்தில் இருந்து என்னைக் காப்பாற்றியவர் என்ற முறை யில் எனக்கும் அவர் மீது மதிப்பு இருந்தது. ஆனால் சும்மா பொழுது போவதற்காக சிறுபிள்ளை விளையாட்டு விளையாடி னார் என்று எனக்கு அப்போது தெரியாது.

''அவர் வெளிநாடு செல்லப் போவதாக இருந்தது. அதே நேரம் என் அம்மாவின் உடல் நிலை மிகவும் கெட்டு விட்டது. எனக்குத் திருமணம் பேசினார்கள். இந்த விவரத்தை நந்த குமாரிடம் சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால், நான் ஏமாற்றி விட்டதாக அவர் நினைப்பார் என்று எண்ணினேன்.

ஒருநாள்...வாணி இல்லாத நேரம் பார்த்து...நான் அவளது வீட்டுக்குப் போனேன். அங்கே...

இவ்வளவு நேரம் தடையின்றிப் பேசியவள் இப்போது தடுமாற்றத்துடன் இரத்தமெனச் சிவந்தாள்.

சந்தானம் மெல்ல அவளுடைய வாயைப் பொத்தினான். 'வேண்டாம் வினி. விட்டுவிடு. போதும்,'' என்றான் பரிவுடன்.

வினயா தலையை அசைத்தாள். அவன் கரத்தை விலக்கி விட்டுத் தொடர்ந்தாள்,

''வாணியின் வீட்டில் நந்தகுமாரின் அறைக்கே நான் சென்றேன். அவரிடம் ''அம்மாவின் உடல் நிலைக்காக எனக்கு உடனே திருமணம் செய்ய முயற்சி செய்கிறார்கள் என்று தெரிவித்தேன். அவர் முதலில் ஒன்றும் சொல்வில்லை. பிறகு...நான் வெளிநாட்டிலிருந்து திரும்பி வரும்போது கையில் குழந்தையுடன் இருப்பாய். அதனால் இப்போதே இரட்டை வாழ்த்துக்கள்'' என்று சிரித்தார். தன் வெளிநாட்டுப் பயணத்துக்கு இடையூறு நேர்ந்துவிடக் கூடாது என்று நினைத்தார் போலும். ஆனால், எனக்கு ஏனோ பெருத்த ஏமாற்றமாக, இருந்தது. மேலே ஒரு வார்த்தைகூடப் பேசாமல் பேச இயலாமல் திரும்பி வந்தேன்.

''திருமண ஏற்பாடுகள் நடந்தன. நீங்கள் அன்று சொன்னது மெய்தான். அம்மாவை எண்ணியே உங்களை மணந்தேன். பிறகும், எனக்கு ஏற்பட்ட—ஏமாற்றத்தால், உங்களுடன் மனம் ஒன்ற முடியவில்லை. உங்கள் அன்பை ஏற்க தயங்கினேன். ஆண்கள் நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்ல என்று நினைத்தேன்.

''பிறகு நம் செல்வி பிறந்தாள். என்னுள் ஏதோ ஒரு மாறுதல். ஏதோ வெளிச்சத்தைக் கண்டமாதிரி ஆனந்தம் மலர்ந்தது. பிறகு செல்வியின் விழா வந்தது. நந்தகுமாரும் துன்



பமும் இணைந்து வந்தன, உங்களிடம் அன்றே சொல்ல முயன்றேன். நீங்கள் இடம் கொடுக்கவில்லை. பிறகும் அவர் அடிக்கடி வந்தார். வீட்டில் குழப்பம் விளைவித்தார். முதலில் ஏன் என்று தெரியவில்லை. தெரிந்தபின் என்ன செய்வது என்று புரியவில்லை. உங்களிடமோ நெருங்கவும் முடியவில்லை. கடைசியில்...கடைசியில் நான் எவ்வளவோ மறுத்தும் என்னை இங்கே வரச்சொன்னீர்கள்.....'' என்று குழப்பத்துடன் கணவனை பார்த்தாள்.

''உம், இனி என் முறையாக்கும்!'' என்று அவன் விளையாட்டாக முகத்தைச் சுளித்தான். பிறகு வினயாவின் சிவந்த முகத்தைக் கண்டதும் விஷயத்துக்கு வந்தான்.

''எல்லாம் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டதால் உண்டான வினை'' என்றான்.

''புரியவில்லை அல்லவா? சொல்லுகிறேன். நீ நந்தகுமாரை நேசித்தாய் என்பது எனக்குப் புரிந்தது. அவனது பேச்சில் உண்மை இருந்ததும் தெரிந்தது. அது அரை உண்மை என்பது இப்போது தெரிகிறது. அப்போது 'அதுதான் முழு உண்மை நீ அதை மறைக்க முயல்கிறாய்' என்று எண்ணி விட்டேன். அவரைக் கண்டதும் பழைய காதல் உன்னிடம் உயிர்த்து விட்டது; அதனால் அவர் அனுவிடம் பேசுவது கண்டு பொறாமைப்படுகிறாய் என்று நினைத்தேன். அவர் அனுவிடம் அணுகிய முறையும் எனக்குப் பிடிக்கவில்லை. உன்னிடம் நெருங்கிய வகையும் பிடிக்கவில்லை.''

''பின்னே ஏன் அவரை வீட்டுக்குள் வரவிட்டீர்கள்? இங்கே வராதே என்று தடுப்பது தானே?'' என்று வினயா குறுக்கிட்டாள்.

''உன்னால்தான்'' என்றான் சந்தானம். ''வினு, நீயும் சின்னப்பெண். அனுவைவிட இரண்டே வயது பெரியவள். மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் நந்தகுமாரைத் திருட்டு

தனமாகச் சந்திக்கத் தொடங்கி விட்டால் என்ன செய்வது? அது கேவலம் மட்டும் அல்ல. இன்னும் பல தவறுகளுக்கு படிவாயில் ஆகிவிடும், அதனால் அவரது வரவை சகித்துக்கொண்டு அனுவுககு காவல் இருந்தேன். பிறகு அந்த மகாபலிபுரம்...''

வினயாவுக்கு உடல் சிலிர்த்தது. அன்று நடந்ததைக் கூறினாள்-

சந்தானம் தொடர்ந்தான். ''அன்று நீ பொய் சொல்லி விட்டுக் கிளம்பியது புரிந்தது. பின்னாலேயே 'டாக்சி' யில் வந்து தெரிந்து கொண்டேன், வினி. அன்று எனக்கு மிகவும் மனம் விட்டுப் போயிற்று. உன்னால் மனதை அடக்க முடியவில்லையே என்று வருந்தினேன். கூடவே நீ சொன்ன கமலா கதை நினைவு வந்தது. அதை வாங்கிப் படித்துப் பார்த்தேன். அதில் வருவது போல் நான் விலகிவிட முடிவு செய்தேன்''

''என்ன உளறுகிறீர்கள்?'' என்று வினயா கோபமாகக் கேட்டாள்.

''இப்போது உளறலாகத்தான் தெரிகிறது. அன்று வேறு விதம். லைலா...மஜ்னு கதைபோல ஆகிவிட்டீர்கள் என்று குமுறினேன். பிறகு நம் வீட்டிலேயே நீங்கள் தனிமையில் சந்திக்க வழி செய்தேன்.''

''சித்திரவதைதான்'' என்று முணுமுணுத்தாள் வினயா.

''எனக்கும்தான்'' என்றான் சந்தானம். ''பிறகு நந்தகுமார் கொடைக்கானலுக்கு அழைத்தார். நீ மறுத்தாய், அவரைக் குறை கூறினாய். இன்னமும் நம்மிடம் நாடகம் ஆடுகிறாளே என்று வேதனைப் பட்டேன். பெட்டியோடு கிளம்பும் போது நீ சொன்னது அரை குறையாகக் காதில் விழுந்தது, அதற்குப் பிறகுதான் சற்றுச் சரியான பாதையில் சிந்திக்கத் தொடங்கினேன். நீ சொன்னது எல்லாம்உண்மை என்றால்....? ஆயினும் அதை உண்மை என்று நிரூபிக்க எனக்கு ஓர் அத்தாட்சி ஆதாரம் வேண்டும்.



''நந்தகுமார் உன்னை இங்கே கிளப்பி வர ஏதேதோ பேசினான். ஏதோ திட்டம் என்று புரிந்து கொண்டேன். உன்னை வரச் சொன்னேன். அன்று இரவு வேறு இடத்தில் ஏதோ விருந்து என்றார். அவரது விஷயம் எனக்கு விளங்கி விட்டது. அவர் அறியாமல் ஒரு டாக்சியில் பின் தொடர்ந்தேன். நான் இங்கு வருமுன் கதவைத் தாளிட்டு விட்டார். எல்லாம் நன்றாகக் கேட்டது. என் மனைவி பத்தரைமாற்றுத் தங்கம் என்று மகிழ்ச்சியோடு தெரிந்து கொண்டேன். உடனே உதவிக்கு வந்தேன்' என்று முடித்தான், அவன்.

''கதவு தாளிட்டு இருந்ததே. எப்படி வந்தீர்கள்?'' என்று யோசனையோடு வினவினாள் வினயா!

''வெளியே மழை நீர்க் குழாயைப் பிடித்து ஏறி வந்தேன். யாராவது பார்த்தால் திருடன் என்று மொத்தியிருப்பான்.'' என்று சிரித்தான் சந்தானம்.

வினயாவின் முகத்தில் முத்தான புன்னகை அரும்பியது.

''நீ முதலிலேயே எல்லாம் சொல்லியிருந்தால் இப்படி ஆகுமா?'' என்று அவளை லேசாகக் கடிந்தான், சந்தானம்.

''முதலில் பழையக் குப்பையைக் கிளறுவானேன் என்று நினைத்தேன். பிறகு சொல்ல வந்தால் நீங்கள் தீப்பொறியாக எரிந்தீர்கள்.'' என்றாள் அவள்,

''பின்னே? 'நம் திருமணத்துக்கு முன்பே நீ வேறு ஒருவனை நேசித்தாயா? ஆகா என்ன அற்புதம்!' என்று பாராட்ட வேண்டுமோ?'' என்று சந்தானம் வெடுக்கெனக் கேட்டு விட்டான்.

வினயாவின் முகம், அப்படியே வாடிக் கூம்பிவிட்டது. அவள் முகத்தைப் பார்த்ததும் அவனுக்கும் என்னமோ போலாகி விட்டது, ''சரிசரி. அதெல்லாம் பழைய கதை.

இனி முழுக்க மறந்து விடவேண்டும். இனித் தொடங்குவது புதிய வாழ்வு. எந்நேரமும் சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும், எங்கே சிரி...மாட்டாயா? பிறகு நானும் அழுகுணி ஆகி விடுவேன்,'' என்று அழுவதுபோல பாவனை செய்தான். அவள் சிரித்தாள். அவனும் சிரித்தான்!